விஞ்ஞான சோஷலிச நூலகம்

# லெனின்

## தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

-5 MAR 1985

CENTURY BOOK HOUSE
Rs. 1-50

விஞ்ஞான சோஷலிச நூலகம்

வி. இ. லெனின்

# தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமை

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

## வெளியீட்டோர் குறிப்பு

வி. இ. லெனினது ''தேசீய இனங்களின் சுய நிர்ணய உரிமை'' என்னும் நூலின் இந்த மொழி பெயர்ப்பு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் கீழுள்ள மார்க்ஸீய-லெனி னீயக் கல்லூரியால் தயாரிக்கப்பட்ட வி. இ. லெனின் நூல் திரட்டின் 5ம் பதிப்பின் 25ம் தொகுதிப்படி செய்யப்பட்டுள்ளது.

**В. И. ЛЕНИН**

О ПРАВЕ НАЦИЙ НА САМООПРЕДЕЛЕНИЕ

*На тамильском языке*

**சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது**

Л $\frac{10102-372}{014(01)-82}$ 683–82 0101020000

MADRAS

## பொருளடக்கம்


1. தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்றால் என்ன? . 8
2. வரலாற்றுரீதியாக ஸ்தூல வடிவில் இப்பிரச்சினையை எடுத்துரைத்தல் . . . . . . . . . . . . . . . . . . 16
3. ருஷ்யாவில் தேசியப் பிரச்சினையின் ஸ்தூல அம்சங்களும், ருஷ்யாவின் பூர்ஷ்வா-ஜனநாயகச் சீரமைப்பும் . . . 21
4. தேசியப் பிரச்சினையில் ''செயல்பூர்வவாதம்'' . . . . 29
5. தேசியப் பிரச்சினைபற்றி மிதவாத பூர்ஷ்வாக்களும் சோஷலிஸ்ட் சந்தர்ப்பவாதிகளும் . . . . . . . . . . . 38
6. ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிதல் . . . . . . . . . 55
7. 1896ம் ஆண்டு லண்டன் சர்வதேசக் காங்கிரஸின் தீர்மானம் . . . . . . . . . . . . . . . . . . . . 64
8. கற்பனைவாதி கார்ல் மார்க்ஸும், காரியவாதி ரோஸா லுக்ஸம்பர்கும் . . . . . . . . . . . . . . . 71
9. 1903ம் ஆண்டுச் செயல்திட்டமும் அதன் கலைப்புவாதிகளும் . . . . . . . . . . . . . . . . . . . . 83
10. முடிவுரை . . . . . . . . . . . . . . . . . . 97
குறிப்புகள் . . . . . . . . . . . . . . . . . . 105
பெயர்க் குறிப்பு அகராதி . . . . . . . . . . . . . 119

ருஷ்ய மார்க்ஸீயவாதிகளின் செயல்திட்டத்தில் தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறும் 9வது பாரா சமீபத்தில் சந்தர்ப்பவாதிகள் ஒரு பெரும் போரைத் துவக்கச் செய்துள்ளது. (இதை நாம் ஏற்கெனவே ''ப்ரோஸ்வெஷ் சேனியேவில்''[1] குறிப்பிட்டிருக்கிறோம்.)* ருஷ்யக் கலைப்பு வாதியாகிய[2] ஸெம்கோவ்ஸ்க்கிய் செயின்ட் பீட்டர்ஸ்பார்க் கலைப்புவாதச் செய்தித்தாளிலும், பூந்த்காரர்[3] லீப்மனும் உக்ரேனியத் தேசீயவாத - சோஷலிஸ்ட் யுர்க்கேவிச்சும் தங்களது பத்திரிகைகளிலும் இந்தப் பாராவைக் கடுமையாகத் தாக்கி, அதன்பால் பெருத்த வெறுப்பைக் கக்கியுள்ளனர். நமது மார்க்ஸீயச் செயல்திட்டத்துக்கு எதிராகச் சந்தர்ப்ப வாதிகளின் இந்தக் ''கதம்பத் திருக்கூட்டம் நடத்தும் இயக்கமானது'' இன்றைய தேசீயவாத ஊசலாட்டங்கள் அனைத்துடனும் நெருங்கிய தொடர்புடையது என்பதில் சந்தேகமில்லை. ஆகவே இப்பிரச்சினையைப் பற்றி விளக்கமாக ஆராய்வது இந்நேரத்துக்குத் தக்கது என்று நாம் கருது கிறோம். மேற்கூறப்பட்ட சந்தர்ப்பவாதிகளில் ஒருவரும் தம் முடைய சொந்தமானதென்ற வாதம் ஒன்றைக்கூட மொழிய வில்லை என்பதையும் இங்கேயே நாம் கூற விரும்புகிறோம்; ரோஸா லுக்ஸம்பர்க் 1908-09ல் எழுதிய ''தேசீயப் பிரச் சினையும் சுயநிர்வாகமும்''' என்ற நீண்ட போலிஷ் கட்டுரை யின் அம்சங்களைத்தான் அவர்கள் அனைவரும் அப்படியே திருப்பிக் கூறுகிறார்கள். ரோஸா லுக்ஸம்பர்கின் ''மூல'' வாதங்களைத்தான் நமது விளக்கவுரையில் பிரதானமாகக் கவனிக்கப் போகிறோம்.

---

* பார்க்க: வி. இ. லெனின், ''தேசீயப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்''— **பதிப்பாசிரியர்கள்.**

## 1. தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்றால் என்ன?

சுயநிர்ணயம் என்று அறியப்பட்டுள்ளது பற்றி மார்க்ஸீய ரீதியில் ஆராய முயலும்பொழுது இக்கேள்விதான் இயற்கையாக முதன்முதலில் எழுகிறது. சுயநிர்ணயம் என்ற சொல்லின் பொருள் என்ன? சட்டத்தின் எல்லா வகையான ''பொதுக்கருத்துக்களிலிருந்தும்'' பெறப்படும் சட்டரீதியான வரையறைகளில் இதற்கு விடை தேடுவதா? அல்லது தேசிய இயக்கங்களை வரலாற்று-பொருளாதார ரீதியில் ஆராய்ந்து அதைக் கண்டுபிடிக்க வேண்டுமா?

ஸெம்கோவ்ஸ்க்கிய்களும் லீப்மன்களும் யுர்க்கேவிச்சுகளும் இக்கேள்வியை எழுப்ப வேண்டும் என்று நினைக்கக்கூடவில்லை என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை; மார்க்ஸீயச் செயல்திட்டத்தின் ''தெளிவற்ற தன்மையை'' எள்ளி நகையாடி இக்கேள்வியையே அவர்கள் ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைபற்றி 1903ம் ஆண்டின் ருஷ்யச் செயல்திட்டத்தில் மட்டுமின்றி 1896ம் வருடத்திய லண்டன் சர்வதேசக் காங்கிரசின் தீர்மானத்திலும்[4] (இதைப்பற்றி உரிய இடத்தில் விவரமாகக் கூறுவேன்) கூறப்பட்டிருக்கிறது என்பது பேதைமை காரணமாக அவர்கட்குத் தெரியாது போலும். நாம் எடுத்துக் கொண்ட பாராவானது அருவமானதாகவும் மாறுநிலைவாதத் தன்மையுள்ளதாகவும் இருக்கிறது என்று ஆவேசத்துடன் குறை கூறிய ரோஸா லுக்ஸம்பர்க் அவர்களே அருவத்தன்மை, மாறுநிலைவாதத் தன்மை ஆகிய பாவத்தில் தாமும் விழுந்து விட்டாரே என்பது மேலும் அதிக ஆச்சரியமானது. சுயநிர்ணயத்தைப் பற்றி ரோஸா லுக்ஸம்பர்க் தாம் அடிக்கடி பொதுப்படையாகப் பேசுகிறார் (ஒரு தேசிய இனத்தின் சித்தத்தை எப்படிக் கண்டறிவது என்பதைப்பற்றி வேடிக்கையாகத் தத்துவம் பேசும் அளவுக்குக்கூட அவர் செல்கிறார்); விஷயத்தின் சாராம்சம் சட்டரீதியான வரையறைகள் வகுப்பதில் இருக்கிறதா அல்லது உலக முழுவதிலும் நடக்கும் தேசிய இயக்கங்களின் அனுபவத்தில் இருக்கிறதா என்ற கேள்வியைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும்

எங்குமே கேட்டுக்கொள்ளாமலே அவர் அவ்வாறு கூறுகிறார்.

இக்கேள்வியைத் திட்டவட்டமாக நாம் வகுத்துக்கொண்டால்—இதை எந்த மார்க்ஸீயவாதியும் தட்டிக்கழிக்க முடியாது — ரோஸா லுக்ஸம்பர்கின் வாதங்களில் பத்தில் ஒன்பது உடனே நிர்மூலமாகி விடும். ருஷ்யாவில் தேசீய இயக்கங்கள் தோன்றியிருப்பது இதுதான் முதல் தடவையல்ல, அது இந்த நாட்டுக்கு மட்டுமே உரித்தான அம்சமும் அல்ல. உலகமுழுவதிலும் முதலாளித்துவமானது நிலப்பிரபுத்துவத்தின் மீது இறுதி வெற்றிகொள்ளும் காலகட்டம் தேசீய இயக்கங்களுடன் இணைந்துள்ளது. விற்பனைப் பண்ட உற்பத்தியின் முழுவெற்றிக்கு உள்நாட்டு மார்க்கெட்டைப் பூர்ஷ்வாக்கள் கைப்பற்ற வேண்டியது அவசியம்; ஒரே மொழி பேசும் மக்களைக் கொண்ட, அரசாங்க ரீதியில் ஐக்கியப்படுத்தப்பட நிலப்பரப்புகள் அதற்கு வேண்டும்; அம் மொழியின் வளர்ச்சிக்கும் அதன் இலக்கியம் உருப்பெற்றுத் திகழ்வதற்கும் முட்டுக்கட்டையாக உள்ள தடைகள் அகற்றப்பட வேண்டும். இங்கேதான் தேசீய இயக்கங்களின் பொருளாதார அடித்தளம் இருக்கிறது. மனித உறவுகளுக்கு மிகமிக முக்கியமான சாதனம் மொழி. நவீன முதலாளித்துவத்துக்கு ஏற்ற அளவில் உண்மையிலேயே சுதந்திரமான, விரிவான வாணிகத்துக்கும், மக்கள் சுதந்திரமாகவும் விரிவாகவும் பல்வேறு வர்க்கங்களாக அமைவதற்கும், இறுதியாக மார்க்கெட்டுக்கும் ஒவ்வொரு சிறிய, பெரிய உடைமையாளனுக்கும், விற்போருக்கும் வாங்குவோருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்கும் மிகமிக முக்கியமாகத் தேவையான சூழ்நிலைகள், மொழியின் ஐக்கியமும் தடையற்ற வளர்ச்சியும்தான்.

ஆகவே ஒவ்வொரு தேசீய இயக்கத்தின் போக்கும் நவீன முதலாளித்துவத்தின் தேவைகள் மிக நன்ருகப் பூர்த்தி செய்யப்பட வாய்ப்புள்ள தேசீய அரசுகள் அமைப்பதற்கான வழியிலானது. மிகமிகத் தீர்க்கமான பொருளாதாரக் காரணிகள் இந்த இலக்கை நோக்கி இட்டுச் செல்லுகின்றன; எனவே மேற்கு ஐரோப்பா முழுவதிற்கும், ஏன் நாகரிக உலகமுழுவதுக்கும், தேசீய அரசு என்பது முதலாளி

துவக் காலகட்டத்தில் மாதிரிப்படிவமானது, வழக்கமானது.

ஆகவே, சட்டரீதியான வரையறைகளை வைத்துக் கொண்டு ஜாலவித்தை செய்வதன் மூலமோ அல்லது அருவமான வரையறைகளைப்''புனைவதன்''மூலமோ இன்றி, தேசிய இயக்கங்களின் வரலாற்று-பொருளாதார நிலைமைகளை ஆராய்வதன் வாயிலாகத்—தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்பதன் பொருளைப் புரிந்துகொள்ள நாம் விரும்பினால், அன்னிய தேசிய அமைப்புக்களிலிருந்து இத்தேசிய இனங்கள் அரசியல் ரீதியில் பிரிந்து சுதந்திரமான தேசிய அரசு ஒன்றை அமைத்தல் என்பதே தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தின் பொருள் என்ற முடிவுக்குத்தான் நாம் வந்து தீருவோம்.

சுயநிர்ணய உரிமை என்பதற்குத் தனி அரசாகப் பிரிந்து வாழ்தல் என இன்றி வேறு பொருள் கூறுவது எவ்வாறு தவறானது என்பதற்கு இதர பல காரணங்களைப் பின்னர் நாம் பார்ப்போம். தேசிய அரசு ஒன்று அமைவதற்குத் தீர்க்கமான பொருளாதாரக் காரணிகள்தான் அடிப்படையானவை என்ற தவிர்க்கமுடியாத முடிவை ''ஒதுக்கித்தள்ளிவிட'' ரோஸா லுக்ஸம்பர்க் செய்யும் முயற்சிகளைப் பற்றி நாம் இப்பொழுது கவனிக்க வேண்டும்.

''தேசிய அம்சமும் சர்வதேசிய அம்சமும்'' என்ற காவுத்ஸ்கியின்*துண்டுப் பிரசுரத்தைப்பற்றி (*Die Neue Zeit*,[5] இதழ் 1ன் அனுபந்தம், 1907-08; இதன் ருஷ்ய மொழி பெயர்ப்பு ''நஊச்ஞயா மீஸிலில்''[6], ரீகா, 1908) ரோஸா லுக்ஸம்பர்க் நன்கு அறிவார். தேசிய அரசுபற்றிய பிரச்சினையை அத்துண்டுப் பிரசுரத்தின் §4 வில் காவுத்ஸ்கி கவனமாக ஆராய்ந்தபிறகு, ஓட்டோ பௌவர் ''தேசிய அரசு அமைப்

---

* 1916ல் கட்டுரையை மறு பதிப்புக்குத் தயாரிக்கையில் வி. இ. லெனின் இந்த இடத்திற்குப் பின் வரும் குறிப்பை எழுதினார்: ''ஒரு விஷயத்தை மறந்துவிடாதிருக்குமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம்: 1909 வரை, 'ஆட்சிக்கு இட்டுச் செல்லும் பாதை' என்னும் தமது நேர்த்தியான பிரசுரம்வரை, காவுத்ஸ்கிய் சந்தர்ப்பவாதத்தின் பகைவராக இருந்தார். 1910-1911 லேயே அவர் அதன் ஆதரவாளராக மாறினார். அதன் திட ஆதரவாளராக அவர் மாறியது 1914-1916 லேயே.''

பதற்கான வேட்கையின் சக்தியைக் குறைத்து மதிப்பிடுகிறார்'' என்ற முடிவுக்கு (அத்துண்டுப் பிரசுரத்தின் பக்கம் 23) வந்தார் என்பதும் ரோஸா லுக்ஸம்பர்குக்குத் தெரியும். ரோஸா லுக்ஸம்பர்க் அவர்களே காவுத்ஸ்கியின் இந்த வார்த்தைகளை மேற்கோள் காட்டுகிறார்: ''இன்றைய நிலைமைகளுக்கு (அதாவது, முதலாளித்துவ, நாகரிகமடைந்துள்ள, பொருளாதார் ரீதியில் முற்போக்கான நிலைமைகளுக்கு, மத்திய காலத்தைச் சேர்ந்த, முதலாளித்துவத்துக்கு முந்திய நிலைமைகளினின்று வேறுபட்ட இன்றைய நிலைமைகளுக்கு) மிகவும் பொருத்தமான வடிவம் தேசீய அரசுதான்; அந்த வடிவத்தில்தான் அரசு தனது கடமைகளை (அதாவது, முதலாளித்துவத்தின் மிகமிகச் சுதந்திரமான, விரிவான, வேகமான வளர்ச்சிக்கு வழிசெய்யும் கடமைப்பணிகளை) சிறப்பாக நிறைவேற்ற முடியும்''. பல தேசீய இனங்கள் கலந்து வாழும் அரசுகள் (தேசீய அரசுகளிலிருந்து வேறுபட்டனவாகப் பல்தேசீய இன அரசுகள் என்று இவை வழங்கப்படுகின்றன)'' தங்களது உள்நாட்டு அமைப்பு ஏதோ சில காரணங்களினால் முறைக்குப் பொருந்தாத அல்லது வளர்ச்சி குன்றிய[பின்தங்கிய] நிலையில் இருக்கும் நாடுகள்தான்'' என்று காவுத்ஸ்கி இறுதியில் மேலும் துல்லியத் தெளிவாகக் கூறுகிறார் என்பதையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். வளர்ந்து வரும் முதலாளித்துவத்தின் தேவைகளுக்கு மிகவும் ஏற்றது எதுவோ அதனுடன் பொருந்தாதவை என்ற பொருளில் மட்டும்தான் முறைக்குப் பொருந்தாத நிலைமைகளைப்பற்றி காவுத்ஸ்கி பேசுகிறார் என்பதை நாம் கூறத் தேவையில்லை.

கேள்வி இதுதான்: காவுத்ஸ்கியின் இந்த வரலாற்று-பொருளாதார ரீதியான முடிவுகளை ரோஸா லுக்ஸம்பர்க் எப்படி எடுத்துக்கொள்கிறார்? அவைகள் சரியா அல்லது தவறு? வரலாற்று-பொருளாதார ரீதியான சித்தாந்தத்தைக் கூறும் காவுத்ஸ்கி சரியா? அல்லது அடிப்படையில் உளவியல் ரீதியான சித்தாந்தத்தைக் கூறும் பௌவர் சரியா? பௌவரின் சந்தேகத்துக்கிடமில்லாத ''தேசீயச் சந்தர்ப்பவாதம்'', கலாச்சார-தேசீயச் சுயநிர்வாகத்தை[7] அவர் ஆதரிப்பது, அவரது தேசீயவாத மோகம் (காவுத்ஸ்கி சொல்வதைப்

போல ''தேசிய அம்சத்தைப் பற்றி சிற்சில சமயங்களில் அவர் வலியுறுத்துவது''), ''தேசிய அம்சத்தை அவர் மிகப் பெரும் அளவில் மிகைப்படுத்தி சர்வதேசிய அம்சத்தை முழுமையாகப் புறக்கணிப்பது'' (காவுத்ஸ்கி), தேசிய அரசை உருவாக்குவதற்கான வேட்கையின் வலிமையை அவர் குறைத்து மதிப்பிடுவது—இவைகளுக்கிடையிலுள்ள தொடர்பு என்ன?

ரோஸா லுக்ஸம்பர்க் இந்தக் கேள்வியை எழுப்பக்கூட இல்லை. இந்தத் தொடர்பை அவர் கவனிக்கவில்லை. பௌவரின் சித்தாந்தக் கருத்துக்களின் மொத்தப் பொருளை அவர் கவனிக்கவில்லை. தேசியப் பிரச்சினையைப் பற்றிய வரலாற்று-பொருளாதார ரீதியான சித்தாந்தத்தையும் உளவியல் ரீதியான சித்தாந்தத்தையும் அவர் வேறுபடுத்திப் பார்க்கக்கூட இல்லை. காவுத்ஸ்கியின் சித்தாந்தத்தைக் குறைகூறும் முறையில் கீழ்வரும் வார்த்தைகளை மொழிவதோடு அவர் நின்று விடுகிறார்:

''... இந்த 'மிகச் சிறந்த' தேசிய அரசு ஒரு உருவற்ற கருத்தியல் எண்ணமே தவிர, வேறொன்றுமில்லை; இதைச் சித்தாந்த ரீதியில் விவரித்து ஆதரித்துப் பேசுவது எளிது; ஆனால் யதார்த்தத்துக்குஇது இயைந்ததல்ல''. (*Przeglad Socjal-demokratyczny*,[8] 1908, இதழ் 6, பக்கம் 499).

இந்த அழுத்தந்திருத்தமான கூற்றை உறுதிப்படுத்தும் முறையில் மேலும் பல வாதங்கள் தொடருகின்றன. பெரும் முதலாளித்துவ அரசுகளின் வளர்ச்சியும் ஏகாதிபத்தியமும் சிறு தேசிய இனங்களின் ''சுயநிர்ணய உரிமையை'' ஒரு பகற் கனவாகச் செய்கின்றன என்ற பொருள்படும்படி அவ்வாதங்கள் இருக்கின்றன. ''பெயரளவில் சுதந்திரமாயிருக்கிற மாண்டிநீக்ரின்கள், புல்கேரியர்கள், ருமேனியர்கள், செர்பியர்கள், கிரேக்கர்கள், ஓரளவில் ஸ்விஸ்காரர்களும்கூட ஆகியோரின் —இவர்களுடைய சுதந்திரமே 'ஐரோப்பிய ஒருங்கிசைவின்' அரசியல் போராட்டம், அரச தந்திர விளையாட்டு ஆகியவற்றின் விளைவுதானே!—'சுயநிர்ணயத்தைப்' பற்றி யாராவது தீவிரமாகப் பேச முடியுமா?'' (பக்கம் 500) என்று ரோஸா லுக்ஸம்பர்க் கூச்சலிடுகிறார். இந்நிலைமைகளுக்கு மிகமிகப் பொருத்திய அரசு ''காவுத்ஸ்கி நினைப்பதைப்போல தேசிய

அரசு அல்ல, கொள்ளைக்கார அரசுதான்''. பிரிட்டிஷ், பிரெஞ்சு, மற்றும் இதர நாடுகளின் காலனிகளின் பரப்பளவைப் பற்றி டஜன் கணக்கில் புள்ளி விவரங்கள் மேற்கோள் காட்டப்படுகின்றன.

இத்தகைய வாதங்களைப் படித்த பிறகு விஷயங்கள் **எவ்வாறு, ஏன் இருக்கின்றன** என்பதைத் தவருகப் புரிந்து கொள்வதில் ஆசிரியருக்கிருக்கும் திறமையைக் கண்டு நம்மால் வியக்காமல் இருக்கமுடியாது. சிறிய அரசுகள் பொருளாதார ரீதியாகப் பெரிய அரசுகளைச் சார்ந்திருக்கின்றன; மற்ற தேசிய இனங்களைக் கொள்ளையிட்டு அடக்கியாளுவதற்காகப் பூர்ஷ்வா அரசுகளுக்கிடையில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; ஏகாதிபத்தியமும் காலனிகளும் இருக்கின்றன என்று ஆழ்ந்த தோரணையில் காவுத்ஸ்கிக்குப் பாடம் சொல்வது தனது புத்திசாலித்தனத்தைக் காட்டிக் கொள்வதற்கான நகைக்கத்தக்க, சிறுபிள்ளைத்தனமான முயற்சியாகும்; ஏனென்ருல் இவைகளுக்கும் எடுத்துக்கொண்ட பொருளுக்கும் சிறு தொடர்புகூட இல்லை. ''பணக்கார'' பூர்ஷ்வா நாடுகளின் ஏகாதிபத்திய நிதிமூலதனத்தின் பலத்தையே சிறு அரசுகள் மட்டுமல்லாமல், உதாரணமாக ருஷ்யாவும்கூடப் பொருளாதார ரீதியில் முழுக்க முழுக்கச் சார்ந்திருக்கிறது. ''மூலதனத்தில்''[9] மார்க்ஸ் சுட்டிக் காட்டியுள்ளபடி, சின்னஞ்சிறு பால்கன் அரசுகள் மட்டுமின்றிப் பத்தொன்பதாம் நூற்ருண்டின் அமெரிக்காவும்கூடப் பொருளாதாரத் துறையில் ஐரோப்பாவின் - காலனியாகத்தான் இருந்தது. எல்லா மார்க்ஸீயவாதிகளுக்கும் காவுத்ஸ்கிக்கும் இது நன்கு தெரியும்; ஆனுல் இதற்கும் தேசிய இயக்கங்கள், தேசிய அரசு ஆகிய பிரச்சினைக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.

பூர்ஷ்வா சமுதாயத்தில் தேசிய இனங்களின் அரசியல் சுயநிர்ணயம், அவைகள் சுயேச்சையான அரசுகளாக வாழ்தல் ஆகிய பிரச்சினைக்குப் பதிலாக அவைகளின் பொருளாதார சுயேச்சையும் கட்டின்மையும் பற்றிய பிரச்சினையை ரோஸா லுக்ஸம்பர்க் எடுத்துக் கொள்கிருர். ஒரு பூர்ஷ்வா அரசில் பாராளுமன்றத்துக்கு—அதாவது, மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சபைக்கு—தன்னிகரற்ற தலைநிலை அளிக்க

வேண்டுமென்ற செயல்திட்டக் கோரிக்கையை விவாதிக்கும் பொழுது, ஆட்சி முறை எதுவாக இருப்பினும் ஒரு பூர்ஷ்வா நாட்டில் பெரு மூலதனம்தான் ஆதிக்கம் செலுத்துகிறது என்ற மிகவும் சரியான மெய்க்கோளை ஒருவர் விளக்குவரானல் அது எவ்வளவு புத்திசாலித்தனமானதோ அவ்வளவு புத்திசாலித்தனமானது தான் இதுவும்.

மிகவும் அதிக மக்கள் நெருக்கமாக வாழும் கண்டமாகிய ஆசியாவின் பெரும்பகுதி ''பெரும் வல்லரசுகளின்'' காலனி நாடுகளையோ அல்லது தேசியநோக்கில் படுமோசமாகச் சார்ந்திருக்கின்ற, ஒடுக்கப்படுகின்ற அரசுகளையோ கொண்டதாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனல் எல்லோருக்கும் தெரிந்ததுதான் இந்தச் சூழ்நிலை, ஆசியா முழுவதிலும் ஜப்பானில் மட்டும்தான், அதாவது ஒரு சுதந்திரமான தேசீய அரசில் மட்டும்தான், பண்ட உற்பத்தியின் மிகவும் முழுமையான வளர்ச்சிக்கும் மிகச் சுதந்திரமான, விரிவான, வேகமான முதலாளித்துவ வளர்ச்சிக்கும் தேவையான நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற சந்தேகமற்ற உண்மையை இது எவ்விதத்திலும் அசைக்க முடியுமா என்ன? ஜப்பான் ஒரு பூர்ஷ்வா அரசு; அந்தக் காரணத்தினல் அது மற்ற தேசீய இனங்களை ஒடுக்கி, காலனிகளை அடிமைப்படுத்தத் தொடங்கிவிட்டது. முதலாளித்துவம் குலைந்து வீழ்வதற்கு முன்னல் சுயேச்சையான தேசீய அரசுகள் என்ற ஒரு அமைப்புமுறையை ஐரோப்பாவைப் போல் உருவாக்குவதற்கு ஆசியாவுக்குக் காலமிருக்குமா என்பதை நாம் சொல்வதற்கில்லை; ஆனல் முதலாளித்துவமானது ஆசியாவைத் தட்டி எழுப்பிவிட்டதன் விளைவாக அக்கண்டத்திலும்கூட எல்லாவிடங்களிலும் தேசீய இயக்கங்களைத் தோற்றுவித்திருக்கிறது என்பதும், இவ்வியக்கங்களின் போக்கு ஆசியாவில் தேசீய அரசுகள் உருவாவதற்கு வழி செய்யும் பாதையை நோக்கிச் செல்லும் போக்கு என்றும், இத்தகைய அரசுகள்தான் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கேற்ற மிகச் சிறந்த நிலைமைகளை உண்டாக்கும் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள். ஆசியாவின் உதாரணம் காவுத்ஸ்கிக்குச் சாதகமாகவும் ரோஸா லுக்ஸம்பர்குக்கு எதிராகவும் இருக்கிறது.

அதேபோல பால்கன் அரசுகளின் உதாரணமும் அவரது வாதத்தை மறுக்கிறது; ஏனென்றால் அத்தீபகற்பத்தில் சுயேச்சையான தேசிய அரசுகள் எந்த அளவுக்கு உருவாகின்றனவோ அதே அளவில்தான் பால்கன் நாடுகளில் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கான மிகச் சிறந்த நிலைமைகளும் உருவாகின்றன என்பதை யாரும் இப்பொழுது பார்க்க முடியும்.

ஆகவே ரோஸா லுக்ஸம்பர்க் என்னதான் சொன்னாலும் முற்போக்கான நாகரிகமுற்றுள்ள மனித சமுதாயமுழுவதன் உதாரணமும், பால்கன் நாடுகள், ஆசியா ஆகியவற்றின் உதாரணமும் தேசிய அரசு என்பது முதலாளித்துவத்தின் விதியும் ''பொது வழக்கும்'' ஆகும், பல்தேசிய அரசு என்பது பின்தங்கிய நிலையைக் குறிக்கிறது அல்லது அது ஒரு விதிவிலக்கு என்கிற காவுத்ஸ்கியின் கூற்று முற்றிலும் சரியானது என்பதைக் காட்டுகின்றன. தேசிய உறவுகளைப் பொறுத்தவரையில் முதலாளித்துவ வளர்ச்சிக்கான மிகச் சிறந்த நிலைமைகளைத் தேசிய அரசுதான் உண்டுபண்ணிக் கொடுக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், பூர்ஷ்வா உறவுகளின் மேல்கட்டப்பட்டிருக்கும் அத்தகையதொரு அரசு தேசிய இனங்களைச் சுரண்டுதலையும் ஒடுக்குதலையும் அகற்றிவிடலாம் என்பதல்ல இதன் பொருள். தேசிய அரசுகளை உண்டாக்குவதற்கான தூண்டுசக்தியைத் தோற்றுவிக்கும் பலம்வாய்ந்த பொருளாதாரக் காரணிகளை மார்க்ஸீயவாதிகள் மறந்துவிடக் கூடாது என்பதுதான்இதன் பொருள். வரலாற்று - பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் மார்க்ஸீயவாதிகளின் செயல்திட்டத்தில் உள்ள ''தேசிய இனங்களின் சுயநிர்ணயம்'' என்பதற்கு அரசியல் சுயநிர்ணயம், அரசின் சுயேச்சைத்தன்மை, ஒரு தேசிய அரசு அமைத்தல் என்கிற பொருள்தான் உண்டு; வேறு பொருள் இருக்க முடியாது.

''தேசிய அரசு'' வேண்டும் என்ற பூர்ஷ்வா-ஜனநாயகக் கோரிக்கையை எந்த நிலைமைகளில் ஒரு மார்க்ஸீயவாத, அதாவது பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் ஆதரிக்க வேண்டும் என்பதைப் பற்றி விவரமாகப் பிறகு பார்ப்போம். ''சுயநிர்ணயம்'' என்ற கருத்துக்கு விளக்கம் கூறுவதுடன்

நாம் தற்பொழுது நம்மை நிறுத்திக் கொள்வோம்; (''தேசிய அரசு'' என்ற) இக்கருத்துக்கு என்ன பொருள் என்பது ரோஸா லுக்ஸம்பர்குக்குத் தெரியும்; ஆனால் அவரது சந்தர்ப்ப வாதச் சகாக்களாகிய லீப்மன்கள், ஸெம்கோவ்ஸ்க்கிய்கள், யுர்க்கேவிச்சுகள் ஆகியவர்களுக்கு அது கூடத் தெரியாது என்பதை மட்டும் தற்பொழுது கவனத்திற் கொள்வோம்.

## 2. வரலாற்றுரீதியாக ஸ்தூல வடிவில் இப்பிரச்சினையை எடுத்துரைத்தல்

எந்த ஒரு சமூகப் பிரச்சினையையும் ஆராயும்பொழுது அதைத் திட்டவட்டமான வரலாற்று எல்லைகட்குள் தான் ஆராயவேண்டும்; பிரச்சினை ஒரு குறிப்பிட்ட நாட்டைப் பற்றியதாக இருந்தால் (உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கான தேசியச் செயல்திட்டம்) அதே வரலாற்றுக் காலகட்டத்தில் அந்நாட்டை இதர நாடுகளிலிருந்து வேறு படுத்தும் ஸ்தூலமான விசேஷ அம்சங்களைக் கணக்கிலெடுத் துக்கொள்ள வேண்டும் என்று மார்க்ஸீயச் சித்தாந்தம் உறுதியாக, தவிர்க்க முடியாத வகையில் கோருகிறது.

இப்பொழுது நாம் விவாதிக்கும் பிரச்சினையை மார்க் ஸீயத்தின் இந்த உறுதியான கோரிக்கையைக் கவனத்தில் கொண்டு ஆராய்வது என்றால் அதில் என்ன அடங்கி இருக் கிறது?

தேசிய இயக்கத்தைப் பொறுத்தவரை ஒன்றுக்கொன்று தீவிரமாக மாறுபடுகின்ற முதலாளித்துவத்தின் இரு கால கட்டங்களும் வெவ்வேறானவை என்பதைத் துல்லியமாக உணர்ந்துகொள்ள வேண்டும் என்று அது கூறுகிறது. ஒரு பக்கத் தில் நிலப்பிரபுத்துவமும் வரம்பிலா முடியரசும் வீழ்ச்சியுற்ற காலம்; பூர்ஷ்வா-ஜனநாயக சமுதாயமும் அரசும் அமைக்கப் பட்ட காலம். அப்பொழுதுதான் முதன் முதலாகத் தேசிய இயக்கங்கள் பொதுமக்கள் இயக்கங்களாகப் பரிணமித்தன; அச்சு வெளியீடுகள், பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களில் பங்கு கொள்ளுதல் முதலிய வழிகளில் எல்லா வர்க்கங்களையும் சேர்ந்த மக்களையும் ஏதாவது ஒருவகையில் அரசியலுக்குள்

கும்படி தேசிய இயக்கங்கள் செய்தது அப்பொழுதுதான். மற்ருெரு பக்கத்தில், நெடுங்காலமாக நிலைபெற்றுவிட்ட, அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சியையும், பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஷ்வாக்களுக்குமிடையில் நன்கு வளர்ந்து விட்ட பகையையும் கொண்ட முதலாளித்துவ அரசுகள் முழுமையாக உருப்பெற்றுவிட்ட காலம்; முதலாளித்துவத்தின் வீழ்ச்சித் தறுவாய் என்று கூறக்கூடிய காலம்.

முதற்கூறிய காலகட்டத்தின் தனிவிசேஷ அம்சங்கள்: தேசீய இயக்கங்களின் மலர்ச்சியும், நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையான, மிக மந்தமான வகுப்பைச் சேர்ந்த விவசாயிகள் பொதுவாக அரசியல் உரிமைகளுக்கான, சிறப்பாகத் தேசீய இன உரிமைகளுக்கான போராட்டத்தை ஒட்டி இவ்வியக்கங்களில் ஈர்க்கப்படுவதும் ஆகும். இரண்டாவது காலகட்டத்தின் தனிவிசேஷ அம்சங்கள்: பொதுஜன பூர்ஷ்வா-ஜனநாயக இயக்கங்கள் இன்மை; இந்தக் காலகட்டத்தில் வாணிகத் தொடர்புகளில் ஏற்கெனவே முழுமையாகக் கவரப்பட்டுவிட்ட தேசீய இனங்களை ஒன்ருேடொன்று அதிக நெருக்கமாகப் பிணைத்து, மேலும்அதிகமாக அவைகளை ஒன்ருேடொன்று கலக்கும்படி செய்வதன்மூலமாக வளர்ச்சியுற்ற முதலாளித்துவம் சர்வதேச ரீதியில் ஐக்கியப்பட்ட மூலதனத்துக்கும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்துக்குமான முரண்பாட்டை முன்னணிக்குக் கொண்டு வருகிறது.

இவ்விரண்டு காலகட்டங்களும் சுவர் வைத்தாற்போல் பிரிந்து நிற்கவில்லை என்பது உண்மைதான். இவை பல இடைநிலை இணைப்புகளால் தொடர்பு படுத்தப்பட்டிருக்கின்றன; தங்களது தேசீய வளர்ச்சி வேகத்தில், தேசீய இன அமைப்பில், மக்கட்தொகைப் பங்கீட்டில், இப்படி இன்னும் பலவற்றில் பல்வேறு நாடுகளும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. இந்தப் பொதுவான வரலாற்று ரீதியிலான ஸ்தூல அரசு நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் எந்நாட்டைச் சேர்ந்த மார்க்ஸீயவாதிகளும் தங்களது தேசீயச் செயல்திட்டத்தை வரையும் பேச்சுக்கே இடமில்லை.

இங்குதான் ரோஸா லுக்ஸம்பர்கின் வாதங்களில் மிக மிகப் பலவீனமான பகுதியை நாம் காண்கிருேம். நமது

செயல்திட்டத்தின் 9வது பாராவுக்கு எதிராக மிகவும் ''கடினமான'' சொற்களைப் பிரயோகித்துத் தமது கட்டுரையை அசாதாரண ஆர்வத்துடன் அலங்கரிக்கிறார். இந்தப் பாரா ''மிகைப்படையானது'', ''சாதாரண வெற்றுக் கோட்பாடு'', ''மாறுநிலைவாத வாய்ச்சொல்'' என்றெல்லாம் முடிவில்லாமல் அவர் கூறுகிறார். மாறுநிலைவாதத்தையும் (மார்க்ஸீயப் பொருளில், அதாவது, இயக்க மறுப்பு இயலையும்) வெற்று அருவவாதத்தையும் இவ்வளவு போற்றத்தக்க வகையில் கண்டிக்கும் ஒரு ஆசிரியர் ஒரு பிரச்சினையை ஸ்தூலமான வரலாற்று முறையில் எப்படி ஆராய்வது என்பதற்கு ஒரு உதாரணத்தை நமக்குக் காட்டுவார் என்று எதிர்பார்ப்பது இயற்கைதான். எடுத்துக்கொண்ட பிரச்சினையானது, ஒரு குறிப்பிட்ட நாட்டில்—ருஷ்யாவில்—ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில்—இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில்—மார்க்ஸீயவாதிகளின் தேசீயச் செயல்திட்டமாகும். ஆனால், ருஷ்யா எந்த வரலாற்றுக் காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது, அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தில் அந்தக் குறிப்பிட்ட நாட்டின் தேசீயப் பிரச்சினையின், தேசீய இயக்கங்களின் ஸ்தூலமான அம்சங்கள் என்ன என்கிற கேள்வியை ரோஸா லுக்ஸம்பர்க் எழுப்புகிறாரா?

இல்லை! அவர் எழுப்பவில்லை! அதைப்பற்றி அவர் ஒன்றுமே சொல்லவில்லை! ருஷ்யாவில் தற்பொழுதைய வரலாற்றுக் காலகட்டத்தில் தேசீயப் பிரச்சினை எவ்வாறு இருக்கிறது என்பதையோ அல்லது இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் ருஷ்யாவின் சிறப்பான அம்சங்களையோ பற்றியதொரு ஆராய்ச்சியின் சாயலைக்கூட அவரது கட்டுரையில் நீங்கள் காணமுடியாது.

தேசீயப் பிரச்சினையானது அயர்லாந்தில் தோற்றமளிப்பது போலன்றி, வேறு விதமாக பால்கன் நாடுகளில் தோன்றுகிறது என்றும்; 1848ம் ஆண்டில் நிலவிய ஸ்தூல நிலைமைகளைக் கொண்டு போலிஷ், செக் தேசீய இயக்கங்கள் இன்ன இன்ன விதத்தில் மார்க்ஸால் மதிப்பிடப்பட்டன என்றும் (மார்க்ஸிலிருந்து ஒரு பக்கம் மேற்கோள்கள் காட்டப்படுகின்றன); ஸ்விட்ஸர்லாந்தின் காட்டுப்பகுதிக் காண்டன்களின் ஆஸ்திரியாவுக்கெதிரான போராட்டத்தையும்

1315ல் நடைபெற்ற மோர்கார்டென் சண்டையையும் இன்ன இன்ன விதத்தில் எங்கெல்ஸ் மதிப்பிடுகிறார் என்றும் (எங்கெல்ஸிலிருந்து ஒரு பக்கம் மேற்கோள்களும் அவை சம்பந்தமான காவுத்ஸ்கியின் குறிப்புரைகளும் இங்கு தரப் படுகின்றன); பதினாறும் நூற்றாண்டில் ஜெர்மனியில் நடந்த விவசாயிகளின் போர் பிற்போக்கானது என்று லஸ்ஸால் கருதினார் என்றும் இன்னும் பலவாறாகவும் நமக்குச் சொல்லப் படுகிறது.

இந்தக் கூற்றுக்களிலும் மேற்கோள்களிலும் எவ்விதப் புதுமையும் இருப்பதாகச் சொல்ல முடியாது. ஆயினும் சில குறிப்பிட்ட நாடுகளின் ஸ்தூல வரலாற்றுப் பிரச்சினைகளை மார்க்ஸும் எங்கெல்ஸும் லஸ்ஸாலும் எவ்வாறு ஆராய்ந்தார்கள் என்பதைப் பற்றிச் சிற்சில சமயங்களில் நினைப்பூட்டப்படுவது வாசகர்களுக்குப் பிடித்ததாயிருக்கும். மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்களிலிருந்து எடுத்தாளப்பட்ட அறிவூட்டக் கூடிய இம்மேற்கோள்களைப் படிப்பதானது ரோஸா லுக்ஸம்பர்க் தம்மை நிறுத்தி வைத்துக்கொண்டுள்ள பரிகசிக்கத்தக்க நிலையை மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு நாடுகளில் தோன்றும் தேசீயப் பிரச்சினையை ஸ்தூல வரலாறு பூர்வமாக ஆராய வேண்டியது அவசியம் என்று சொல்வன்மையுடனும் சினத்துடனும் அவர் போதிக்கிறார்; ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாளித்துவ வளர்ச்சியின் எந்த வரலாற்றுக் கட்டத்தை ருஷ்யா கடந்து கொண்டிருக்கிறது, அல்லது இந்த நாட்டில் தேசீயப் பிரச்சினையின் சிறப்பு அம்சங்கள் யாவை என்பதைப் பற்றி நிர்ணயிப்பதற்கு அவர் சிறு முயற்சிகூடச் செய்யவில்லை. இப்பிரச்சினையை மார்க்ஸீய ரீதியில் எவ்வாறு மற்றவர்கள் கவனித்தார்கள் என்பதற்கு ரோஸா லுக்ஸம்பர்க் உதாரணங்கள் காட்டுகிறார்; பல சமயங்களில் நல்லெண்ணமேதான் நரகத்துக்கும் வழி வகுக்கிறது என்பதையும், அத்தகைய அறிவுரைகளை நடைமுறையில் பின்பற்றுவதற்கு விருப்பமின்மை அல்லது திறனின்மை எப்படிப் பல சமயங்களில் நல்லுபதேசம் கூறி மூடிமறைக்கப் படுகிறது என்பதையும் வலியுறுத்திக் காட்டுவதற்கென்றே அவர் இப்படிச் செய்கிறார் போலும்.

அவரது போதனை செய்யும், புத்திபுகட்டும் ஒப்பீடுகளில் இதோ ஒன்று: போலந்துக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆட்சேபிக்கையில் ரோஸா லுக்ஸம்பர்க் 1898ல் தாம் எழுதிய ஒரு துண்டுப் பிரசுரத்தை பற்றிக் குறிப்பிடுகிறார்; போலந்தின் ஆலை உற்பத்திப் பொருள்கள் ருஷ்யாவில் விற்கப்படுவது ''போலந்தின் தொழில் வளர்ச்சியின்'' வேகத்தைக் காட்டுகிறது என்று அவர் அதில் நிரூபிக்கிறார். இதைக்கொண்டு சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை பற்றிய எந்த ஒரு முடிவுக்கும் வரமுடியாது என்பதைச் சொல்லத் தேவையில்லை; நிலப்பிரபுக்களின் பழைய போலந்து மறைந்து விட்டது என்பதை மட்டும்தான் அது நிரூபிக்கிறது. ஆயினும், ருஷ்யாவையும் போலந்தையும் ஒன்றுபடுத்தும் காரணிகளில் நவீன முதலாளித்துவ உறவுகளின் கலப்படமற்ற, பரிசுத்தமான பொருளாதாரக் காரணிகள்தான் இப்பொழுது தலையாயவை என்கிற முடிவுக்கு ரோஸா லுக்ஸம்பர்க் எப்பொழுதும் மெல்ல நழுவி விடுகிறார்.

அடுத்தபடியாக சுயநிர்வாகப் பிரச்சினையை நமது ரோஸா எடுத்துக் கொள்கிறார். ''தேசீயப் பிரச்சினையும் சுயநிர்வாகமும்'' என்ற பொதுவானதலைப்பே கொடுக்கப்பட்டிருப்பினும் சுயநிர்வாகம் பெறுவதற்குப் போலந்து முடியரசுக்குப் பிரத்யேகமான உரிமை உண்டு என்று அவர் வாதிக்க ஆரம்பிக்கிறார். (பார்க்க: ''ப்ரோஸ்வெஷ்சேனியே'', 1913, இதழ் 12*). போலந்தின் சுயநிர்வாக உரிமையை ஆதரிக்க வேண்டி ருஷ்யாவின் அரசு அமைப்பை அதன் பொருளாதார, அரசியல், அன்றாட வாழ்வு, சமுதாயக் குணும்சங்களையும்—இவைகள் எல்லாம் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து ''ஆசியக் கொடுங்கோன்மை'' என்கிற சொல்லை உருவாக்குகின்றன — கொண்டு ரோஸா லுக்ஸம்பர்க் தீர்மானிக்கிறார் என்பது தெளிவு. (*Przeglad*, இதழ் 12, பக்கம் 137.)

பொருளாதார அமைப்பில் முழுக்க முழுக்கத் தந்தை வழி முறையைச் சேர்ந்ததும், முதலாளித்துவத்துக்கு முந்திய கட்டத்தைச் சேர்ந்ததுமான அம்சங்கள் எப்பொழு

---

* பார்க்க: வி. இ. லெனின், ''தேசீயப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்''—பதிப்பாசிரியர்கள்.

தெல்லாம் ஆதிக்கம் செலுத்துகின்றனவோ, பண்ட உற்பத்தியும் வர்க்க வேறுபாடுகளும் எங்கு அற்ப வளர்ச்சியே அடைந்துள்ளனவோ அங்கெல்லாம் இத்தகையஅரசுஅமைப்பு முறையானது நிலைத்து நிற்கும் சக்தியைப் பெருமளவில் பெற்றிருக்கிறது என்பது பொதுவாகத் தெரிந்த உண்மை. ஆயினும் முதலாளித்துவத்துக்கு முந்திய கட்டத்தின் குணம் சத்தைப் பெற்றிருக்கும் அரசு அமைப்பைக் கொண்டதொரு நாட்டில் முதலாளித்துவம் துரிதமாக வளர்ந்து வருகிற, தேசீய இன ரீதியில் எல்லை வகுக்கப்பட்ட ஒரு பிராந்தியம் இருக்குமேயானால், அப்பொழுது அம்முதலாளித்துவம் எவ்வளவுக்கெவ்வளவு துரிதமாக வளருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதற்கும் முதலாளித்துவத்துக்கு முந்திய அரசு அமைப்பு முறைக்கும் இடையிலான முரண்பாடும் அதிகமாக இருக்கும்; முற்போக்கடைந்து வரும் பிராந்தியம் முழு நாட்டிலிருந்து—இத்துடன் அது "நவீன முதலாளித்துவ" உறவுகளால் அல்லாமல், "ஆசியக் கொடுங்கோன்மையினுல்" பிணைக்கப்பட்டிருக்கிறது—பிரியக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

இவ்வாருக, பூர்ஷ்வா போலந்து சம்பந்தமாக ருஷ்யாவில் அரசாங்கத்தின் சமுதாய அமைப்பைப் பற்றிய பிரச்சினை விஷயத்திலும்கூட ரோஸா லுக்ஸம்பர்கின் வாதங்கள் கோர்வையாக இல்லை. ருஷ்யாவிலுள்ள தேசீய இயக்கங்களின் ஸ்தூல, வரலாற்று பூர்வமான, குறிப்பிட்ட அம்சங்களை எடுத்துக் கொண்டாலோ — அப்பிரச்சினையை அவர் எழுப்பவேயில்லை.

நாம் இப்பொழுது கவனிக்க வேண்டிய விஷயம் அதுதான்.

## 3. ருஷ்யாவில் தேசீயப் பிரச்சினையின் ஸ்தூல அம்சங்களும், ருஷ்யாவின் பூர்ஷ்வா-ஜனநாயகச் சீரமைப்பும்

" '...தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமை' என்ற கோட்பாடு வளைந்து கொடுக்கும் தன்மையுடையது. அது ஒரு சாதாரணமான, வெற்றுக் கோட்பாடு. ருஷ்யாவில்

வசிக்கும் தேசிய இனங்களுக்கு மட்டுமின்றி, ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும், ஸ்விட்ஸர்லாந்திலும் ஸ்வீடனிலும், அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் வசிக்கும் தேசிய இனங்களுக்குக்கூட அது சமமாகப் பொருந்தும் என்பது வெளிப்படை. ஆயினும் இன்றைய சோஷலிஸ்ட் கட்சிகளின் செயல்திட்டங்கள் எதிலும் அதை நாம் காணமுடியவில்லை...'' (*Przeglad*, இதழ் 6, பக்கம் 483).

மார்க்ஸீயச் செயல்திட்டத்தின் 9வது பாராமீது இவ்வாறுதான் ரோஸா லுக்ஸம்பர்க் தமது தாக்குதலைத் துவக்குகிறார். இந்தப் பாரா ஒரு ''சாதாரண வெற்றுக் கோட்பாடு'' என்ற கருத்தை நம்மீது சுமத்த முயன்று, இந்த விஷயமானது ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இதர நாடுகளுக்கும் ''சமமாகப் பொருந்தும் என்பது வெளிப்படை'' என்று வியக்கத்தக்கத் துணிச்சலுடன் சொல்லும்பொழுது இதே தவறுக்குத் தாமே பலியாகிறார் ரோஸா லுக்ஸம்பர்க்.

பள்ளிச் சிறுவர்களுக்குப் பயிற்சிப் பாடங்களாகப் பயன்படுத்தக் கூடிய தர்க்கத் தவறுகள் அடங்கிய ஒரு தொகுதியைத் தமது கட்டுரையில் தர ரோஸா லுக்ஸம்பர்க் நிச்சயித்துள்ளார் என்பது தெளிவு என்று நாம் பதில் கூறுவோம். ஏனெனில் ரோஸா லுக்ஸம்பர்கின் கண்டனச் சொற்பிரவாகம் முற்றிலும் அர்த்தமற்றது. இப்பிரச்சினையை ஸ்தூல, வரலாற்று ரீதியாக மொழிதலின் கேலிக்கூத்து அது.

மார்க்ஸீயச் செயல்திட்டத்தைச் சிறுபிள்ளைத்தனமான முறையிலன்றி, மார்க்ஸீயமுறையில்ஒருவர்விளக்கிப் பொருள் கொள்வாரேயானால், அது பூர்ஷ்வா-ஜனநாயகத் தேசிய இயக்கங்களைக் குறிக்கிறது என்ற உண்மையைச் சுலபமாகப் புரிந்து கொள்வார். இது இவ்வாறு இருக்கும்பொழுது, இச்செயல்திட்டமானது பூர்ஷ்வா-ஜனநாயகத் தேசிய இயக்கங்கள் அனைத்துக்கும்''பரந்தவகையில்'' ஒரு ''சாதாரண வெற்றுக் கோட்பாடு'' என்ற வகையில் பொருந்தும் என்பது ''வெளிப்படை''. எங்கு எத்தகைய இயக்கம் உண்மையிலேயே நடைபெறுகிறதோ அந்த வழக்குகளை மட்டும்தான் நம் செயல்திட்டம் குறிப்பிடுகிறது என்கிற உண்மை ரோஸா லுக்ஸம்பர்குக்கும் — அவர் அதைப்பற்றிச் சிறிதேனும் சிந்திப்பாரானால் — தெளிவாகப் புலப்பட்டு விடும்.

தெள்ளத் தெளிவான இந்த கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் எல்லாம் பற்றி ரோஸா லுக்ஸம்பர்க் சிந்தித்திருப்பாரேயானால் தாம் எவ்வளவு அர்த்தமின்றிப் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை அவர் சுலபமாகப் புரிந்து கொண்டிருப்பார். ஒரு ''சாதாரண வெற்றுக் கோட்பாட்டை'' நாம் மொழிந்தோம் என்று அவர் நம்மைக் குற்றஞ் சாட்டும்பொழுது, பூர்ஷ்வா-ஜனநாயகத் தேசிய இயக்கங்கள் இல்லாத நாடுகளின் செயல்திட்டங்களில் சுயநிர்ணயத்தைப் பற்றிய பேச்சே இல்லை என்ற வாதத்தை நமக்கெதிராகப் பிரயோகிக்கிறார். மிகவும் புத்திசாலித்தனமான வாதம்தான்!

பல்வேறு நாடுகளின் அரசியல், பொருளாதார வளர்ச்சியையும் அவைகளின் மார்க்ஸீயச் செயல்திட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது மார்க்ஸீய நோக்கு நிலையிலிருந்து அதி முக்கியத்துவம் வாய்ந்தது; ஏனென்றால் நவீன அரசுகளும் ஒரு பொதுவான முதலாளித்துவத் தன்மையைப் பெற்றுள்ளன என்பதும், எனவே ஒரு பொதுவான வளர்ச்சி விதிக்குக் கட்டுப்பட்டுள்ளன என்பதும் சந்தேகத்துக்கு இடமில்லாத உண்மை. ஆனால் அவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்பதை நல்லறிவுடன் செய்ய வேண்டும். சம்பந்தப்பட்ட நாடுகளின் வளர்ச்சியின் வரலாற்றுக் கட்டங்கள் ஒப்பிடக்கூடியவைதானா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்; ஒப்புமை செய்வதற்கு முன் கவனிக்க வேண்டிய முதல் நிபந்தனை இது. உதாரணமாக, ருஷ்ய மார்க்ஸீயவாதிகளின் விவசாயச் செயல்திட்டத்தை மேற்கு ஐரோப்பியத் திட்டங்களுடன் ''ஒப்பிடும்'' திறமை சுத்த அறிவு சூன்யங்களுக்கு(உதாரணமாக ''ரூஸ்காயா மீஸிலில்''[10] இளவரசர் யெ. த்ருபெத்ஸ்கோய்) மட்டும்தான் உண்டு; ஏனென்றால் நமது செயல்திட்டமானது பூர்ஷ்வா-ஜனநாயக விவசாயச் சீரமைப்பு பற்றிய பிரச்சினைக்கு விடையளிக்கிறது; ஆனால் மேற்கு நாடுகளில் அத்தகைய பிரச்சினையே எழவில்லை.

தேசீயப் பிரச்சினைக்கும் இது பொருந்தும். பெரும்பாலான மேற்கு நாடுகளில் இப்பிரச்சினை நீண்ட நாட்களுக்கு முன்பே தீர்க்கப்பட்டுவிட்டது. இல்லாத பிரச்சினைகளுக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் செயல்திட்டங்களில் விடை

தேடுவது முட்டாள்தனமானது. இந்த விஷயத்தில் மிக முக்கியமானதொன்றை—பூர்ஷ்வா-ஜனநாயகச் சீரமைப்பு நீண்ட நாட்களுக்கு முன்பே நிறைவேற்றப்பட்டு விட்ட நாடுகளுக்கும் அது இன்னும் நிறைவேற்றப்படாத நாடுகளுக்கும் இடையிலான வேறுபாட்டை—ரோஸா லுக்ஸம்பர்க் காணத் தவறிவிட்டார்.

இந்த வேறுபாட்டில்தான் விஷயத்தின் சாரமே இருக்கிறது. ரோஸா லுக்ஸம்பர்க் அதை முழுமையாகப் புறக்கணித்து விடுவது அவரது சொல்லடுக்கு நிறைந்த கட்டுரையைப் பொருளற்ற, சாதாரணமான வெற்றுக் கோட்பாடுகளடங்கிய தொகுப்பாகச் செய்துவிடுகிறது.

மேற்கத்திய, கண்டப்பகுதி ஐரோப்பாவில் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிகளின் சகாப்தமானது திட்டவட்டமான ஒரு காலப்பகுதி. கிட்டத்தட்ட 1789லிருந்து 1871 வரையிலான காலம் அது எனலாம். இக்காலத்தில்தான் தேசீய இயக்கங்களும் தேசீய அரசுகளின் அமைப்பும் நிகழ்ந்தன. இந்தச் சகாப்தம் முடிவுக்கு வந்ததும் மேற்கு ஐரோப்பாவானது பூர்ஷ்வா அரசுகளைக் கொண்டதொரு நிலைபெற்ற அமைப்பு முறையாக உருப்பெற்று விட்டது; இவை பொதுவாகத் தேசீய ஒருமை கொண்ட அரசுகளாக இருந்தன. ஆகவே இன்று இந்தச் சமயத்தில் மேற்கு ஐரோப்பிய சோஷலிஸ்டுகளின் செயல்திட்டங்களில் சுயநிர்ணய உரிமையைத் தேடுவது தனக்கு மார்க்ஸீயத்தின் அரிச்சுவடிகூடத் தெரியாது என்பதைக் காட்டிக்கொள்வதாகும்.

கிழக்கு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிகளின் சகாப்தம் 1905ல் தான் தொடங்கிற்று. ருஷ்யா, பாரசீகம், துருக்கி, சீனு ஆகிய நாடுகளில் புரட்சிகள், பால்கன் போர்கள்—நமது "கீழை நாடுகளில்" நமது சகாப்தத்திய உலக நிகழ்ச்சிகளின் சங்கிலித் தொடர் இவ்வாறு இருக்கிறது. ஒரே தொடர்ச்சியாக, பூர்ஷ்வா-ஜனநாயகத் தேசீய இயக்கங்கள் மலர்ச்சி பெறுவதை நிகழ்ச்சிகளின் இச்சங்கிலித் தொடரில் ஒரு குருடன்தான் காணத் தவற முடியும்; இவ்வியக்கங்கள் தேசீய ரீதியில் சுயேச்சையான, தேசீய நோக்கில் ஒருமையையுடைய அரசுகளை உண்டுபண்ண முயல்கின்றன. ருஷ்யாவும் அண்டை நாடு

களும் இச்சகாப்தத்தைக் கடந்து கொண்டிருக்கிற ஒரே காரணத்திஞல்தான் தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமைபற்றிய ஒரு பிரிவை நமது செயல்திட்டத்தில் நாம் இடம்பெறச் செய்ய வேண்டும்.

ஆனுல் ரோஸா லுக்ஸம்பர்கின் கட்டுரையிலிருந்து எடுத்த மேற்கோளை இன்னும் சிறிது தொடர்ந்து பார்ப்போம். அவர் எழுதுகிருர்:

''...மிகவும் வெவ்வேருன தேசீய இனங்களைக் கொண்டதொரு அரசில் இயங்குகின்ற ஒரு கட்சியின் செயல்திட்டத்தில், தேசீயப் பிரச்சினையைத் தனக்கு முதல்தர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கொண்ட ஒரு கட்சியின் செயல்திட்டத்தில் — ஆஸ்திரிய சோஷல்-டெமாகிரடிக் கட்சியின் செயல்திட்டத்தில்—தேசீயஇனங்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை என்கிற கோட்பாடு இடம் பெறவில்லை என்பதைக் குறிப்பாகக் கவனிக்க வேண்டும்'' (அதே கட்டுரையில்).

இவ்வாருக, ஆஸ்திரியாவின் உதாரணத்தைக் ''குறிப்பாக'' எடுத்துக்காட்டி வாசகர்களை நம்பச் செய்வதற்கு ஒரு முயற்சி செய்யப்படுகிறது. ஸ்தூல வரலாற்று உண்மைகளைக் கொண்டு இந்த உதாரணத்தைப் பரிசீலனை செய்து அது எவ்வளவு அறிவார்ந்தது என்பதைக் காண்போம்.

முதன்முதலில், பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியின் முடிவு பற்றிய அடிப்படைப் பிரச்சினையை நாம் எடுத்துக்கொள்வோம். ஆஸ்திரியாவில் அப்புரட்சி 1848ல்தொடங்கி 1867ல் முடிவடைந்துவிட்டது. அப்பொழுதிருந்து ஏறத்தாழ அரை நூற்றுண்டு காலமாக ஓரளவு முழுமையாக நிறுவப்பட்ட பூர்ஷ்வா அரசியல் அமைப்புச் சட்டமானது நிலவி வருகிறது; அதன் அடிப்படையில் சட்டபூர்வமான தொழிலாளர் கட்சியொன்றும் சட்டபூர்வமாக இயங்கி வருகிறது.

ஆகவே, ஆஸ்திரியாவின் வளர்ச்சியின் உள்நாட்டு நிலைமைகளில் (அதாவது, பொதுவாக ஆஸ்திரியாவிலும் குறிப்பாக அதன் பல்வேறு தேசீய இனங்களிலும் முதலாளித்துவ வளர்ச்சியின் நோக்கு நிலையிலிருந்து) பாய்ச்சல்களைத் தோற்றுவித்து, அவற்றின் உடன் பிறவியாகத் தேசீய இன

ரீதியில் அமைந்த சுயேச்சை அரசுகள் தோன்றுவதற்கு உதவும் காரணிகள் ஒன்றும் இல்லை. தனது ஒப்புமை மூலமாக இந்த விஷயத்தில் ருஷ்யாவின் நிலைமையும் இதுதான் என்று ரோஸா லுக்ஸம்பர்க் எடுத்துக்கொள்ளும் பொழுது அடிப்படையிலேயே தவருன, வரலாற்றுக்கு முரணுனதொரு முடிவை மட்டும் அவர் மேற்கொள்ளவில்லை; தம்மையறியாமலேயே கலைப்புவாதத்திலும் நழுவி விடுகிருர்.

இரண்டாவதாக, ஆஸ்திரியாவில் வாழும் சிறு தேசீய இனங்களுக்கும் ருஷ்யாவில் வாழும் சிறு தேசீய இனங்களுக்கும் இடையிலான ஒப்புநிலைகளில் காணப்படும் ஆழ்ந்த வேறுபாடானது நாம் எடுத்துக்கொண்ட பிரச்சினைக்குவிசேஷமுக்கியத்துவம் வாய்ந்தது. ஆஸ்திரியா நீண்ட காலமாக ஜெர்மானியர்கள் பெரும்பான்மையினராக இருந்த அரசாக இருந்தது; அது மட்டுமின்றி ஜெர்மானிய தேசீய இனம் முழுவதின் தலைமை தங்களுக்குத்தான் என்றும் ஆஸ்திரிய ஜெர்மானியர்கள் உரிமை கொண்டாடினுர்கள். இந்த ''உரிமை'' 1866ல் நடந்த போரில் தவிடுபொடியாய் விட்டது என்பதை ரோஸா லுக்ஸம்பர்க் அன்புடன் நினைவு கூர்வார் என்று நினைக்கிறேம் (அவர்தாம் சாதாரண வெற்றுக் கோட்பாடுகளையும் மலிவான கடைச்சரக்குகளையும் அருவக் கருத்துக்களையும் வெறுப்பவர் எனத் தோன்றுகிறதே...). 1871ல் முழு உருவம் பெற்ற, சுதந்திர ஜெர்மன் அரசின் எல்லைக்கு வெளியே தான் இருப்பதை ஆஸ்திரியாவில் பெரும்பான்மையாக இருந்த ஜெர்மானிய தேசீய இனம் கண்டது. மறுபுறத்தில் 1849ம் ஆண்டிலேயே சுதந்திர தேசீய அரசு ஒன்றை உருவாக்குவதற்கான ஹங்கேரியர்களின் முயற்சி ருஷ்யப் பண்ணையடிமைகள் படையினுல் அடிபட்டு வீழ்ந்தது.

இவ்வாறு ஒரு விநோதமான நிலைமை உருவாகியது; ஹங்கேரியர்களும் பிறகு செக்குகளும் ஆஸ்திரியாவிலிருந்து தாங்கள் பிரிய முயலுவதற்குப் பதிலாக ஆஸ்திரியாவின் ஒருமைப்பாட்டைக் காக்க முயன்றனர். தங்களது தேசீய சுயேச்சையைக் காப்பதற்கெனவே இது. கொள்ளைக்கார, பலம்வாய்ந்த அண்டை நாடுகளால் தங்களது சுதந்திரம் நசுக்கப்பட்டு விட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தினுல்.

இந்த விநோதமான நிலைமையினால் ஆஸ்திரியா ஒரு இரண்டின அரசாக ஆயிற்று; இப்பொழுது அது மூவின அரசாகவும் (ஜெர்மானியர்கள், ஹங்கேரியர்கள், ஸ்லாவியர்கள்) மாறி வருகிறது.

இதையொத்தது ஏதாவது ருஷ்யாவில் உண்டா? இப்பொழுது இருப்பதைவிடவும் மோசமான தேசீய ஒடுக்கல் முறை வந்துவிடுமே என்ற அச்சத்தினால் உந்தப்பட்டுப் பெரிய-ருஷ்யர்களுடன் ஐக்கியப்பட்டிருக்க வேண்டுமென்று ''வேற்றினத்தவர்கள்'' நம் நாட்டில் முயலுகிறார்களா?

தேசீய இனங்களின் சுயநிர்ணயப் பிரச்சினை விஷயத்தில் ருஷ்யாவையும் ஆஸ்திரியாவையும் ஒப்பிடுவது பொருளற்றது, மலிவான கடைச்சரக்கின் அடிப்படையிலானது, அறியாமை நிறைந்தது என்பதைக் கண்டுகொள்வதற்கு இக்கேள்வியை எழுப்பினாலே போதும்.

தேசீயப் பிரச்சினை விஷயத்தில் ருஷ்யாவின் தனி விசேஷ நிலைமைகள் நாம் ஆஸ்திரியாவில் காண்பதற்கு எதிர் மாறானவையாகும். பெரிய-ருஷ்யா என்ற ஒரு தேசீய மையத்தைக் கொண்ட ஓர் அரசாகும் ருஷ்யா. பெரிய-ருஷ்யர்கள் பரந்த, இடையீடில்லாமல் தொடர்ச்சியாக நீண்டு கிடக்கும் ஒரு நிலப்பரப்பில் வசிக்கிறார்கள்; அவர்களின் தொகை சுமார் 7,00,00,000. இத்தேசீய அரசின் விசேஷ அம்சங்கள்: முதலாவது, ''வேற்றினத்தவர்'' எல்லையோரப் பிரதேசங்களில் வசிக்கிறார்கள்(இவர்கள்எல்லாரும் சேர்ந்து மொத்த மக்கட்தொகையில் பெரும்பான்மை—57 சதவிகிதம் ஆகிறார்கள்); இரண்டாவது, இந்த வேற்றினத்தவர் இங்கு அண்டை அரசுகளைக் காட்டிலும் (ஐரோப்பிய அரசுகளைக் காட்டிலும் மட்டும் அல்ல) அதிகமாக ஒடுக்கப்படுகிறார்கள்; மூன்றாவது, எல்லைப்புறப் பிரதேசங்களில் வாழும் பல ஒடுக்கப்பட்ட இனங்கள் எல்லைக்கு அப்பக்கத்திலும் தம் இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்வதைக் காண்கிறார்கள்; அவர்கள் தங்களைவிட அதிக தேசீய சுதந்திரம் பெற்றிருப்பதையும் காண்கிறார்கள் (மேற்கு, தெற்கு எல்லைகளில் பின்கள், ஸ்வீடிஷ்காரர்கள், போலந்துக்காரர்கள், உக்ரேனியர்கள், ருமேனியர்கள் ஆகியவர்களை நினைவுகூர்ந்தால்போதும்); நான்காவது, வேற்றினத்தவர்களைக் கொண்டுள்ள எல்லைப்

புறப் பிரதேசங்களில் அரசின் மையப்பகுதியைக் காட்டிலும் முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் கலாச்சாரத் தரமும் அநேக இடங்களில் உயர்ந்தவை. கடைசியாக, பூர்ஷ்வாப் புரட்சிகளும் தேசீய இயக்கங்களும் அவற்றின் ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் அண்டை ஆசிய அரசுகளில் துவங்கி, ருஷ்ய எல்லைகளுக்குள் உள்ள சகதேசீய இனங்கள் சிலவற்றுக்கும் பரவுவதை நாம் காண்கிறோம்.

இவ்வாறாக, ருஷ்யாவில் தேசீயப் பிரச்சினையின் விசேஷ, ஸ்தூலமான வரலாற்று அம்சங்கள்தான் தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையை நாம் இன்றையக் காலக்கட்டத்தில் ஏற்றுக் கொள்வதை நம் நாட்டில் விசேஷ உடனடி முக்கியத் துவம் வாய்ந்த ஒரு விஷயமாக்குகின்றன

தவிர, தூய மெய்விவரங்களின் நோக்கிலிருந்து பார்த் தால்கூட ஆஸ்திரிய சோஷல்-டெமாகிராட்டுகளின் செயல் திட்டத்தில் தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற ரோஸா லுக்ஸம்பர்கின் வலிந் துரை தவறானது. தேசீயச் செயல்திட்டத்தை[11] ஏற்றுக் கொண்ட புருன் காங்கிரசின் நிகழ்ச்சிப் பதிவேட்டை நாம் திறந்து பார்த்தால் போதும். உக்ரேனிய (ருஸீனிய) பிரதி நிதிகளின் சார்பில் ருஸீனிய சோஷல்-டெமாகிராட்டான ஹன்கேவிச்சும் (நிகழ்ச்சிப் பதிவேட்டின் பக்கம் 85), போலிஷ் பிரதிநிதிகளின் சார்பில் போலந்தின் சோஷல்-டெமா கிராட்டாகிய ரேகெரும் (பக்கம் 108) வெளியிட்ட அறிக் கைகள் அப்பதிவேட்டில் இருப்பதைக் காண்கிறோம். தேசீய ஒற்றுமையையும் தங்களது தேசீய இனங்களின் சுதந்திரத் தையும் சுயேச்சையையும் பெறுவதே மேற்சொன்ன இரு தேசீய இனங்களையும் சேர்ந்த ஆஸ்திரிய சோஷல்-டெமாகி ராட்டுகளின் அபிலாஷைகளில் ஒன்று என்கின்றன அந்த அறிக்கைகள். எனவே தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஆஸ்திரிய சோஷல்-டெமாகிராட்டுகள் தங்களது செயல்திட்டத்தில் நேர்முகமாகச் சேர்த்துக் கொள்ளவில்லை என்றாலும்கூட தங்களது கட்சியின் சில பகுதிகள் தேசீய விடு தலை, சுயேச்சை என்ற கோரிக்கையை எழுப்புவதற்கு அவர் கள் அனுமதித்திருக்கின்றனர். எதார்த்தத்தில் தேசீய இனங் களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டதாகத்தானே

இதற்குப் பொருள்! இவ்வாறாக, ஆஸ்திரியாவைப் பற்றிய ரோஸா லுக்ஸம்பர்கின் குறிப்புகள் ரோஸா லுக்ஸம்பர்கிற்கு எதிராகவே எல்லா அம்சங்களிலும் அமைந்திருக்கின்றன.

## 4. தேசியப் பிரச்சினையில் "செயல்பூர்வ்வாதம்"

நமது செயல்திட்டத்தின் 9வது பாராவில்''செயல்பூர்வமானது'' ஒன்றுமில்லை என்ற ரோஸா லுக்ஸம்பர்கின் வாதத்தைச் சந்தர்ப்பவாதிகள் அசாதாரண உற்சாகத்துடன் பிடித்துக்கொண்டு விட்டார்கள். அவரது கட்டுரையின் சில பகுதிகளில் இந்தக் ''கோஷமானது'' ஒரே பக்கத்தில் எட்டுத் தடவை திருப்பித் திருப்பிச் சொல்லப்படுகிறது; ரோஸா லுக்ஸம்பர்குக்கு இவ்வாதத்தில் அவ்வளவு மகிழ்ச்சி.

அவர் எழுதுகிறார்: 9வது பாரா ''பாட்டாளி வர்க்கத்தின் அன்றாடக் கொள்கைக்குச் செயல்பூர்வமான வழி காட்டவில்லை, தேசியப் பிரச்சினைகளுக்குச் செயல்பூர்வமான தீர்வு காணவில்லை''.

இந்த வாதத்தை நாம் பரிசீலனை செய்வோம். 9வது பாரா அர்த்தமற்றது என்று தோன்றும்படி செய்யுமளவுக்கும், அல்லது, எல்லாத் தேசிய அபிலாஷைகளையும் நாம் ஆதரிக்குமாறு நம்மைக் கட்டுப்படுத்தும் அளவுக்கும் இன்னொரு இடத்தில் வேறு விதமாகக் கூறப்படுகிறது.

தேசியப் பிரச்சினையில் ''செயல்பூர்வம்'' என்ற கோரிக்கையின் உட்பொருள் என்ன?

அதன் உட்பொருள் பின்வரும் மூன்றில் ஒன்றுதான்: தேசிய அபிலாஷைகள் அனைத்துக்கும் ஆதரவு; எந்த ஒரு தேசிய இனமும் தனியே பிரிந்து போகும் பிரச்சினைக்குச் ''சரி'' அல்லது ''இல்லை'' என்ற பதில்; அல்லது, பொதுவாகத் தேசியக் கோரிக்கைகள் உடனடியாகச் ''செயல்பூர்வமானவை'' என்பது.

''செயல்பூர்வம்'' என்ற கோரிக்கைக்குச் சாத்தியமான இந்த மூன்று பொருள்களையும் நாம் பரிசீலனை செய்வோம்.

எல்லாவகைத் தேசிய இயக்கங்களின் தொடக்கத்திலும் இயற்கையாகத் தலைமையைத் தானே எடுத்துக்கொள்ளு

கின்ற பூர்ஷ்வா வர்க்கம் எல்லாத் தேசிய அபிலாஷைகளையும் ஆதரிப்பது செயல்பூர்வமானது என்று கூறுகிறது. ஆயினும் தேசியப் பிரச்சினையில் (மற்ற எல்லாப் பிரச்சினைகளிலும் போலவே) பாட்டாளி வர்க்கக் கொள்கையானது ஒரு குறிப்பிட்ட திசையில் மட்டுமே பூர்ஷ்வாக்களை ஆதரிக்கிறது; ஆனால் அது பூர்ஷ்வாக்களின் கொள்கையோடு எந்த சமயத்திலும் முற்றிலும் பொருந்தி விடுவதில்லை. தேசிய அமைதியைப் பெறுவதற்காக வேண்டி (இந்த அமைதியைப் பூர்ஷ்வாக்களால் பூரணமாக ஏற்படுத்த முடியாது; முழு ஜனநாயகம் மூலமாக மட்டுமே இதை அடைய முடியும்), சம உரிமைகள் பெறவேண்டி, வர்க்கப் போராட்டத்துக்குச் சிறந்த நிலைமைகளைத் தோற்றுவிக்க வேண்டி தொழிலாளர் வர்க்கம் பூர்ஷ்வாக்களை ஆதரிக்கிறது. எனவே, பூர்ஷ்வாக்களின் செயல் பூர்வவாதத்துக்கு எதிராகத்தான், தேசியப் பிரச்சினையில் பாட்டாளிகள் தங்களது கோட்பாடுகளை கொண்ட கொள்கையை எடுத்துரைக்கிறார்கள். அவர்கள் பூர்ஷ்வாக்களுக்கு நிபந்தனையோடு கூடிய ஆதரவைத் தான் அளிக்கிறார்கள். தங்களது தேசிய இனத்துக்கு விசேஷ உரிமைகள் அல்லது விசேஷ ஆதாயங்கள்—இவைதான் ஒவ்வொரு பூர்ஷ்வா வர்க்கமும் தேசியப் பிரச்சினையில் அடைய விரும்புவது; இதுதான் ''செயல்பூர்வமாயிருத்தல்'' என்பது. பாட்டாளி வர்க்கமோ, விசேஷ உரிமைகள் அனைத்தையும் தனிச் சலுகைகள் அனைத்தையும் எதிர்க்கிறது. ''செயல்பூர்வமாக'' அது இருக்க வேண்டுமென்று கேட்பது பூர்ஷ்வாக்களின் தலைமையை ஏற்றுக் கொள்வது, சந்தர்ப்பவாதத்தில் சிக்கிக் கொள்வது என்றுதான் பொருள்படும்.

ஒவ்வொரு தேசிய இனத்தின் விஷயத்திலும் தனியே பிரிந்துபோகும் பிரச்சினை பற்றி ''சரி'' அல்லது ''இல்லை'' என்று பதிலளிக்க வேண்டுமென்று கோருவது மிகச் ''செயல் பூர்வமான'' ஒன்றாகத் தோன்றலாம். ஆனால் அது உண்மையில் அபத்தமானது; சித்தாந்த ரீதியில் பார்த்தால் அது மாறாநிலைவாத வகைப்பட்டது; நடைமுறையிலோ அது பூர்ஷ்வாக்களின் கொள்கைக்குப் பாட்டாளி வர்க்கத்தைக் கீழ்ப்படுத்துகிறது. பூர்ஷ்வா வர்க்கம் தனது தேசியக் கோரிக்கைகளுக்கு எப்பொழுதுமே முதலிடம் அளிக்கிறது; அதை

யும் ஒரு உறுதியான நிபந்தனையற்ற முறையில் செய்கிறது. ஆனால் பாட்டாளி வர்க்கத்துக்கோ வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்குக் கீழ்ப்பட்டவை தாம் இக்கோரிக்கைகள். சித்தாந்த ரீதியாகப் பார்த்தால், பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியானது ஒரு குறிப்பிட்ட தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்திலிருந்து பிரிந்து போவதில் முடியுமா அல்லது அதனுடன் சம அந்தஸ்து பெறுவதில் முடியுமா என்பதை முன்கூட்டியே யாரும் சொல்ல முடியாது; முடிவு இரண்டில் எதுவானாலும் தனது வர்க்கத்தின் அபிவிருத்திக்கு வழிசெய்வதுதான் பாட்டாளி வர்க்கத்துக்கு முக்கியமானது. பூர்ஷ்வா வர்க்கத்துக்கோ, ''தன்னுடைய சொந்த'' தேசிய இனத்தின் குறிக்கோள்களைப் பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோள்களுக்கு முந்தியதாக வைத்து இந்த அபிவிருத்தியைத் தடை செய்ய வேண்டும் என்பதுதான் முக்கியம். எனவேதான், பாட்டாளி வர்க்கமானது எந்தத் தேசிய இனத்துக்கும் உத்தரவாதங்கள் அளிக்காமல், இன்னொரு தேசிய இனத்துக்குப் பாதகமான முறையில் எதையும் செய்வோம் என்று உறுதி கூறாமல், சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்ற எதிர்மறைக் கோரிக்கையுடன் மட்டும் தன்னை நிறுத்திக் கொள்கிறது.

இது ''செயல்பூர்வமானதாக'' இல்லாமல் இருக்கலாம்; ஆனால் சாத்தியமான தீர்வுகள் அனைத்திலும் மிகவும் ஜனநாயகமான தீர்வு ஒன்றைப் பெறுவதற்கு இது ஒன்றுதான் நடைமுறையில் சிறந்த உத்தரவாதமளிக்கிறது. பாட்டாளி வர்க்கத்துக்கு அத்தகையதொரு உத்தரவாதம்தான்தேவை; ஆனால் எந்த ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த பூர்ஷ்வா வர்க்கத்துக்கும், மற்ற தேசிய இனங்களின் நிலைமை (அல்லது அவைகளுக்கு நேரக்கூடிய பிரதிகூலம்) எதுவாயிருப்பினும், தனது சொந்த நலன்களுக்கு வேண்டிய உத்தரவாதங்கள் மட்டும் தான் தேவை.

இந்தக் கோரிக்கையின் ''நடைமுறைச் சாத்தியப்பாட்டைப்'' பற்றித்தான் பூர்ஷ்வாக்கள் பெரிதும் அக்கறைப்படுகிறார்கள்; ஆகவேதான் மற்ற தேசிய இனங்களின் பூர்ஷ்வாக்களுடன் பாட்டாளி வர்க்கத்துக்குக் குந்தகமான முறையில் உடன்பாட்டுக்கு வரும் கொள்கையை அவர்கள் மாறாமல்

கடைப்பிடிக்கிறுர்கள். ஆனுல் பூர்ஷ்வாக்களுக்கெதிராகத் தனது வர்க்கத்தைப் பலப்படுத்தி, முரண்பாடற்ற ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றின் உணர்வைப் பொது மக்களுக்கு ஊட்டுவதுதான் பாட்டாளி வர்க்கத்துக்கு முக்கிய மானது.

சந்தர்ப்பவாதிகளைப் பொறுத்தவரை இது ''செயல் பூர்வமானதாக'' இல்லாமலிருக்கலாம்; ஆனுல் நிலப்பிரபுக்கள், தேசீயவாத பூர்ஷ்வாக்கள் ஆகியவர்களையும் மீறிய வகையில் தேசீய இனங்களுக்கிடையில் அதிகச் சம அந்தஸ்தையும் சமாதானத்தையும் உண்டுபண்ண இது ஒன்றுதான் உண்மையான உத்தரவாதமளிக்கிறது.

ஒவ்வொரு தேசீய இனத்தையும் சேர்ந்த தேசீயவாத பூர்ஷ்வாக்களின் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் தேசீயப் பிரச்சினையில் பாட்டாளிகளின் பணி முழுதும் ''செயல் பூர்வமானதல்ல''; ஏனென்ருல், எவ்வகையான தேசீய வாதத்தையும் எதிர்க்கும் பாட்டாளிகள் ''அருவமான'' சம அந்தஸ்தைக் கோருகிருர்கள்; சிறிதளவில்கூட யாருக்கும் விசேஷ உரிமைகள் இருக்கக்கூடாது என்று கோட்பாட்டு அடிப்படையில் அவர்கள் கோருகிருர்கள். செயல்பூர்வம் என்ற வாதத்திற்குத் தவருன வகையில் புகழ்பாடும் ரோஸா லுக்ஸம்பர்க் இதைப் புரிந்து கொள்ளாமல் சந்தர்ப்பவாதிகளுக்கு—விசேஷமாகப் பெரிய-ருஷ்ய தேசீயவாதத்துக்கு சந்தர்ப்பவாதச் சலுகைகள் கொடுக்கப்படுவதற்கு—வழி செய்துவிட்டார்.

ஏன் பெரிய-ருஷ்ய தேசீயவாதத்துக்குச் சலுகைகள் என்று கூறுகிருேம்? ஏனென்ருல் பெரிய - ருஷ்யர்கள்தாம் ருஷ்யாவில் ஒடுக்கும் தேசீய இனமாயிருக்கிருர்கள்; எனவே தேசீயப் பிரச்சினையில் சந்தர்ப்பவாதம் என்பது ஒடுக்கும் தேசீய இனங்களிலிருந்து வேறுவிதமான வகையில் ஒடுக்கப்படும் தேசீய இனங்களிடையில் நிலவும்.

தனது கோரிக்கைகள் ''செயல்பூர்வமானவை'' என்று காரணங்கூறி, ஒடுக்கப்பட்ட தேசீய இனங்களின் பூர்ஷ்வா வர்க்கம், தனது அபிலாஷைகளை நிபந்தனைகளின்றி ஆதரிக்குமாறு பாட்டாளி வர்க்கத்தைக் கேட்டுக்கொள்ளும். எல்லாத் தேசீய இனங்களுக்கும் பிரிந்து போகும் உரிமை உண்டு

என்று சொல்லுவதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட தேசிய இனம் பிரிந்து போவதற்குச் ''சரி'' என்று தெளிவாகச் சொல்லுவதுதான் மிகவும் செயல்பூர்வமான நடவடிக்கை!

இத்தகைய செயல்பூர்வவாதத்துக்கெதிராக நிற்கிறது பாட்டாளி வர்க்கம். சம அந்தஸ்தும் தேசிய அரசு அமைக்கும் சம உரிமைகளும் வேண்டும் என்பதை அங்கீகரிக்கும் அதே சமயத்தில் எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த பாட்டாளிகள் கூட்டாக இணைந்திருப்பதை மிகவும் முதன்மையானதாகக் கருதிப்போற்றுகிறது; எந்த ஒரு தேசியக் கோரிக்கையையும் ஒரு எந்த தேசியப் பிரிவினையையும் தொழிலாளர் வர்க்கப் போராட்டம் என்ற கோணத்திலிருந்து மதிப்பிடுகிறது. செயல்பூர்வ்வாதத்துக்கான இவ்வறைகூவல், உண்மையில் பூர்ஷ்வாக்களின்அபிலாஷைகளைக் கண்ணைமூடிக் கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான அறை கூவலே.

பிரிந்துபோகும் உரிமையை ஆதரிப்பதன் மூலம் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பூர்ஷ்வா தேசியவாதத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்று நம்மைப் பார்த்துக் கூறுகிறார்கள். ரோஸா லுக்ஸம்பர்க் இதைத்தான் சொல்கிறார்; அவர் சொல்வதை எதிரொலிக்கிறார் சந்தர்ப்பவாதியாகிய ஸெம்கோவ்ஸ்கிய்—கலைப்புவாதச் செய்தித்தாளில் இப்பிரச்சினைபற்றிய கலைப்புவாதக் கருத்துக்களின் ஒரே பிரதிநிதி இவர்தான்!

இதற்கு நமது பதில் இதுதான்: இல்லை; இப்பிரச்சினைக்குச் ''செயல்பூர்வமான'' தீர்வுகாணுவது பூர்ஷ்வாக்களுக்குத்தான் முக்கியமானது. இரு போக்குகளின் கோட்பாடுகளையும் வேறுபடுத்தி அறிவதுதான் தொழிலாளர்களுக்கு முக்கியமானது. ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் பூர்ஷ்வா வர்க்கம் ஒடுக்கும் தேசிய இனத்தை எதிர்த்து எந்த அளவுக்குப் போராடுகின்றதோ நாம் அந்த அளவுக்கு அப்போராட்டத்தை ஒவ்வொரு வழக்கிலும் மற்றவர்களைக் காட்டிலும் அதிக உறுதியாக ஆதரிக்கிறோம்: ஏனென்றால் ஒடுக்குதலுக்குத் தீவிரமான சிறிதும் விட்டுக்கொடுக்காத எதிரி நாம்தான். ஆனால், ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் பூர்ஷ்வா வர்க்கம் எந்த அளவுக்குத் தனது சொந்த பூர்ஷ்வா தேசியவாதத்துக்

காகப் போராடுகிறதோ அந்த அளவுக்கு நாம் அதை எதிர்க்கிறோம். ஒடுக்கும் தேசீய இனத்தின் விசேஷ உரிமைகளுக்கும் பலாத்காரத்துக்கும் எதிராக நாம் போராடுகிறோம்; ஒடுக்கப்பட்ட தேசீய இனம் தனக்கு விசேஷ உரிமைகள் வேண்டுமென்று முயல்வதையும் எவ்விதத்திலும் அனுமதிக்க மாட்டோம்.

நமது அரசியல் கிளர்ச்சியில் பிரிந்துபோகும் உரிமை பற்றிய கோஷத்தை முன்வைத்து ஆதரித்துப் பேசத் தவறினால் நாம் பூர்ஷ்வாக்களின் நோக்கத்துக்கே உதவுவோம் என்பது மட்டுமல்ல; ஒடுக்குகின்ற தேசீய இனத்தின் நிலப்பிரபுக்களின், அதன் வரம்பிலா ஆட்சியின் நோக்கத்துக்கே கூட உதவுவோம். நெடுநாட்களுக்கு முன்பே காவுத்ஸ்கி ரோஸா லுக்ஸம்பர்குக்கு எதிராக இந்த வாதத்தைப் பயன்படுத்தினார். இந்த வாதம் மறுக்க முடியாதது. போலந்தின் தேசீயவாத பூர்ஷ்வாக்களுக்கு ''உதவக்'' கூடாதே என்ற கவலையில் ரோஸா லுக்ஸம்பர்க் ருஷ்யாவில் மார்க்ஸீயவாதிகளின் செயல்திட்டத்தில் காணப்படும் பிரிந்து போகும் உரிமையை நிராகரிக்கிறார்; அப்படிச் செய்கையில் பெரிய-ருஷ்யக் கறுப்பு நூற்றுவர்களுக்கு உண்மையில் அவர் உதவுகிறார். பெரிய-ருஷ்யர்களின் விசேஷ உரிமைகளை (இவைகளையும்விட மோசமானவைகளை)ச் சந்தர்ப்பவாத நோக்கில் சகித்துக் கொண்டிருப்பதற்கு உண்மையில் உதவுகிறார்.

போலந்தில் தேசீயவாதத்துக்கெதிராக நடைபெறும் போராட்டத்தின் ஆர்வத்தினால் உந்தப்பட்டு ரோஸா லுக்ஸம்பர்க் பெரிய-ருஷ்யர்களின் தேசீயவாதத்தை மறந்துவிட்டார். இந்தத் தேசீயவாதம்தான் தற்சமயம் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. இந்தத் தேசீயவாதத்தில் பூர்ஷ்வா அம்சங்களைவிட நிலப்பிரபுத்துவ அம்சங்களே அதிகம்; இதுதான் ஜனநாயகத்துக்கும் பாட்டாளிகளின் போராட்டத்துக்கும் முக்கியத் தடையாக விளங்குகிறது. ஒடுக்கப்படும் தேசீய இனத்தின் எந்த பூர்ஷ்வாத் தேசீயவாதத்திலும் ஒடுக்கல் முறைக்கு எதிரான பொதுவான ஜனநாயகத் தன்மையொன்று இருக்கிறது; இந்தத் தன்மையைத்தான் நிபந்தனையேதுமின்றி நாம் ஆதரிக்கிறோம். அதே சமயத்தில், தேசீயத் தனித்துவத்தை நோக்கிய போக்கிலிருந்து இந்த

ஜனநாயகத் தன்மை முற்றிலும் வேறுனது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம்; யூதர்களை ஒடுக்கும் போலிஷ் பூர்ஷ்வாக்களின் போக்கையும் மற்றும் அது போன்றவற்றையும் எதிர்த்து நாம் போராடுகிறோம்.

பூர்ஷ்வாக்கள், பிலிஸ்டைன்களின் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் இது ''செயல்பூர்வமல்லாதது''. ஆனால் தேசீயப் பிரச்சினையில் செயல்பூர்வமானதும் கோட்பாடுகளின் அடிப்படையிலமைந்ததும், ஜனநாயகம், சுதந்திரம், பாட்டாளி வர்க்க ஐக்கியம் ஆகியவற்றை உண்மையில் பேணுகின்றதுமான கொள்கை இதுதான்.

எல்லாத் தேசீய இனங்களுக்கும் பிரிந்துபோகிற உரிமையை ஒப்புக்கொள்வது; பிரிந்துபோகிற பிரச்சினை எழுகின்ற போது எல்லா ஏற்றத்தாழ்வுகளையும், எல்லா விசேஷ உரிமைகளையும், எல்லாத் தனித்துவப் போக்கையும் நீக்கும் நோக்கத்துடன் அதை அணுகிச் சீர்தூக்கிப் பார்ப்பது.

ஒடுக்கும் தேசீய இனம் ஒன்றின் நிலையை நாம் கவனிப்போம். மற்ற தேசீய இனங்களை ஒடுக்கும் ஒரு தேசீய இனம் சுதந்திரமாயிருக்க முடியுமா? முடியாது. பெரிய-ருஷ்ய மக்களின்* சுதந்திரத்தைப் பேண வேண்டுமென்றால் அத்தகைய ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட வேண்டும். ஒடுக்கப்பட்ட தேசீய இனங்களின் இயக்கங்களை நசுக்குவதும், அவைகளை நசுக்க வேண்டும் என்று ''மேல்'' வர்க்கங்கள் திட்டமிட்டுப் பிரசாரம் செய்வதும் பல நூற்றுண்டுகளான வரலாறு. இவை பெரிய-ருஷ்ய மக்களின் சுதந்திரத்துக்கு தப்பெண்ணங்கள் போன்றவற்றின் உருவத்தில் பெரும் தடைகளை ஏற்படுத்தியுள்ளது.

பெரிய-ருஷ்யக் கறுப்பு நூற்றுவர்கள்[12] இந்தத் தப்

---

* பாரிஸிலிருக்கும் ல. விளா. என்ற ஒருவர் இந்தச் சொல் மார்க்ஸீயரீதியானது அல்ல என்று கருதுகிறார். இந்த ல. விளா. வியக்கத்தக்க "superklug" (அதிபுத்திசாலி). ''அதிபுத்திசாலியாகிய'' ல. விளா. (வர்க்கப் போராட்டத்தைக் கருத்தில் கொண்டு!) நமது குறைந்தபட்சச் செயல்திட்டத்திலிருந்து ''மக்கள்'', ''தேசீய இனம்'' முதலிய சொற்களை நீக்கிவிடுவது பற்றி ஒரு கட்டுரை வரைய விரும்புகிறார் என்று தெரிகிறது.

பெண்ணங்களை வேண்டுமென்றே பேணி வளர்த்து ஊக்குவிக்கிறார்கள். பெரிய-ருஷ்ய பூர்ஷ்வாக்கள் இவைகளைச் சகித்துக்கொண்டு அல்லது அவற்றிற்கு இசைய நடந்து கொண்டு இருக்கிறார்கள். இத்தப்பெண்ணங்களை முறையாகத் திட்டமிட்டு எதிர்த்துப் போரிடாமல் பெரிய-ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் தனது சொந்தக் குறிக்கோள்களை அடையவோ தனது சுதந்திரப் பாதையிலுள்ள தடைகளை அப்புறப்படுத்தவோ முடியாது.

ருஷ்யாவில் சுதந்திரமான, சுயேச்சையான தேசீய அரசு ஒன்று ஏற்படுத்திக் கொள்வது என்பது தற்சமயம் பெரிய-ருஷ்ய தேசீய இனத்துக்கு மட்டுமேயான ஒரு தனிச்சலுகையாக இருக்கிறது. எந்தத் தனிச் சலுகைகளையும் ஆதரிக்காத பெரிய-ருஷ்யப் பாட்டாளிகளாகிய நாம் இந்தத் தனிச் சலுகையையும் ஆதரித்துக் காக்க மாட்டோம். ஒரு திட்டவட்டமான அரசு என்ற அடிப்படையில் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்; இந்த அரசில் வாழும் தேசீய இனங்கள் அனைத்தையும் சேர்ந்த தொழிலாளர்களை நாம் ஒற்றுமைப் படுத்துகிறோம்; எந்தக் குறிப்பிட்ட தேசீய வளர்ச்சிப் பாதையைப் பற்றியும் நாம் உத்தரவாதமளிக்க முடியாது; ஏனென்றால் சாத்தியமான எல்லாப் பாதைகள் வழியாகவும் நமது வர்க்க இலட்சியத்தை நோக்கி நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆயினும், எல்லா வகைத் தேசீயவாதத்தையும் எதிர்த்துப் போராடி, பல்வேறு தேசீய இனங்களின் சம அந்தஸ்தையும் ஆதரித்தாலொழிய நாம் அந்த இலட்சியத்தை நோக்கி முன்னேற முடியாது. உதாரணமாக, உக்ரேய்ன ஒரு சுதந்திர அரசாக அமையுமா என்பது முன்கூட்டியே அறியமுடியாத ஆயிரம் காரணிகளால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று. பயனற்ற ''ஊகங்களைச்'' செய்ய நாம் முற்படாமல், சந்தேகத்துக்கிடமில்லாத ஒன்றை—உக்ரேய்னவுக்கு அத்தகையதொரு அரசாக அமைய உரிமையுண்டு என்பதை—உறுதியாக ஆதரிக்கிறோம். இந்த உரிமையை நாம் மதிக்கிறோம்; உக்ரேனியர்கள் விஷயத்தில் பெரிய-ருஷ்யர்களுக்கிருக்கும் தனிச் சலுகைகளை நாம் ஆதரிக்கவில்லை; இந்த உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்ற உணர்வை,

எந்த ஒரு தேசிய இனத்துக்கும் விசேஷ அரசு உரிமைகள் இருப்பதை நிராகரிக்க வேண்டும் என்ற உணர்வை நாம் பொதுமக்களுக்கு ஊட்டுகிறோம்.

பூர்ஷ்வாப் புரட்சிகளின் சகாப்தத்தில் எல்லா நாடுகளும் பாய்ந்து முன்னேற்றமடைந்துள்ளன. இப்பாய்ச்சலில் ஒரு தேசிய அரசு அமைத்துக்கொள்ளும் உரிமை பற்றி மோதல்களும் போராட்டங்களும் நடைபெறக் கூடும் சாத்தியமாகும். பெரிய-ருஷ்யர்களின் விசேஷ உரிமைகளை நாம் எதிர்க்கிறோம் என்று பாட்டாளிகளாகிய நாம் முன்கூட்டியே அறிவிக்கிறோம். இதுதான் நமது பிரசாரம், கிளர்ச்சி முழுவதுக்கும் வழிகாட்டுகிறது.

''செயல்பூர்வவாதத்தைத்'' தேடி அடைய முயல்வது காரணமாக, பெரிய-ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தினுடையதும் மற்ற தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்கத்தினுடையதும் ஆகிய இரண்டினுடைய தலையாய நடைமுறைக் கடமையை மறந்து விட்டார் ரோஸா லுக்ஸம்பர்க். அக்கடமை: விசேஷ அரசுரிமைகள், விசேஷ தேசிய உரிமைகள் அனைத்துக்கும் எதிராகவும், எல்லாத் தேசிய இனங்களுக்கும் தங்களது தேசிய அரசுகளை அமைத்துக்கொள்ளச் சம உரிமையுண்டு என்பதை ஆதரித்தும் அன்றாடக் கிளர்ச்சியும், பிரச்சாரம் செய்தலும் தான். (தற்சமயத்தில்) தேசியப் பிரச்சினையில் இது நமது தலையாய கடமை; ஏனென்றால் ஜனநாயகத்தின் நலன்களை, எல்லாத் தேசிய இனங்களைச் சேர்ந்த பாட்டாளிகளும் சம அந்தஸ்துடன் ஒரு கூட்டணி அமைத்துக் கொள்வதை இவ்விதமாகத்தான் நாம் ஆதரிக்க முடியும்.

பெரிய-ருஷ்ய ஒடுக்கு முறையாளர்களது நோக்கு நிலையிலிருந்து பார்த்தால், ஒடுக்கப்படும் தேசிய இனங்களைச் சேர்ந்த பூர்ஷ்வாக்களது நோக்கு நிலையிலிருந்து பார்த்தாலும்கூட இந்தப் பிரச்சாரம் ''செயல்பூர்வமற்றதாகத்'' தோன்றலாம் (இரு சாராரும் திட்டமாகச் ''சரி'' அல்லது ''இல்லை'' என்ற பதிலை எதிர்பார்க்கிறார்கள்; சோஷல்-டெமாகிராட்டுகள் ''தெளிவில்லாமல்'' இருக்கிறார்கள் என்றும் இவர்கள் குறை கூறுகிறார்கள்). உண்மையில் இந்தப் பிரச்சாரம்தான், இந்தப் பிரச்சாரம் மட்டும்தான், மெய்யாகவே ஜனநாயக, மெய்யாகவே சோஷலிஸப் படிப்பினைகளைப்

பொதுமக்கட்கு ஊட்டுகிறது. ருஷ்யா ஒரு பல தேசீய இன அரசாக இருக்குமானுல் அதில் தேசீய அமைதி நிலவுவதற்கும், அது தனியான பல தேசீய இன அரசுகளாகப் பிரிய வேண்டுமானுல் மிகவும் அமைதியாகப் (பாட்டாளி வர்க்கப் போராட்டத்துக்குத் தீங்கற்ற முறையில்) பிரிவதற்கும் மிக அதிக வாய்ப்புக்களை இந்தப் பிரச்சாரம் மட்டும்தான் உறுதியாக்க முடியும்.

தேசீயப் பிரச்சினையில்இந்தக் கொள்கையை—பாட்டாளிகளின் ஒரே கொள்கையை—மேலும் ஸ்தூலமாக விளக்குவதற்காக, ''தேசீய இனங்களின் சுயநிர்ணயம்'' பற்றிப் பெரிய-ருஷ்ய மிதவாதத்தின் போக்கையும், ஸ்வீடனிலிருந்தும் நார்வே பிரிந்து போன உதாரணத்தையும் நாம் ஆராய்வோம்.

## 5. தேசீயப் பிரச்சினைபற்றி மிதவாத பூர்ஷ்வாக்களும் சோஷலிஸ்ட் சந்தர்ப்பவாதிகளும்

ருஷ்யாவில் மார்க்ஸீயவாதிகளின் செயல்திட்டத்துக்கு எதிரான தமது போராட்டத்தில் ரோஸா லுக்ஸம்பர்கின் ''துருப்புச் சீட்டுக்களில்'' ஒன்ருகக் கீழ்வரும் வாதம் விளங்குகிறது என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம்; அதாவது, சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வது, ஒடுக்கப்படும் தேசீய இனங்களின் பூர்ஷ்வாத் தேசீயவாதத்துக்கு ஆதரவு அளிப்பதாகும். மறுபுறத்தில் மற்ற தேசீய இனங்களுக்கு எதிரான எல்லாப் பலாத்காரத்தையும் எதிர்த்துப் போராடுவதுதான் இந்த உரிமையின் பொருள் என்ருல், அச்செயல் திட்டத்தில் அதற்காக ஒரு தனிப்பிரிவுக்கு அவசியமே இல்லை என்றும் அவர் கூறுகிருர்; ஏனென்ருல்சோஷல்-டெமாகிராட்டுகள்தாம் பொதுவாக எல்லாத் தேசீய ஒடுக்கல் முறையையும் ஏற்றத்தாழ்வுகளையும் எதிர்க்கிருர்கள்.

முதல் வாதமானது, சுமார் இருபது ஆண்டுகட்கு முன்னரே காவுத்ஸ்கி மறுக்க முடியாதபடி நிரூபித்து விட்டபடி, தேசீயவாதத்தைப் பிறர் தலையில் சாட்டுவதாகும். ஒடுக்கப்

பட்ட தேசீய இனங்களின் பூர்ஷ்வாக்களது தேசீயவாதத்துக்குப் பயந்து, பெரிய-ருஷ்யர்களின் கறுப்புநூற்றுவர் தேசீயவாதத்துக்கு வழிதிறந்து விடும் வகையில் உண்மையில் நடக்கிருர் ரோஸா லுக்ஸம்பர்க். அவரது இரண்டாவது வாதமானது, தேசீய இனங்களின் சம அந்தஸ்தை ஏற்றுக் கொள்வது பிரிந்துபோகும் உரிமையையும் ஏற்றுக்கொள்வதாகுமா அல்லது ஆகாதா என்ற கேள்விக்குப் பதிலளிக்க உண்மையில் பயந்து மழுப்புவதாகும். அவ்வாறு ஏற்றுக் கொள்வதாகும் என்ருல் கோட்பாட்டு ரீதியில் நமது செயல் திட்டத்தின் 9வது பாரா சரியானது என்பதை ரோஸா லுக்ஸம்பர்க் ஒத்துக்கொள்கிருர். ஏற்றுக்கொள்வதாகாது என்ருல், அவர் தேசீய இனங்களின் சம அந்தஸ்தை அங்கீகரிக்கவில்லே. இங்கு குழப்புவதும் மழுப்புவதும் ஒரு பயனும் தராது!

ஆயினும், இவைகளேயும் இவை போன்ற மற்ற வாதங்களேயும் சோதித்துப் பார்ப்பதற்குச் சிறந்த வழி இப்பிரச்சினேபற்றி சமூகத்தின் பல்வேறு வர்க்கங்களின் கொள்கையை ஆராய்வதுதான். மார்க்ஸீயவாதிகட்கு இந்தச் சோதனே கட்டாயமானது. புறநிலேயை எடுத்துக்கொண்டு நாம் பிரச்சினேயை அணுக வேண்டும்; இவ்விஷயத்தில் வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளே நாம் ஆராய வேண்டும். இவ்வாறு செய்ய ரோஸா லுக்ஸம்பர்க் தவறிவிடுவதஞல், மாருநிலே வாதம், அருவக் கருத்தியல், சாதாரண வெற்றுக்கோட்பாடுகள், மிகைப்படையான வார்த்தைகள் என்ற எந்தப் பாவங்களேத் தமது எதிரிகளின் மீது சுமத்த வீணுக முயல்கிருரோ அவற்றைத் தாமே செய்பவர் ஆகிருர்.

ருஷ்யாவில் மார்க்ஸீயவாதிகளின் — அதாவது ருஷ்யாவில் வசிக்கும் எல்லாச் சிறு தேசீய இனங்களேயும் சேர்ந்த மார்க்ஸீயவாதிகளின்—செயல்திட்டத்தை நாம் விவாதித்துக் கொண்டிருக்கிருேம். ருஷ்ய ஆளும் வர்க்கங்களின் நிலேமையை நாம் பரிசீலனே செய்ய வேண்டாமா?

''அதிகார வர்க்கத்தின்'' (இந்தச் சரியற்ற வார்த்தைக்காக நாம் மன்னிப்புக் கேட்கிருேம்) நிலேமையும் நமது ஒன்றுபட்ட மேல்குடி வகையைச் சேர்ந்த நிலப்பிரபுக்களின்[13] நிலேமையும் நன்கு தெரிந்ததுதான். அவர்கள் தேசீய இனங்

களின் சம அந்தஸ்தையும் சுயநிர்ணய உரிமையையும் திட்ட வட்டமாக நிராகரிக்கிறார்கள். பண்ணையடிமை முறையின் காலத்தைச் சேர்ந்த பண்டை வாசகமாகிய யதேச்சாதிகாரம், ருஷ்யக் கிறிஸ்துவம், தேசீய இன இயல்பு—இந்தக் கடைசி வார்த்தை பெரிய-ருஷ்யத் தேசீய இனத்துக்கு மட்டும்தான் பொருந்தும்—என்பவை தான் அவர்களுடைய குறிக்கோள் வாசகம். உக்ரேனியர்கள்கூட "அந்நியர்கள்" என்று அறிவிக்கப் படுகிறார்கள்; அவர்களது மொழியே நசுக்கப்பட்டு வருகிறது.

ருஷ்யப் பூர்ஷ்வா வர்க்கத்தைச் சற்றுக் கவனிப்போம். "ஜூன் மூன்றும் நாள்"[14] சட்டசபை, நிர்வாக அமைப்பின் கீழ் அரசாங்கத்தில் பங்கு—மிகவும் மிதமானதாயினும் ஓரளவு பங்கு — கொள்ள "அழைக்கப்பட்டிருந்தது" அந்த வர்க்கம். இந்த விஷயத்தில் அக்டோபர்காரர்கள்[15] வலது சாரிகளைப் பின்பற்றுகிறார்கள் என்பதை நிரூபிக்க அதிக வார்த்தைகள் தேவைப்படா. துரதிருஷ்டவசமாக, பெரிய-ருஷ்ய மிதவாத பூர்ஷ்வாக்கள், முற்போக்குக்காரர்கள்[16], காடெட்டுகள் ஆகியோர் எடுத்துக் கொண்ட நிலையைப் பற்றி சில மார்க்ஸீயவாதிகள் மிகக் குறைந்த கவனமே செலுத்துகிறார்கள். என்றாலும் யார் ஒருவன் அவர்களது நிலைமையை ஆராயவும், அதில் ஆழ்ந்த கவனம் செலுத்தவும் தவறுகிறானோ அவன், தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பிரச்சினையை விவாதிக்கும்பொழுது அருவ வாதத்திலும் ஆதாரமற்ற கூற்றுக்களிலும் கட்டாயம் சிக்கித்தவிப்பான்.

கான்ஸ்டிட்யூஷனல்-டெமாகிரடிக் கட்சியின் முக்கிய செய்தித்தாளாகிய "ரேச்"[18] "எக்கச்சக்கமான" கேள்விகட்கு நேரடியான பதிலளிக்காமல் ராஜதந்திர முறையில் மழுப்பும் கலையில் வல்லது; என்றாலும், சென்ற ஆண்டு "பிராவ்தா"[17] உடனான தனது வாக்குவாதத்தில் முக்கியமான சில விஷயங்களை அது ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. 1913 கோடையில் ல்வோவ் நகரில் நடைபெற்ற அகில-உக்ரேனிய மாணவர் காங்கிரஸ்[19] பற்றித் துவங்கியது தகராறு. "உக்ரேனிய நிபுணர்" அல்லது "ரேச்சின்" உக்ரேனிய நிருபர் ஆகிய திரு. மொகில்யான்ஸ்கிய் ஒரு கட்டுரை

எழுதினர். உக்ரேய்ன தனியாகப் பிரிய வேண்டும் என்ற கருத்தை அவர் தனது கட்டுரையில் மிகவும் கடுமையாகத் தாக்கி புண்ணுக்கும்வகையில் வசைபாடி (''பைத்தியக் காரப் பிதற்றல்'', ''துர்ச்சாகச நடத்தை'' முதலிய சொற் களைப் பயன்படுத்தி) எழுதியிருந்தார். இந்தக் கருத்தை ஆதரித்தவர் தேசீயவாத-சோஷலிஸ்டாகிய தன்த்ஸோவ்; மேற்கூறிய காங்கிரசும் அதை ஏற்றுக் கொண்டிருந்தது.

''ரபோச்சயா பிராவ்தா'' இதைப்பற்றி எழுதியது. திரு. தன்த்ஸோவுடன் தன்னை எவ்விதத்திலும் ஒன்றுபடுத்திக் கொள்ளாமல், அவர் ஒரு தேசீயவாத-சோஷலிஸ்ட் என்றும், அவருக்கும் பல உக்ரேனிய மார்க்ஸீயவாதிகட்கும் கருத்து வேறுபாடுகள் உண்டு என்றும் அது தெளிவாகக் கூறியபிறகு, ''ரேச்சின்'' தொனி அல்லது கோட்பாட்டு ரீதியில் பிரச்சினையை அது எடுத்து மொழிந்த விதம் தவறானது என்றும், பெரிய-ருஷ்ய ஜனநாயகவாதிகளுக்கும் அல்லது ஜனநாயகவாதி என்று பிறர் தம்மை நினைக்க வேண்டுமென விரும்பும் வேறு யாருக்கும் அருவருப்பூட்டக் கூடியது என்றும் எழுதியது.* வேண்டுமென்றால்''ரேச்'' தன்த்ஸோவ்களை மறுத்துக் கூறட்டும்; ஆனால் கோட்பாட்டின் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் ஜனநாயகத்திற்காக நிற்கும் பெரிய-ருஷ்யச் செய்தித் தாள் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ''ரேச்'', பிரிந்து போகும் சுதந்திரத்தை, பிரிந்து போகும் உரிமையைக் கவனிக் காமல் இருக்க முடியாது என்று ''ரபோச்சயா பிராவ்தா'' கூறியது.

ல்வோவில் வெளியாகும் உக்ரேனியப் பத்திரிகையாகிய ''ஷ்லியாஹியில்''[20] திரு. தன்த்ஸோவின் பதில் வெளியா யிற்று. அந்தப் பதிலில்'' 'ரேச்சில்' வெளியான ஷோவினிஸத் தாக்குதல்களுக்கு ருஷ்ய சோஷல்-டெமாகிராட்டுப் பத் திரிகைகளில் மட்டுமே சரியானபடி அவமதிப்பு தரப்பட்டது'' (சூடுகொடுக்கப்பட்டது?) என்றும் அவர் எழுதியிருந்தார். அவருடைய பதிலே உக்ரேனியப் பத்திரிகை வாயிலாக அறிந்த திரு. மொகில்யான்ஸ்கியிடமிருந்து ''விளக்கம்'' ஒன்று சில

---

* பார்க்க: வி. இ. லெனின், ''உக்ரேனியப் பிரச்சினை பற்றிக் காடெட்டுகள்''— பதிப்பாசிரியர்கள்.

மாதங்கட்குப் பிறகு ''ரேச்சின்'' இதழ் 331ல் வெளியிடப்பட்டது. ''திரு. தன்த்ஸோவின் பிரச்சினைத் தீர்வு யோசனைகளைக் குறைகூறி இருப்பதற்கும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையின் நிராகரிப்புக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை'' என்ற கூற்று அந்த ''விளக்கத்தில்'' மும்முறை திருப்பித் திருப்பிக் கூறப்பட்டது.

திரு. மொகில்யான்ஸ்கிய் எழுதினார்:

'' 'தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை' கூட விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட ஒரு வணங்குபொருள் [இதைக் கவனியுங்கள்!] அல்ல. தேசிய இனத்தின் வாழ்வில் காணப்படும் தீமைதரும் நிலைமைகள் தேசிய சுயநிர்ணயத்திலும் தீய போக்குகளைத் தோற்றுவிக்கக் கூடும். அவைகளை எடுத்துக் காட்டுவது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரித்து விட்டதாகாது''.

இந்த மிதவாதியின் ''வணங்குபொருள்'' பற்றிய பேச்சு ரோஸா லுக்ஸம்பர்கின் பேச்சைப்போலவே இருக்கிறது என்பதை நீங்கள் காண முடியும். அரசியல் சுயநிர்ணய உரிமையை, அதாவது பிரிந்து போகும் உரிமையைத் தாம் ஏற்றுக்கொள்கிறாரா, அல்லது ஏற்றுக்கொள்ளவில்லையா என்ற கேள்விக்கு நேராகப் பதிலளிக்காமல் மழுப்பினார் திரு. மொகில்யான்ஸ்கிய் என்பது தெளிவு.

''புரோலித்தார்ஸ்காயா பிராவ்தா'' பத்திரிகை (1913, டிசம்பர் 11ந் தேதிக்கான 4வது இதழ்) கூட இதே கேள்வியைத் திரு. மொகில்யான்ஸ்கியிடமும் கான்ஸ்டிட்யூஷனல்-டெமாகிரடிக் கட்சியிடமும் நேரடியாகக் கேட்டது.*

அதன்மேல் ''ரேச்'' (இதழ் 340ல்), ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படாத, அதாவது அதிகாரபூர்வமான, தலையங்க அறிக்கையொன்றின் மூலம் இக்கேள்விக்குப் பதிலளித்தது. அந்தப் பதிலின் சுருக்கம் கீழ்வரும் மூன்று அம்சங்களில் அடங்கும்:

1) கான்ஸ்டிட்யூஷனல்-டெமாகிரடிக் கட்சியின் திட்டத்

---

* பார்க்க: வி. இ. லெனின், ''காடெட்டுகளும் மக்களின் சுயநிர்ணய உரிமையும்''—பதிப்பாசிரியர்கள்.

தின் 11வது பிரிவு ''தேசீய இனங்களின் சுதந்திர கலாச் சாரச் சுயநிர்ணய உரிமையைப்'' பற்றி ஒளிவு மறைவின்றி யும், துல்லியமாகவும், தெளிவாகவும் கூறுகிறது.

2) ''புரோலித்தார்ஸ்காயா பிராவ்தா'' சுயநிர்ணயத் தைப் பிரிவினைவாதத்துடன்—ஒரு குறிப்பிட்ட தேசீய இனம் தனியாகப் பிரிவதுடன்—''படுமோசமாகக் குழப்புகிறது'' என்று ''ரேச்'' அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறது.

3) ''ருஷ்ய அரசிலிருந்து 'தேசீய இனங்கள் பிரியும்' உரிமை யை ஆதரிப்பதாகக் காடெட்டுகள் உண்மையில் எப்பொழுதுமே பொறுப்பு ஏற்றுக் கொண்டதில்லை'' (1913, டிசம்பர் 20ந் தேதிய ''புரோலித்தார்ஸ்காயா பிராவ்தாவின்'' இதழ் 12ல் ''தேசீய-மிதவாதமும் தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையும்'' என்ற கட்டுரையைக் காண்க.*)

''ரேச்சில்'' கூறப்பட்ட இரண்டாவது அம்சத்தை முதலில் எடுத்துக்கொள்வோம். ''சுயநிர்ணயம்'' என்ற சொல் ''தெளிவில்லாதது'' அல்லது ''திட்டவட்டமற்றது'' என்று ஸெம்கோவ்ஸ்க்கிய்களும், லீப்மன்களும், யுர்க்கேவிச் சுகளும், மற்ற சந்தர்ப்பவாதிகளும் எழுப்பிய கூக்குரல்—ருஷ்யாவில் நிலவும் புறநிலை ரீதியான வர்க்க ஒப்புநிலைகள், வர்க்கப் போராட்டம் என்ற நோக்கு நிலையிலிருந்து பார்த் தால் — உண்மையில், மிதவாத-முடியாட்சிவாத பூர்ஷ்வாக் களின் புளித்துப்போன பேச்சின் புதிய வடிவமே தவிர வேறில்லை என்பதை அது எவ்வளவு பளிச்சென்று அவர்களுக்குக் காட்டு கிறது.

''ரேச்சைச்'' சேர்ந்த, அறிவொளி மிக்க ''கான்ஸ்டிட் யூஷனல்-டெமாகிரடிக்'' கனவான்களை நோக்கி ''புரோலித் தார்ஸ்காயா பிராவ்தா'' கீழ்வரும் மூன்று கேள்விகளைக் கேட்டது: (1) சர்வதேச ஜனநாயகத்தின் வரலாறு முழுவதி லும், சிறப்பாகப் பத்தொன்பதாம் நூற்ருண்டின் நடுக் காலத்திலிருந்து தேசீய இனங்களின் சுயநிர்ணயம் என்ருல் சுயேச்சையான தேசீய அரசு ஒன்றை அமைத்துக்கொள்ளும் அரசியல் சுயநிர்ணயம் என்றுதான் துல்லியமாகப் பொருள்

---

* பார்க்க: வி. இ. லெனின், ''தேசீய-மிதவாதமும் தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையும்''— பதிப்பாசிரி யர்கள்.

கொள்ளப்பட்டது என்பதை அவர்கள் மறுக்கிறார்களா? (2) 1896ல் லண்டனில் கூடிய சர்வதேச சோஷலிஸ்ட் காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட, எல்லோருக்கும் நன்கு தெரிந்த தீர்மானத்தின் பொருளும் அதேதான் என்பதை அவர்கள் மறுக்கிறார்களா? (3) 1902ம் ஆண்டிலேயே பிளெஹானவ் சுயநிர்ணயத்தைப் பற்றி எழுதியபொழுது அரசியல் சுயநிர்ணயத்தைத் துல்லியமாக, கறாராகக் குறிப்பிட்டார் என்பதை அவர்கள் மறுக்கிறார்களா?—''புரோலித்தார்ஸ்காயா பிராவ்தா'' இம்மூன்று கேள்விகளையும் கேட்டபொழுது காடெட்டுகள் வாயடைத்துப் போயினர்!

பதிலுக்கு ஒரு வார்த்தைகூட அவர்கள் சொல்லவில்லை; ஏனென்றால் சொல்வதற்கு அவர்களிடம் ஒன்றுமில்லை. ''புரோலித்தார்ஸ்காயா பிராவ்தா'' முழுக்கமுழுக்கச் சரி என்பதை அவர்கள் வாய்திறந்து சொல்லாமலே ஒத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

''சுயநிர்ணயம்'' என்ற சொல் தெளிவில்லாதது என்றும் சொஷல்-டெமாகிராட்டுகள் அதைப் பிரிவினைவாதத்துடன் சேர்த்துப் ''படுமோசமாகக் குழப்புகிறார்கள்'' என்றும் மிதவாதிகள் போடும் கூச்சல் இவ்விஷயத்தைக் குழப்பி உலக முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த ஜனநாயகக் கோட்பாட்டைத் தட்டிக் கழிப்பதற்கான முயற்சியே தவிர வேறில்லை. ஸெம்கோவ்ஸ்க்கிய்களும் லீப்மன்களும் யுர்க்கேவிச்சுகளும் இவ்வளவு அறியாமையில் மூழ்கியிருக்காவிட்டால் தொழிலாளர்களிடம் மிதவாதிகளின் மனப்பான்மையில் பேச அவர்கள் கூசியிருப்பார்கள்.

மேலே கவனிப்போம். கான்ஸ்டிட்யூஷனல் - டெமாகிராட்டுகளின் திட்டத்தில் ''கலாச்சார'' சுயநிர்ணயம் என்ற சொல்லின் பொருள் அரசியல் சுயநிர்ணயத்தை நிராகரிப்பது தான் என்பதை ''ரேச்'' ஒத்துக்கொள்ளும்படி ''புரோலித்தார்ஸ்காயா பிராவ்தா'' கட்டாயப்படுத்தியது.

''ருஷ்ய அரசிலிருந்து 'தேசீய இனங்கள் பிரியும்' உரிமையை ஆதரிப்பதாகக் காடெட்டுகள் உண்மையில் எப்பொழுதுமே பொறுப்பு ஏற்றுக் கொண்டதில்லை''—''ரேச்சில்'' காணப்படும் இவ்வார்த்தைகளை நமது காடெட்டுகளின் ''விசுவாசத்துக்கு'' ஒரு உதாரணமாக ''புரோலித்தார்ஸ்

காயா பிராவ்தா'' பத்திரிகை ''நோவொயே வ்ரேம்யா''[21] பத்திரிகைக்கும்''ஸேம்ஷ்சிஞ''[22]செய்தித்தாளுக்கும் காரணத்துடன்தான் எடுத்துக்காட்டியது. சந்தர்ப்பம் கிடைத்த பொழுதெல்லாம் ''யூதர்களைப்'' பற்றிக் கூறவும், காடெட்டுகளைக் கிண்டல் செய்யவும் எப்பொழுதும் தவருத ''நோவொயே வ்ரேம்யா'' தனது **13563**ம் இதழில் எழுதியது:

''சோஷல்-டெமாகிராட்டுகளுக்கு எது அரசியல் ஞானத்தின் அடிப்படைக் கோட்பாடாக விளங்குகிறதோ அது [தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையை, பிரிந்து போகும் உரிமையை ஏற்றுக்கொள்வது] இன்று காடெட்டுகளுக்கிடையில்கூட வேற்றுமையை உண்டுபண்ண ஆரம்பித்திருக்கிறது''.

''ருஷ்ய அரசிலிருந்து தேசீய இனங்கள் பிரியும் உரிமையை ஆதரிப்பதாகத் தாங்கள் எப்பொழுதுமே பொறுப்பு ஏற்றுக்கொண்டதில்லை'' என்று அறிவிப்பதன் மூலமாகக் காடெட்டுகள் கோட்பாட்டுக் கொள்கை ரீதியில் ''நோவொயே வ்ரேம்யாவின்'' நிலையையே பின்பற்றுகிருர்கள். இது காடெட்டுகளின் **தேசீய-மிதவாதத்தின்** அடிப்படைகளுள் ஒன்று; புரிஷ்கேவிச்சுகளுடனை அவர்களது உறவுக்கும், சித்தாந்த-அரசியல் ரீதியிலும் நடைமுறை-அரசியல் ரீதியிலும் தாங்கள் அவர்களைச் சார்ந்திருப்பதற்கும் இது ஒரு உதாரணம். ''புரோலித்தார்ஸ்காயா பிராவ்தா'' எழுதியது: ''காடெட்டு கனவான்கள் வரலாற்றியல் கற்றவர்கள். 'பிடி அவர்களை! விட்டுவிடாதே அவர்களை'[23] என்ற புரிஷ்கேவிச்சுகளின் பண்டை உரிமையைக் கடைப்பிடிப்பதன் காரணமாக எத்தகைய—மிதமாகச் சொன்னல்—''கலகக் கொலை போன்ற'' நிகழ்ச்சிகள் விளைந்திருக்கின்றன என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்''. புரிஷ்கேவிச்சுகளின் சர்வ வல்லமையின் நிலப்பிரபுத்துவ மூலாதாரத்தையும் அதன் தன்மையையும் காடெட்டுகள் நன்கு அறிந்திருக்கிருர்கள். ஆயினும் அந்த வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட உறவுகள், எல்லைகளின் **அடிப்படையை** ஆதாரமாகக் கொண்டு தங்களது கொள்கைகளையும் வகுக்கிருர்கள். இந்த வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட அல்லது நிர்ணயிக்கப்பட்ட உறவுகளிலும்

எல்லைகளிலும் ஐரோப்பியத் தன்மையற்றது, ஐரோப்பியத் தன்மைக்கு எதிரானது (ஆசியாவைச் சேர்ந்தது என்று நாம் சொல்வோம்; ஆனால் இது தகாத முறையில் ஜப்பானியர் களையும் சீனர்களையும் அவமதிப்பதாகும்) நிறைய இருக்கிறது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்; ஆயினும் தாங்கள் செல்லக் கூடிய கடைசி வரம்பு இதுவே என்று காடெட்டுகள் அவைகளை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இவ்வாறாக, அவர்கள் புரிஷ்கேவிச்சுகளுக்குத் தக்கபடி தம்மை மாற்றிக் கொள்கிறார்கள்; அவர்களுக்குத் தாழ்ந்து வணங்குகிறார்கள்; அவர்களது நிலைமைக்கு ஆபத்து வரக் கூடாதே என்று அஞ்சுகிறார்கள்; மக்களுடைய இயக்கத் திலிருந்து, ஜனநாயகத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்கிறார் கள். ''புரோலித்தார்ஸ்காயா பிராவ்தா'' எழுதியதைப் போல் ''பண்ணையடிமைமுறை மனப்பான்மை கொண்ட நிலப் பிரபுக்களுக்கும், அதிகாரம் செலுத்தும் தேசீய இனத் தின் மிகவும் மோசமான தேசீயவாதத் தப்பெண்ணங்களுக் கும்—இத்தப்பெண்ணங்களை முறையாக விடாமல் எதிர்த்துப் போராட வேண்டியதற்குப் பதிலாக—ஏற்றவகையில் இவர் கள் உண்மையில் தங்களைத் திருத்திக் கொள்கிறார்கள் என்பதுதான் இதன் பொருள்''.

காடெட்டுகள் வரலாறு தெரிந்தவர்களாதலாலும், ஜனநாயகவாதிகள் என்று தம்மைக் கூறிக்கொள்வதனாலும், ஜனநாயக இயக்கமானது, இன்றைக்குக் கிழக்கு ஐரோப்பா விலும் ஆசியாவிலும் அவற்றின் தனி விசேஷமாகக் காணப் படுவதும், அவற்றை நாகரீகமடைந்துள்ள முதலாளித்துவ நாடுகள் மாதிரி மாற்றுவதற்குப் பணியாற்றுவதுமான ஜன நாயக இயக்கமானது, நிலப்பிரபுத்துவச் சகாப்தத்தினால்— புரிஷ்கேவிச்சுகள் சர்வவல்லமை பெற்றும் பூர்ஷ்வாக்கள், குட்டி பூர்ஷ்வாக்களில் பெரும்பான்மையினர் அரசியல் உரிமையை இழந்தும் நின்ற அந்தச் சகாப்தத்தினால்—நிலை நாட்டப்பட்ட எல்லைகளை அப்படியே விட்டு விடும் என்று அறுதியிட்டுக்கூற முயற்சிகூடச் செய்வதில்லை.

''புரோலித்தார்ஸ்காயா பிராவ்தாவுக்கும்'' ''ரேச்சுக்கு மான'' இந்த வாக்குவாதத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினை வெறும் இலக்கியப் பிரச்சினை மட்டுமல்ல; இன்றைய உண்

மையான அரசியல் பிரச்சினை ஒன்றையும் பற்றியது என்பது 1914 மார்ச்சு 23-25 தேதிகளில் நடைபெற்ற கான்ஸ்டிட்யூஷனல்-டெமாகிரடிக் கட்சியின் முந்திய மகாநாட்டினுலும் கூட நிரூபிக்கப்பட்டது. ''ரேச்சில்'' (இதழ் 83, 1914, மார்ச்சு 26) வெளியான அம்மகாநாட்டின் அதிகாரபூர்வமான அறிக்கையில் நாம் கீழ்வரும் வரிகளைக் காண்கிருேம்:

''தேசீயப் பிரச்சினைகளை பற்றியும் குறிப்பிடத்தக்க சுறுசுறுப்பான விவாதம் ஒன்று நடந்தது. நி. வி.நெக்ராஸவ், அ. மி. கோல்யுபாக்கின் ஆகியோரால் ஆதரிக்கப்பட்ட கீயெவ் பிரதிநிதிகள் தேசீயப் பிரச்சினை ஒரு உயிர்நாடியான பிரச்சினை ஆகிவருகிறது என்றும், இதுவரை அதை நாம் அணுகியதைவிட மேலும் உறுதியாக அதை அணுக வேண்டுமென்றும் சுட்டிக்காட்டினுர்கள். ஆயினும் [இந்த ''ஆயினும்'' ஷெத்ரீனின் ''ஆனுல்'' போன்றது—''காதுகள் நெற்றியை விட உயரமாக ஒருபோதும் வளரமாட்டா, ஒருபோதும் வளரமாட்டா!'']பி.பி.கோக்கோஷ்கின் 'சிறு தேசீய இனங்களின் அரசியல் சுயநிர்ணயம்' பற்றிய 'வளைந்து கொடுக்கும் சூத்திரங்களை' மிகவும் ஜாக்கிரதையாகக் கையாளவேண்டும் என்று செயல்திட்டமும், கடந்த கால அரசியல் அனுபவமும் காட்டுகின்றன என்று சுட்டிக்காட்டினுர்''.

காடெட்டுகள் மகாநாட்டில் காணப்பட்ட மிகவும் அற்புதமான இந்தப் போக்கு எல்லா மார்க்ஸீயவாதிகள், எல்லா ஜனநாயகவாதிகள் ஆகியோரின் தீவிரமான கவனத்திற்குரியதாகும். (அடைப்புக்குறிகளுக்கிடையே நாம் குறிப்பிட வேண்டும்: நல்ல விஷயஞானம் உள்ளதாகத் தோன்றும் ''கீயெவ்ஸ்காயா மீஸில்''[24] செய்தித்தாள் திரு. கோக்கோஷ்கினின் கருத்துக்களைச் சந்தேகமின்றிச் சரியாக வெளியிடுகிறது. தமது எதிரிகளுக்கு ஒரு எச்சரிக்கை என்ற வகையில் அரசு ''துண்டுபட்டுப்போகும்'' ஆபத்தைப் பற்றி அவர் விசேஷமாக வலியுறுத்திக் கூறினுர் என்றும் அது எழுதியது.)

''ரேச்சில்'' வெளியான அதிகாரபூர்வமான அறிக்கையானது மிகப்பெரும் ராஜதந்திரத் திறமையுடன் வரையப்பட்டுள்ளது. திரையை எவ்வளவு குறைவாக நீக்கலாமோ அவ்வளவு குறைவாக நீக்கி, எவ்வளவு அதிகமான அளவில் விஷயங்களை மறைக்கக்கூடுமோ அவ்வளவுக்கு மறைத்து அந்த

அறிக்கை தரப்பட்டுள்ளது. ஆனாலும் காடெட்டுகள் மகா நாட்டில் முக்கியமாக என்ன நடந்தது என்பது வெள்ளிடை மலை. உக்ரேய்னுவில் நிலைமைகளை நன்கறிந்த மிதவாத-பூர்ஷ்வாப் பிரதிநிதிகளும், ''இடதுசாரி'' காடெட்டுகளும் தேசிய இனங்களின் அரசியல் சுயநிர்ணயப் பிரச்சினையைத்தான் குறிப்பாக எழுப்பினார்கள். இல்லாவிட்டால், இந்தச் ''சூத்திரத்தை ஜாக்கிரதையாகக் கையாள'' வேண்டும் என்று திரு. கோக்கோஷ்கின் வலியுறுத்தியிருக்க வேண்டிய அவசியமில்லை.

காடெட்டுகளின் செயல்திட்டம் காடெட்டுகளின் மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு நன்கு தெரிந்ததுதான். அது ''கலாச்சாரச்'' சுயநிர்ணயத்தைப் பற்றிப் பேசுகிறது. அரசியல் சுயநிர்ணயத்தைப் பற்றி அல்ல. எனவே, உக்ரேனியப் பிரதிநிதிகளுக்கு எதிராகவும் இடதுசாரிக் காடெட்டுகளுக்கு எதிராகவும் திரு. கோக்கோஷ்கின் இத்திட்டத்தை ஆதரித்தார்; அவர் ''அரசியல்'' சுயநிர்ணயத்துக்கு எதிராகக் ''கலாச்சாரச்'' சுயநிர்ணயத்தை ஆதரித்தார். ''அரசியல்'' சுயநிர்ணயத்தை எதிர்த்ததன் மூலமாகவும், ''அரசு துண்டு பட்டுப்போகும்'' என்ற ஆபத்தை மிகைப்படுத்திக் கூறியதன் மூலமாகவும், ''அரசியல் சுயநிர்ணயம்'' என்ற சூத்திரத்தை ''வளைந்து கொடுக்கும்'' தன்மையுடையது என்று அழைத்ததன் மூலமாகவும் (ரோஸா லுக்ஸம்பர்கின் கூற்றுக்கு இது எவ்வளவு பொருத்தம்!) திரு. கோக்கோஷ்கின், கான்ஸ்டிட்யூஷனல்-டெமாகிரடிக் கட்சியின் மிக ''இடது சாரி'' அல்லது அதிக ஜனநாயகப் பிரிவுக்கு எதிராக, மேலும் உக்ரேனியப் பூர்ஷ்வாக்களுக்கும் எதிராக, பெரிய-ருஷ்யத் தேசிய-மிதவாதத்தைப் பலமாக ஆதரித்தார் என்பது தெள்ளத் தெளிவு.

திரு. கோக்கோஷ்கின் காடெட்டுகள் மகாநாட்டில் வெற்றிபெற்றார். ''ரேச்சின்'' அறிக்கையில் காணப்படும் ''ஆயினும்'' என்ற கபடம் நிறைந்த, சின்னஞ்சிறு சொல் அதைப் புலப்படுத்துகிறது; காடெட்டுகள் மத்தியில் பெரிய-ருஷ்யத் தேசிய-மிதவாதம் வெற்றிபெற்றுவிட்டது. ருஷ்யாவில் சில மார்க்ஸீயவாதிகள்கூட, காடெட்டுகளைப் போல் ''சிறு தேசிய இனங்களின் அரசியல் சுயநிர்ணயம் பற்றிய வளைந்துகொடுக்கும் சூத்திரங்களைக்'' கண்டு அஞ்ச ஆரம்

பித்து விட்டார்கள். தவறான வழியில் செல்லும் அவர்களின் மனத்தில் இந்த வெற்றியானது தெளிவை உண்டாக்க உதவி புரியாதா?

''ஆயினும்'', திரு. கோக்கோஷ்கினின் சிந்தனை முறையின் சாராம்சத்தை நாம் பரிசீலனை செய்வோம். ''கடந்த கால அரசியல் அனுபவத்தைப்'' பற்றிக் குறிப்பிட்டதன் மூலமும் (அதாவது, 1905ம் ஆண்டின் அனுபவத்தைக் குறிக்கிறார் என்று தோன்றுகிறது; அப்பொழுதுதான் தங்களது தேசிய விசேஷ உரிமைகளைப் பற்றிக் கிலிகொண்ட பெரிய-ருஷ்ய பூர்ஷ்வாக்கள் தங்களது அச்சத்தைக் காட்டி காடெட் கட்சியையும் நடுங்கச் செய்து விட்டனர்),''அரசு துண்டுபட்டுப்போகும்'' ஆபத்தை மிகைப்படுத்திக் காட்டியதன் மூலமும் திரு. கோக்கோஷ்கின், அரசியல் சுயநிர்ணயம் என்பதற்குத் தனியே பிரிந்து சுயேச்சையான தேசிய அரசு ஒன்றை அமைத்துக்கொள்ளுதல் என்ற ஒரே பொருள் தான் உண்டு என்பதைத் தான் நன்றாகப் புரிந்துகொண்டதைக் காட்டிவிட்டார். கேள்வி என்னவென்றால்—பொதுவாக ஜனநாயகத்தின் நோக்கு நிலையிலிருந்தும் சிறப்பாகப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நோக்கு நிலையிலிருந்தும் திரு. கோக்கோஷ்கினின் அச்சத்தை எவ்வாறு மதிப்பிடுவது?

பிரிந்துபோகும் உரிமையை ஏற்றுக்கொண்டால் ''அரசு துண்டுபட்டுப்போகும்'' ஆபத்து அதிகமாகும் என்பதை நாம் நம்பவேண்டும் என்று திரு. கோக்கோஷ்கின் விரும்புகிறார். இது கான்ஸ்டபிள் மிம்ரெத்ஸோவின் நோக்குநிலை; அவரது தாரக வாசகம் ''பிடி அவர்களை! விட்டு விடாதே அவர்களை'' என்பதுதான். பொதுவாக ஜனநாயகத்தின் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் உண்மை இதற்கு நேர் மாறானதாக இருக்கிறது: பிரிந்துபோகும் உரிமை ஏற்றுக்கொள்ளப்படுவதானது ''அரசு துண்டுபட்டுப்போகும்'' ஆபத்தைக் குறைக்கிறது.

தேசியவாதிகளைப் போலவேதான் திரு. கோக்கோஷ்கினும் வாதிக்கிறார். தங்களது முந்தைய காங்கிரசில் அவர்கள் உக்ரேனிய ''மாஸெப்பவாதிகளைத்'' தாக்கினார்கள். ஆஸ்திரியர்களின் உக்ரேனிய மோகமானது ஆஸ்திரியாவுடன் உக்ரேனியர்களது உறவை வலுப்படுத்துகிறதாகையால்,

உக்ரேனிய இயக்கமானது உக்ரேய்னுவுக்கும் ருஷ்யாவுக்கும் இடையிலான உறவை பலவீனப்படுத்தும்ஆபத்தைத் தோற்று வித்திருக்கிறது என திரு. ஸவேன்கோவும் அவரது சகாக்க ளூம் சத்தம் போட்டார்கள்! ஆஸ்திரியா பயன்படுத்திய தாக ஸவேன்கோக்கள் குற்றஞ்சாட்டுகின்றனரே அதே வழி யைப் பயன்படுத்தி — அதாவது உக்ரேனியர்களுக்குத் தங்க ளது மொழியை உபயோகிக்கும் சுதந்திரம், சுயாட்சி, ஒரு நிர்வாகச் சட்டசபை ஆகியவைகளை அளித்து—உக்ரேனியர்க ளுடனுன தனது உறவுகளை ''வலுப்படுத்த'' ஏன் ருஷ்யா முயலக் கூடாது என்பது விளங்கவில்லை.

ஸவேன்கோக்களின் வாதமும் கோக்கோஷ்கின்களின் வாதமும் ஒரே மாதிரி இருக்கின்றன. தர்க்க முறைப்படி பார்த்தால் அவைகள் இரண்டுமே பரிகசிக்கத்தக்கவை, அபத்தமானவை. எந்த ஒரு நாட்டில் உக்ரேனிய சிறு தேசீய இனம் அதிக சுதந்திரத்தைப் பெற்றுள்ளதோ அந்நாட்டுடன் அதன் உறவுகள் வலிமைபெற்று விளங்கும் என்பது தெளி வாகத் தெரியவில்லையா? ஜனநாயகத்தின் ஆதாரக் கூற்று களை முழுவதும் கைவிட்டு விட்டால்தான் இந்தப் பட்ட வர்த்தனமான உண்மையை ஒருவர் மறுக்கமுடியும் என நினைக்கிறேன். பிரிந்துபோகும் சுதந்திரம், சுயேச்சையான தேசீய அரசு ஒன்றை அமைத்துக்கொள்ளும் சுதந்திரம் ஆகியவற்றைவிட ஒரு சிறு தேசீய இனத்துக்குப் பெரிய சுதந்திரம் வேறு என்ன இருக்க முடியும்?

மிதவாதிகளாலும் (அறியாமை காரணமாக அவர்களை எதிரொலிப்பவர்களாலும்) இவ்வளவு குழப்பப்பட்டுவிட்ட இப்பிரச்சினையைத் தெளிவாக்குவதற்கு நாம் ஒரு எளிய உதாரணத்தை எடுத்துக் காட்டுவோம். விவாகரத்துப் பிரச் சினையை எடுத்துக்கொள்வோம்.அதிகாரமையப்பாடு பெற்ற ஜனநாயக அரசானது, தனது உறுப்புப் பகுதிகளுக்கு சுய நிர்வாகம் அளிக்க இணங்கிய போதும் பல முக்கியமான துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தை, விவாகரத்து பற்றிச் சட்டமியற்றுவது உட்பட்ட அதிகாரத்தை, மத்தியப் பாராளுமன்றத்தின் செயல் வரம்புக்குட்பட்டதாகவே வைத் திருக்க வேண்டும் என ரோஸா லுக்ஸம்பர்க் தமது கட்டுரை யில் எழுதுகிருர். விவாகரத்து அளிக்கும் சுதந்திரத்தை ஒரு

ஜனநாயக அரசில் மத்திய அரசாங்கம் தன் வசமே வைத்திருக்க வேண்டும் என்ற அக்கறை எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடியதே. விவாகரத்து உரிமைச் சுதந்திரத்தைப் பிற்போக்கு வாதிகள் எதிர்க்கிறார்கள்; அதை ''மிகவும் ஜாக்கிரதையாகக் கையாளவேண்டும்'' என்று அவர்கள் கூறுகிறார்கள்; அது ''குடும்பத்தைத் துண்டுபடுத்துவதாகும்'' என்று உரத்த குரலில் அறிவிக்கிறார்கள். ஆயினும் பிற்போக்குவாதிகள் நயவஞ்சகர்கள், அவர்கள் உண்மையில் போலீஸின், அதிகார வர்க்கத்தின் சர்வ வல்லமையையும் ஆடவர்களின் விசேஷ உரிமைகளையும் பெண்களை ஒடுக்கும் முறைகளில் படுமோசமான ஒன்றையும் ஆதரித்து நிற்கிறார்கள் என்றும் ஜனநாயகவாதிகள் கருதுகிறார்கள். உண்மையில் விவாகரத்துச் சுதந்திரத்ினால் குடும்ப உறவுகள் ''துண்டுபட்டுப்'' போக மாட்டா என்றும், அதற்கு மாறாக ஜனநாயக அடிப்படையில்—நாகரிக சமுதாயத்தில் அது ஒன்றுதான் சாத்தியமான, நிலையான அடிப்படை—அவ்வுறவுகளை வலுப்படுத்தும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

சுயநிர்ணய உரிமைச் சுதந்திரத்தை, அதாவது பிரிந்து போகும் சுதந்திர உரிமையை, ஆதரிப்பவர்கள் தனிப்பிரிவு வாதத்தைத் தூண்டிவிடுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டுவது முட்டாள்தனமானது, நயவஞ்சகமானது. விவாகரத்து சுதந்திர உரிமையை ஆதரிப்பவர்கள் குடும்ப உறவுகளைச் கெடுப்பவர்கள் என்று குற்றஞ்சாட்டுவது எவ்வளவு முட்டாள்தனமானதோ அதேபோன்றது. பூர்ஷ்வா சமூகத்தில் பூர்ஷ்வாத் திருமணமானது விசேஷ உரிமைகள், பணத்தாசை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது; இவைகளை ஆதரிப்பவர்கள் விவாகரத்து உரிமையை எதிர்க்கிறார்களே, அதேபோல முதலாளித்துவ அரசில் சுயநிர்ணய உரிமையை, தேசீய இனங்கள் பிரிந்துபோகும் உரிமையை மறுப்பது, மேலோங்கி நின்று அதிகாரம் செலுத்தும் தேசீய இனத்தின் விசேஷ உரிமைகளை ஜனநாயக முறைகளுக்குக் குந்தகமாக ஆதரிப்பதும், நிர்வாகத்தில் போலீஸ் முறைகளை ஆதரிப்பதும் ஆகும்.

முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவுகிற எல்லா உறவுகளினின்றும் தோன்றும் அரசியல் புரட்டின் காரணமாக

வே சில சமயங்களில் பாராளுமன்ற அங்கத்தினர்களும் பத்திரிகை எழுத்தாளர்களும் ஒரு தேசீய இனம் அல்லது இன்னொரு தேசீய இனம் பிரிந்து போவதைப் பற்றி அற்பத் தனமாக, மடத்தனமாக விளையாட்டுத்தனமாகப் பிதற்று கிறார்கள். ஆனால் அப்பேச்சினால் பிற்போக்குவாதிகள் மட்டும் தான் பயப்பட முடியும் (அல்லது பயப்படுவதாக நடிக்க முடியும்). ஜனநாயகக் கோட்பாடுகளைப் பின்பற்றி நிற்பவர் கள், அதாவது அரசின் பிரச்சினைகள் மக்களாலேயே தீர்க்கப் பட வேண்டும் என்று வலியுறுத்தி நிற்பவர்கள், அரசியல் வாதிகளின் பிதற்றலுக்கும் மக்களின் முடிவுகளுக்குமிடையில் ''மாபெரும் தூரம்''[26] இருக்கிறது என்பதை நன்கறிவார் கள். பூகோள, பொருளாதார உறவுகளின் முக்கியத்துவத் தையும், பெரிய மார்க்கெட்டின், பெரிய அரசின் அனு கூலங்களையும் பொதுமக்கள் தங்களது அன்றாட அனுபவத் திலிருந்து மிகவும் நன்கு அறிகிறார்கள். எனவே, எப்பொழுது தேசீய ஒடுக்கல் முறையும் தேசீயத் தகராறுகளும் ஒன்றி ணைந்து வாழும் வாழ்க்கையைச் சகிக்க முடியாததாக்கு கின்றனவோ, எந்த விதப் பொருளாதாரத் தொடர்புகளையும் தடைசெய்கின்றனவோ, அப்பொழுது மட்டுமே மக்கள் பிரிவினையைக் கையாள்வார்கள். அப்பொழுது, பிரிவதனால் முதலாளித்துவ வளர்ச்சியின் நலன்களும் வர்க்கப் போராட்டச் சுதந்திரத்தின் நலன்களும் சிறந்த பயன்பெறுகின்றன.

இவ்வாறாக எந்தக் கோணத்திலிருந்து நாம் திரு. கோக் கோஷ்கினின் வாதங்களை அணுகினாலும் அவை, அபத்தத் தின் சிகரமாகவும் ஜனநாயக் கோட்பாட்டின் கேலிக் கூத்தாகவும்தான் இருக்கின்றன. ஆயினும் இந்த வாதங்களின் ஒரு சிறு துளி தர்க்கம், பெரிய-ருஷ்ய பூர்ஷ்வாக்களின் வர்க்க நலன்களின் தர்க்கம், இருக்கிறது. கான்ஸ்டிட்யூஷனல்-டெமா கிரடிக் கட்சியின்அங்கத்தினர்களில் பெரும்பான்மையினரைப் போல் திரு. கோக்கோஷ்கினும் அந்த பூர்ஷ்வா வர்க்கப் பணமூட்டைகளின் ஒரு கையாள். அதன் விசேஷ உரிமை களைப் பொதுவாகவும், அதன் அரசின் விசேஷ உரிமைகளைக் குறிப்பாகவும் அவர் ஆதரிக்கிறார். புரிஷ்கேவிச்சுடன் கை யோடு கைகோத்து, தோளோடு தோள் நின்று அவைகளை அவர் ஆதரிக்கிறார். ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால்

புரிஷ்கேவிச் அவர்கள் நிலப்பிரபுத்துவத் தடியில் அதிக நம்பிக்கை வைத்துள்ளார்; ஆனால் கோக்கோஷ்கினும் அவரது சகாக்களும் அத்தடி 1905ல் மோசமாக முறிந்துவிட்டதென் பதை உணர்ந்து, பொதுமக்களை ஏமாற்றுவதற்கு பூர்ஷ்வாக் களின் முறைகளில்—''அரசு துண்டுபட்டுப்போகும்'' என்கிற பூச்சாண்டியைக் காட்டிக் குட்டி பூர்ஷ்வாக்களையும் விவசாயிகளையும் பயமுறுத்துதல், ''மக்களது சுதந்திரத்தை'' வரலாற்று மரபுகளுடன் ஒன்றிணைத்தல் பற்றிய சொற்றொடர் களைக்கொண்டு அவர்களை ஏமாற்றுதல் முதலியவைதான் அம்முறைகள்—அதிக நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

தேசிய இனங்களின் அரசியல் சுயநிர்ணயம் என்ற கோட் பாட்டை மிதவாதிகள் எதிர்க்கிறார்களே, அதற்கு ஒரே ஒரு உண்மையான வர்க்கப் பொருள்தான் இருக்கமுடியும்: தேசிய-மிதவாதமும், பெரிய-ருஷ்ய பூர்ஷ்வாக்களின் அரசு சம்பந்தமான விசேஷ உரிமைகளைக் காப்பாற்றுதலும். கலைப்புவாதி ஸெம்கோவ்ஸ்க்கிய், பூந்த்காரர் லீப்மன், உக்ரே னியக் குட்டி பூர்ஷ்வா யுர்க்கேவிச், ருஷ்யாவில் மார்க்ஸீய வாதிகளிடையில் காணப்படும் சந்தர்ப்பவாதிகள் எல்லோ ரும், இவர்கள் இன்றைய ஜூன் மூன்றும் நாள் ஆட்சியின் கீழ் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை எதிர்க்கிறார் கள்— உண்மையில் தேசிய-மிதவாதிகளின் அடிச்சுவட்டைத் தான் பின்பற்றுகிறார்கள்; தேசிய-மிதவாதக் கருத்துக் களைப் பரப்பித் தொழிலாளி வர்க்கத்தைக் கெடுக்கிறார்கள்.

தொழிலாளி வர்க்க நலன்களுக்கும் முதலாளித்துவத்துக் கெதிரான அதனது போராட்டத்தின் நலன்களுக்கும், எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் மிக நெருக்கமான ஐக்கியமும் முழுமையான ஒற்றுமையும் தேவை; ஒவ்வொரு சிறு தேசிய இனத்தையும் சேர்ந்த பூர்ஷ் வாக்களின் தேசியவாதக் கொள்கையை எதிர்க்க வேண்டு மென்றும் அந்நலன்கள் கோருகின்றன. ஆகவே, சோஷல்-டெமாகிராட்டுகள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை யை, அதாவது ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனம் தனியே பிரிந்து செல்லும் உரிமையை, மறுப்பார்களானால், அல்லது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பூர்ஷ்வாக்களின் தேசியக் கோரிக்கைகள் அனைத்தையும் ஆதரிப்பார்களானால், அவர்

கள் பாட்டாளி வர்க்கக் கொள்கையிலிருந்து வழுவியவர்கள் ஆவார்கள்; பூர்ஷ்வாக்களின் கொள்கைப் போக்குக்குத் தொழிலாளிகளைக் கீழ்ப்படுத்தியவர்கள் ஆவார்கள். கூலி வேலை செய்யும் தொழிலாளிக்குத் தன்னைச் சுரண்டுபவர்கள் ருஷ்யர் அல்லாத பூர்ஷ்வாக்களைவிடப் பெரிய-ருஷ்ய பூர்ஷ்வாக்களாக இருப்பது மேலா அல்லது யூத பூர்ஷ்வாக்களை விடப் போலிஷ் பூர்ஷ்வாக்களாக இருப்பது மேலா என்ற கேள்வி முக்கியமல்ல. தனது வர்க்க நலன்களை நன்கு உணர்ந்து கொண்ட ஒரு கூலித் தொழிலாளிக்குப் பெரிய -ருஷ்ய முதலாளிகளின் அரசு சம்பந்தமான விசேஷ உரிமைகளைப் பற்றி அக்கறையில்லை; அதுபோல், தாங்கள் அரசு சம்பந்தமான விசேஷ உரிமைகளைப் பெறும் காலத்தில் ஒரு பூலோக சுவர்க்கத்தை நிர்மாணிப்போம் என்று போலிஷ் அல்லது உக்ரேனிய முதலாளிகள் உறுதி கூறுகிறார்களே அதைப் பற்றியும் அவனுக்கு அக்கறையில்லை. எந்த வழியிலும் முதலாளித்துவமானது, பல தேசீய இனங்கள் விரவியிருக்கும் ஒன்றித்த அரசுகளிலும் தனித்தனி தேசீய இன அரசுகளிலும் வளர்ந்து கொண்டிருக்கிறது, வளர்ந்து கொண்டே இருக்கும்.

எப்படியானாலும் கூலிக்கமர்த்தப்பட்ட தொழிலாளி சுரண்டப்படுவதற்கான ஒரு பொருள். சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தில் வெற்றி பெறவேண்டுமானால் பாட்டாளி வர்க்கம் தேசீயவாதத்திலிருந்து விடுதலைப்பட்டு நிற்க வேண்டும்; பல்வேறு தேசீய இனங்களின் பூர்ஷ்வாக்களுக்கிடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தலைமை ஆதிக்கத்துக்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் முழு நடுநிலைமை வகிக்க வேண்டும். ஒரு தேசீய இனத்தின் பாட்டாளி வர்க்கம் ''தனது'' தேசீய பூர்ஷ்வாக்களின் விசேஷ உரிமைகளைச் சிறிது ஆதரித்தாலும்கூட, இன்னொரு தேசீய இனத்தின் பாட்டாளி வர்க்கத்திடையில் அது கட்டாயம் நம்பிக்கையின்மையைத் தோற்றுவிக்கும்; தொழிலாளர்களின் சர்வதேச ரீதியிலான வர்க்க ஒற்றுமையை அது பலவீனப்படுத்தி, பூர்ஷ்வாக்கள் பூரிப்பு அடையும் வகையில் அவர்களைத் துண்டுபடுத்தும். சுயநிர்ணய உரிமையை அல்லது பிரிந்துபோகும் உரிமையை மறுப்பதானது மேலோங்கி

ஆட்சி புரியும் தேசீய இனத்தின் விசேஷ உரிமைகளை நடைமுறையில் ஆதரிப்பதாகவேதான் முடியும்.

இதை நிரூபிக்க ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிந்து போனதை நாம் எடுத்துக்கொண்டால் இதற்கு இன்னும் தீவிரமான நிரூபணத்தை நாம் காணலாம்.

## 6. ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிதல்

இந்த உதாரணத்தையே ரோஸா லுக்ஸம்பர்க் அவர்களும் எடுத்துக்காட்டி, கீழ்வருமாறு அதை விவாதிக்கிறார்:

''கூட்டாட்சி உறவுகளின் வரலாற்றில் மிகவும் சமீபத்திய நிகழ்ச்சி ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிந்ததாகும்—அச்சமயத்தில் சோஷல்-தேசபக்தப் போலிஷ் பத்திரிகைகள் இதை அவசர அவசரமாகக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு (பார்க்க: க்ராக்கோவில் வெளியாகும் ''நப்ஷொத்''[26]), அரசு பிரியும் போக்கின் வலிமையையும் முற்போக்குத் தன்மையையும் புலப்படுத்தும் மகிழ்ச்சிக்குரிய அறிகுறி அது என்று கூறின—கூட்டாட்சி முறையும் அதன் உடன் விளைவான அரசு பிரிதலும் எவ்விதத்திலும் முன்னேற்றத்தையோ அல்லது ஜனநாயகத்தையோ குறிப்பன அல்ல என்பதைத் தெள்ளத் தெளிவாக இந்நிகழ்ச்சி நிரூபித்துவிட்டது. நார்வேப் 'புரட்சி', என்று சொல்லப்படுகிறதே அதற்குப் பிறகு — ஸ்வீடன் அரசர் பதவி நீக்கம் செய்யப்பட்டு, நார்வேயிலிருந்து வெளியேறும்படி கட்டாயப்படுத்தப்பட்டார் என்பதுதான் இதன் பொருள்—குடியரசு ஒன்றை அமைக்கும் திட்டத்தை ஒரு தேசீய வாக்கெடுப்பின்மூலம் சட்டபூர்வமாக நிராகரித்துவிட்டு, ஒரு மன்னரை அமைதியாகப் பொறுக்கி எடுத்தார்கள் நார்வே மக்கள். எல்லாத் தேசீய இயக்கங்களையும், சுதந்திர சுயேச்சையின் எல்லாத் தோற்றங்களையும் மேற்போக்காகப் பார்த்தே பாராட்டும் பலர் இருக்கிறார்கள். இவர்களால் 'புரட்சி' என்று கூறப்பட்ட இந்த இயக்கமானது உண்மையில் விவசாயிகளின், குட்டி பூர்ஷ்வாக்களின் தனித்துவவாதத்தை—அதாவது, ஸ்வீடிஷ் உயர்குடிமக்களால் தங்கள் மீது திணிக்கப்பட்ட மன்னனுக்குப் பதிலாக, தங்களது பணத்துக்குத் 'தங்களுக்கே சொந்தமான' ஒரு மன்னனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் விருப்பத்தைக் காட்டியது; ஆகவே, புரட்சிக்கும் இவ்வியக்கத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அதே சமயம், ஸ்வீடனுக்கும் நார்வேக்குமிடையிலான ஐக்கியம் கலைக்கப்பட்டது எவ்வளவு தூரம்

இதுவரை நீடித்த இந்தக் கூட்டாட்சியும்கூட முற்றிலும் அரசவம்ச நலன்களின் ஒரு வடிவமேயன்றி வேறில்லை என்பதையும், முடியாட்சிக் கொள்கையின், பிற்போக்கின் ஒரு வடிவமேயன்றி வேறில்லை என்பதையும் மீண்டுமொரு முறை காட்டியது?'' (*Przeglad.*)

இந்த விஷயத்தைப் பற்றி ரோஸா லுக்ஸம்பர்க் சொல்லக்கூடியது இவ்வளவேதான்!! எடுத்துக்கொண்ட இந்த உதாரணத்தில் தாம் வெளிக்காட்டியுள்ளதற்கு மேல் இன்னும் தெளிவாகத் தமது வாதத்தின் ஏலாமையை வெளியிடுவது அவருக்குக் கடினமாகத்தான் இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பலதேசீய இனங்களைக் கொண்ட ஒரு அரசில் உள்ள சோஷல்-டெமாகிராட்டுகளுக்கு, சுயநிர்ணய உரிமையை அல்லது பிரிந்துபோகும் உரிமையை அங்கீகரிக்கும் ஒரு செயல்திட்டம் தேவையா?—இதுதான் கேள்வி, அன்றும், இன்றும்.

ரோஸா லுக்ஸம்பர்க் எடுத்துக்காட்டிய நார்வேயின் உதாரணம் இந்த விஷயத்தைப் பற்றி நமக்கு என்ன கற்பிக்கின்றது?

நமது ஆசிரியர் செப்படிவித்தை யெல்லாம் செய்கிறார்; தமது சாமர்த்தியத்தைக் காட்டுகிறார்; ''நப்ஷூத்தைத்'' திட்டுகிறார்; ஆனால், கேள்விக்கு மட்டும் பதில் சொல்லவில்லை!! எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் கூறாமலிருக்கும் பொருட்டு உலகத்திலுள்ள மற்ற அனைத்தையும் பற்றி ரோஸா லுக்ஸம்பர்க் பேசுகிறார்!

தங்களது பணத்துக்குத் தங்களுக்கே சொந்தமான ஒரு மன்னனை விரும்பியதிலும், குடியரசை ஏற்படுத்தும் திட்டத்தைப் பொது மக்கள் வாக்கெடுப்பு ஒன்றில் நிராகரித்ததிலும் நார்வேக் குட்டி பூர்ஷ்வாக்கள் படுமோசமான பிலிஸ்டைன் தன்மைகளைக் காட்டிவிட்டார்கள் என்பதில் ஐயமில்லை. இதைக் காணத் தவறியதில் ''நப்ஷூத்'' கூட அதே அளவு மோசமான தன்மைகளையும் அது போன்ற பிலிஸ்டைன் தன்மைகளையும் காட்டிவிட்டது என்பதிலும் ஐயமில்லை.

ஆனால் இவைகளுக்கும் விஷயத்துக்கும் என்ன சம்பந்தம்?

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையும், இந்த உரிமைபற்றி சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கம் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைப் போக்கும்தான் நாம் விவாதத்துக் கெடுத்துக் கொண்ட பிரச்சினை! சுற்றி வளைத்துப் பேசுவதை விட்டுவிட்டு இந்தப் பிரச்சினைக்கு ரோஸா லுக்ஸம்பர்க் ஏன் விடையளிக்கவில்லை?

எலியின் கண்ணில் பூனைதான் மிகவலிய மிருகம் என்று சொல்வதுண்டு. ரோஸா லுக்ஸம்பர்குக்கு ''பிராசியை'' விடப் பலசாலியான மிருகமில்லை என்பது தெளிவு. ''பிராசி'' என்பது ''போலிஷ் சோஷலிஸ்ட் கட்சிக்கு'', அதன் புரட்சி கரப் பிரிவு எனப்படுவதற்குப் பொதுவழக்கிலுள்ள ஒரு பெயர். அந்தப் ''பிரிவின்'' கருத்துக்களைக் க்ராக்கோவ் செய்தித்தாளான ''நப்ஷொத்தும்'' அனுசரிக்கிறது. ''அப்பிரி வின்'' தேசியவாதத்தை எதிர்த்துத் தீவிரமாகப் போராடு வதில் தம் முழுக்கவனத்தையும் செலுத்துவதால் ரோஸா லுக்ஸம்பர்குக்கு ''நப்ஷொத்'' தவிர மற்றது எதுவும் கண் ணுக்குப் புலப்படவில்லை.

''நப்ஷொத்'' ''ஆம்'' என்று சொன்னால் உடனே ''இல்லை'' என்று சொல்வதுதான் தமது புனிதக் கடமை என்று ரோஸா லுக்ஸம்பர்க் கருதுகிறார். தாம் அப்படிச் செய்வது ''நப்ஷொத்தின்'' கருத்துக்களிலிருந்து விடுபட்டுச் சுயமாகத் தாம் செயல்படுவதைக் காட்டவில்லை என்பதையும், அதற்கு மாறாக ''பிராசியின்'' மேல் தாம் பரிகசிக்கத்தக்க அளவு சார்ந்திருப்பதை அது புலப்படுத்துகிறது என்பதையும், அந்தக் க்ராக்கோவ் எறும்புப்புற்றின் கண்ணோட்டத்தைவிட ஆழமான, விசாலமான கண்ணோட்டத்துடன் பொருள்களைத் தம்மால் பார்க்க முடியாததை அது புலப்படுத்துகிறது என்பதையும் சிறிதளவும் அவர் சிந்தித்துப் பார்க்கவில்லை. உண்மையில் ''நப்ஷொத்'' ஒரு சீர்கேடான பத்திரிகை; அது எவ்விதத்திலும் ஒரு மார்க்ஸீயப் பத்திரிகையே அல்ல. ஆனால், நார்வேயின் உதாரணத்தை நாம் எடுத்துக் கொண்ட பின் அதை நன்கு பரிசீலனை செய்வதை இது தடை செய்யக் கூடாது.

இந்த உதாரணத்தை மார்க்ஸீய முறையில் நன்கு பிரித்து ஆராய்வதற்கு, படுபயங்கரமான ''பிராசியின்''

நேர்மையற்ற கருத்துக்களைப்பற்றிப் பேசுவதில் பயனில்லை. அதற்குப் பதிலாக, ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிந்து போவதின் ஸ்தூல வரலாற்று அம்சங்களை முதலில் நாம் கவனிக்க வேண்டும்; இரண்டாவதாக இந்தப் பிரிவு சம்பந்தமாக இரு நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தை எதிர்நோக்கிய கடமைகளை கவனிக்க வேண்டும்.

பெரிய-ருஷ்யர்களுக்கும் மற்றும் பல ஸ்லாவிய தேசிய இனங்களுக்குமிடையிலான பூகோள, பொருளாதார, மொழி உறவுகள் எவ்வளவு நெருக்கமானவையோ, அவ்வளவு நெருக்கமானவைதாம் நார்வேக்கும் ஸ்வீடனுக்குமிடையிலான உறவுகளும். ஆனால் நார்வே ஸ்வீடனின் ஐக்கியம் மக்கள் விரும்பித் தாங்களாக முன்வந்து செய்து கொண்டதல்ல. ''கூட்டாட்சி'' என்கிற பிரச்சினையை ரோஸா லுக்ஸம்பர்க் இங்குக் கொண்டுவந்து நுழைத்தது முற்றிலும் வீண்; அதற்குக் காரணம் அவருக்கு என்ன சொல்வதென்பது தெரியாததுதான். நெப்போலியனை எதிர்த்து நடந்த போர்களின் பொழுது, நார்வே மக்களின் விருப்பத்துக்கு எதிராக, நார்வே ஸ்வீடனுக்கு மன்னர்களால் அளிக்கப்பட்டது; நார்வேயை அடக்கிக் கீழ்ப்படியுமாறு செய்வதற்கு ஸ்வீடிஷ்காரர்கள் அந்நாட்டிற்குள் துருப்புக்களைக் கொண்டு வர வேண்டியிருந்தது.

நார்வேக்கு மிக விரிவான, சுயநிர்வாக உரிமை கொடுக்கப்பட்டிருந்த போதிலும் (அது தனக்கே சொந்தமாக ஒரு பாராளுமன்றம் முதலியனவற்றைப் பெற்றிருந்தது) கூட்டு சேர்ந்த பிறகு பல ஆண்டுகள் நார்வேக்கும் ஸ்வீடனுக்குமிடையில் தகராறுகள், மோதல்கள் இருந்து வந்தன; ஸ்வீடிஷ் உயர்குடியினரின் ஆட்சியை உதறி எறிவதற்கு நார்வே மக்கள் தீவிரமாக முயன்றார்கள். கடைசியில் 1905 ஆகஸ்டில் அவர்கள் வெற்றிபெற்றனர்; ஸ்வீடிஷ் மன்னர் இனியும் நார்வேயின் மன்னரல்லர் என நார்வே பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது; பின்னர் நடந்த பொதுமக்கள் வாக்கெடுப்பில் மிகப்பெருவாரியான நார்வே மக்கள்(சுமார் 200,000 பேர் ஆதரவாகவும், சில நூறு பேர் எதிராகவும்) ஸ்வீடனிலிருந்து அறவே பிரிந்து போவதற்கு வாக்களித்தனர். என்ன செய்வதென்று முடிவு செய்யாமல் சிறிது காலம்

இருந்தபின், ஸ்வீடிஷ்காரர்கள் பிரிவு உண்மையான விஷயம் தான் என்று ஏற்றுக்கொண்டு வாளாவிருந்தனர்.

நவீனப் பொருளாதார, அரசியல் உறவுகளின் கீழ் எந்த அடிப்படையில் தேசீய இனங்கள் பிரிந்துபோதல் நடைமுறைச் சாத்தியமாகிறது, உண்மையில் ஏற்படுகின்றது என்பதையும் அரசியல் சுதந்திரம், ஜனநாயகம் என்கிற நிலைமைகளில் சில சமயங்களில் பிரிவினை எந்த வடிவத்தைக் கொள்கிறது என்பதையும் இந்த உதாரணம் நமக்குக் காண்பிக்கிறது.

தேசீய இனங்கள் பிரிந்து போவது பற்றி எழக்கூடிய மோதல்களை ''ருஷ்ய முறையில்'' தீர்க்காமல், நார்வேக்கும் ஸ்வீடனுக்குமிடையில் 1905ல் அது தீர்க்கப்பட்டதே அதே முறையில் தீர்ப்பதற்கு முறையாகப் பிரசாரம் செய்வதும், மக்களைத் தயார் செய்வதும் வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்களின் கட்டாயக் கடமை என்பதை இந்த உதாரணமானது அதன் சாராம்சத்தில் நிரூபிக்கிறது என்பதை எந்த சோஷல்-டெமாகிராட்டும் மறுக்க முடியாது. இதை மறுக்கும் ஒரு சோஷல்-டெமாகிராட்டு அரசியல் சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய பிரச்சினைகளைப்பற்றி அக்கறையில்லாதவராக இருக்கவேண்டும் (அப்படியானால் அவர் அப்போது சோஷல்-டெமாகிராட்டே அல்ல). தேசீய இனங்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று செயல் திட்டம் கோருவதன் உண்மையான பொருள் இதுதான். நார்வே பிலிஸ்டைன்களின் பிலிஸ்டைன் தன்மையையும், க்ராக்கோவ் பத்திரிகையான ''நப்ஷெ௵த்தையும்'' கடுமையாகத் தாக்குவதன் மூலம் தமது சித்தாந்தத்துக்கு ஒத்துவராத ஒரு உண்மையிலிருந்து தப்பித்துக் கொள்ள ரோஸா லுக்ஸம்பர்க் முயன்றார்; ஏனென்றால், தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையைக் ''கற்பனை ரீதியானது'' அல்லது ''தங்கத் தாம்பாளத்தில் உணவருந்தும்'' உரிமை கோருவது என்ற வாய்ச்சொற்களால் ரோஸா லுக்ஸம்பர்க் வருணித்தாரே, அதை இந்த வரலாற்று உண்மை அடியோடு மறுக்கிறது என்பதை அவர் நன்றாக அறிந்து கொண்டார். கிழக்கு ஐரோப்பியச் சிறு தேசீய இனங்களிடையில் தற்பொழுது நிலவும் சக்திகளின் ஒப்புநிலை ஸ்திரமானது என்ற ஒரு சுய திருப்திகர

மான, சந்தர்ப்பவாத நம்பிக்கையைத்தான் இத்தகைய வாய்ச்சொற்கள் வெளியிடுகின்றன.

மேலே கவனிப்போம். மற்ற பிரச்சினைகளைப் போலவே தேசீய இனங்களின் சுயநிர்ணயப் பிரச்சினையிலும் முதன் முதலாக நாம் அக்கறை காட்டுவது ஒரு குறிப்பிட்ட தேசீய இனத்திற்குள்ளிருக்கும் பாட்டாளி வர்க்கத்தின் சுய நிர்ணயம் பற்றித்தான். இந்தப் பிரச்சினையையும் தன்னடக்கத்துடன் தட்டிக் கழித்து விட்டார் ரோஸா லுக்ஸம்பர்க். ஏனென்றால், நார்வேயின் உதாரணத்தின் அடிப்படையில்— இதை உதாரணமாக மேற்கொண்டது அவரேதான் — இப்பிரச்சினையை ஆராய்வது தமது ''சித்தாந்தத்துக்குப்'' பேராபத்தானது என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

பிரிதல் பிரச்சினைபற்றி எழுந்த மோதலில் நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளின் பாட்டாளி வர்க்கம் என்ன நிலைமையை மேற்கொண்டது? என்ன நிலைமையை மேற்கொள்ள வேண்டியிருந்தது? நார்வே பிரிந்த பிறகு, நார்வேயின் வர்க்க உணர்வுகொண்ட தொழிலாளர்கள் குடியரசு* அமைக்க வேண்டுமென்றுதான் வாக்களித்திருப்பார்கள். சில சோஷலிஸ்டுகள் அதற்கு மாறாக வாக்களித்தார்கள் என்றால், ஐரோப்பிய சோஷலிஸ இயக்கத்தில் எவ்வளவு மடத்தனமான பிலிஸ்டைன் சந்தர்ப்பவாதம் சிற்சில சமயங்களில் காணப்படுகிறது என்பதைத்தான் அது காண்பிக்கிறது. இதைப்பற்றி இரண்டு அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. இதை நாம் ஏன் கூறுகிறோமென்றால், ரோஸா லுக்ஸம்பர்க் அவர்கள் சம்பந்தமில்லாமல் எதையாவது பேசி விஷயத்தை மழுப்ப முயற்சி செய்கிறார். பிரிதல் பிரச்சினைபற்றி நார்வேயின் சோஷல்-டெமாகிராட்டுகள் குறிப்பிட்ட கருத்துக்களைத் தான் கொண்டிருக்க வேண்டுமென்று நார்வே சோஷலிஸ்டுச்

---

* நார்வே தேசீய இன மக்களில் பெரும்பான்மையினர் முடியாட்சியை விரும்பினர், ஆனால் பாட்டாளிகளோ ஒரு குடியரசை விரும்பினர். எனவே, நார்வேயின் பாட்டாளி வர்க்கம் இரண்டில் ஒன்றை முடிவு செய்ய வேண்டியிருந்தது: நிலைமைகள் சாதகமாக இருந்தால் புரட்சி; அல்லது பெரும்பான்மையின் விருப்பத்துக்கு இணங்கி நின்று தொடர்ந்து பிரசாரமும் கிளர்ச்சியும் நடத்துவது.

செயல்திட்டம் வலியுறுத்தியதா என்பது நமக்குத் தெரிய வில்லை. அது அவ்வாறு செய்யவில்லை என்று நாம் வைத்துக் கொள்வோம். வர்க்கப் போராட்டத்தைத் தடையின்றி நடத்துவதற்கு நார்வேயின் சுயநிர்வாக உரிமையானது எந்த அளவுக்கு வகை செய்தது என்பதைப் பற்றியும், அல்லது ஸ்வீடிஷ் உயர்குடி மக்கள் ஆட்சியுடனுன முடிவற்ற மோதல்களும் பூசல்களும் எந்த அளவுக்குப் பொருளாதார வாழ்வின் சுதந்திரத்துக்குத் தடையாக விளங்கின என்பதைப் பற்றியும் அது ஒன்றும் கூறவில்லை என்று நாம் வைத்துக் கொள்வோம். ஆனல் நார்வேயின் பாட்டாளி வர்க்கம் உயர்குடியினரின் ஆட்சியை எதிர்த்து, நார்வேயின் குடியானவர் ஜனநாயகத்தை (அதிலுள்ள பிலிஸ்டைன்வாதக் குறைபாடுகளுடன்) ஆதரிக்க வேண்டியிருந்தது என்பதை மறுக்க முடியாது.

ஸ்வீடிஷ் பாட்டாளி வர்க்கம் என்ன செய்தது? ஸ்வீடிஷ் நிலப்பிரபுக்கள், நார்வேக்கு எதிராகப் போர்தொடுக்க வேண்டுமென்று ஸ்வீடிஷ் குருமார்களின் தூண்டுதலுடன் கோரினர் என்பது எல்லோருக்கும் தெரியும். நார்வே ஸ்வீடனைவிட மிகவும் பலவீனமானது; ஏற்கெனவே ஸ்வீடிஷ் படையெடுப்பை அது அனுபவித்திருந்தது; ஸ்வீடிஷ் உயர் குடியினர் தமது நாட்டில் மிகப்பெரும் செல்வாக்குப் பெற்று விளங்கினர்; எனவே, இக்கோரிக்கையானது மிகவும் கவலைக் கிடமானதொரு ஆபத்தைத் தோற்றுவித்தது. ''தேசிய இனங்களின் அரசியல் சுயநிர்ணயம் பற்றிய வளைந்துகொடுக்கும் சூத்திரங்களை'' ''ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தும், ''அரசு துண்டுபட்டுக் கலைந்துபோகும்'' அபாயத்தைப் பற்றி மக்கள் நடுங்கும் அளவுக்கு மிகைப்படுத்திக் கூறியும், ''மக்களின் சுதந்திரம்'' ஸ்வீடிஷ் உயர்குடியினரின் மரபுகளுக்கு இயைந்ததுதான் என்று அவர்களுக்கு உறுதிகூறியும் ஸ்வீடிஷ் மக்களின் மனத்தைக் கெடுப்பதில் ஸ்வீடிஷ் கோக்கோஷ்கின்கள் அதிக நேரத்தையும் சக்தியையும் செலவிட்டார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. ஸ்வீடிஷ் சோஷல்-டெமாகிராட்டுகள் தங்களது சக்தி முழுவதையும் கொண்டு நிலப்பிரபுக்களினுடையவும் ''கோக்கோஷ்கினுடையவும்'' கொள்கைவாதத்துக்கும் கொள்கைக்கும் எதிராகவும் போராடாமலும்,

பொதுவாகத் தேசிய இனங்களுக்குச் சம அந்தஸ்து வேண்டும் (இக்கொள்கையைக் கோக்கோஷ்கின்களும் ஏற்றுக்கொள்கிறார்கள்) என்று கோரியது மட்டுமின்றி, அவைகளுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டுமென்றும், நார்வே பிரிந்து போவதற்கு உரிமை வேண்டும் என்றும் கோராமலும் இக் கோரிக்கைகளை எழுப்பாமலும் இருந்திருப்பார்களே ஆனால், அவர்கள் சோஷலிஸம், ஜனநாயகம் ஆகியவற்றின் நலன்களுக்குத் துரோகம் செய்தவர்களாகி இருப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

நார்வே, ஸ்வீடன் தொழிலாளர்களுக்கிடையிலான நெருங்கிய கூட்டும், அவர்களது பூரணமான சகோதர வர்க்க ஒருமைப்பாடும்தான் நார்வே மக்களின் பிரிந்துபோகும் உரிமையை ஸ்வீடிஷ் தொழிலாளிகள் ஏற்றுக்கொண்டதன் மூலம் லாபமடைந்தது. ஸ்வீடிஷ் தேசியவாதம் என்ற தொற்று நோயினால் ஸ்வீடிஷ் தொழிலாளிகள் பீடிக்கப்படவில்லை என்பதையும், அவர்கள் ஸ்வீடிஷ் பூர்ஷ்வாக்களின், உயர் குடியினரின் விசேஷ உரிமைகளைவிட நார்வேத் தொழிலாளிகளுடனான சகோதரப் பற்றை மேலானதாகப் போற்றினர் என்றும் இது நார்வேத் தொழிலாளிகட்கு நம்பிக்கை அளித்தது. ஐரோப்பிய மன்னர்களாலும் ஸ்வீடிஷ் உயர்குடியினராலும் நார்வேயின்மீது திணிக்கப்பட்ட உறவுகள் கலைந்ததால் நார்வே, ஸ்வீடன் தொழிலாளிகளின் உறவுகள் வலுவடைந்தன. பூர்ஷ்வாக் கொள்கைப்போக்கில் ஏற்படும் மாற்றங்கள் திருப்பங்கள் அனைத்தையும் மீறி—பூர்ஷ்வா உறவுகளின் விளைவாக நார்வேயானது மீண்டும் ஸ்வீடனுக்குக் கீழ்ப்பட்டதாக்கப் படுதலும் சாத்தியமே!—ஸ்வீடிஷ், நார்வே ஆகிய இரு பூர்ஷ்வாக்களுக்கெதிரான போராட்டத்தில் இரு தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் சம அந்தஸ்தையும் வர்க்க ஒருமைப்பாட்டையும் தங்களால் பேணிப்பாது காக்க முடியும் என்பதை ஸ்வீடிஷ் தொழிலாளர்கள் நிரூபித்து விட்டார்கள்.

ரோஸா லுக்ஸம்பர்குடன் நமக்குள்ள கருத்து வேறுபாடுகளை போலிஷ் சோஷல்-டெமாகிராட்டுகளுக்கெதிராகப் ''பயன்படுத்துவதற்குச்'' சில சமயங்களில் ''பிராசி'' செய்யும் முயற்சிகள் எவ்வளவு ஆதாரமற்றவை என்பதை

யும் எவ்வளவு விளையாட்டுத் தனமானவை என்பதையும் இது, மற்றவற்றுடன், நன்ருகப் புலப்படுத்துகிறது. ''பிராசி'' ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியோ அல்லது சோஷலிஸ்ட் கட்சியோ அல்ல; போலிஷ் சோஷல்-புரட்சிவாதிகளைப் போன்றதொரு குட்டி பூர்ஷ்வாத் தேசியவாதக் கட்சி. இக்கட்சிக்கும் ருஷ்ய சோஷல்-டெமாகிராட்டுகளுக்கும் இடையில் ஐக்கியம் என்ற பேச்சு எப்பொழுதும் இருந்ததில்லை, இருக்கவும் முடியாது. அதற்கு மாருக, போலிஷ் சோஷல் - டெமாகிராட்டுகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள நெருக்கமான உறவுகள் பற்றியும் ஐக்கியம் பற்றியும் எந்த ஒரு ருஷ்ய சோஷல் - டெமாகிராட்டும் எப்பொழுதும் ''வருந்தியதில்லை''. தேசியவாத அபிலாஷைகளும் ஆர்வமான ஆவேச உணர்வுகளும் ஊறிக்கிடக்கும் நாடாகிய போலந்தில் முதன்முதலாக உண்மையிலேயே மார்க்ஸீய, பாட்டாளி வர்க்கக் கட்சியொன்றை உருவாக்கி, ஒரு மகத்தான வரலாற்றுபூர்வமான பணியையே ஆற்றியிருக்கிருர்கள் போலிஷ் சோஷல்-டெமாகிராட்டுகள். போலிஷ் சோஷல்-டெமாகிராட்டுகள் ஆற்றியுள்ள பணி மகத்தானது; காரணம்: ருஷ்ய மார்க்ஸீயவாதிகளின் செயல்திட்டத்தின் 9வது பாராவைப் பற்றி முட்டாள்தனமாக நிறையப் பேசியிருக்கிருரே ரோஸா லுக்ஸம்பர்க் அதனுல் அல்ல; அந்த வருந்தத்தக்க சம்பவத்தையும் மீறிய வகையில் அது பெரும்பணி.

''சுயநிர்ணய உரிமைப்'' பிரச்சினை ருஷ்ய சோஷல்-டெமாகிராட்டுகளுக்கு எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு போலிஷ் சோஷல்-டெமாகிராட்டுகளுக்கு முக்கியமானதல்ல என்பது உண்மைதான். தேசியவாதத்தினுல் கண்குருடாகிப்போன போலந்தின் குட்டி பூர்ஷ்வாக்களை எதிர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தினுல்(சில சமயங்களில் இந்த ஆர்வம் சற்று அதிகப்படியாக இருக்கலாம்) போலிஷ் சோஷல்-டெமாகிராட்டுகள் சற்று மிகையான வகையில் நடக்கலாம். இது நன்கு புரிந்துகொள்ளக்கூடியதே. போலிஷ் சோஷல்-டெமாகிராட்டுகள் போலந்து பிரிந்துசெல்வதை எதிர்க்கிருர்கள் என்பதற்காக அவர்களை எந்த ஒரு ருஷ்ய மார்க்ஸீயவாதியும் எப்பொழுதும் குறைகூற எண்ணியதில்லை; சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதை ருஷ்யாவின் மார்க்

ஸீயவாதிகளின் செயல்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை ரோஸா லுக்ஸம்பர்கைப் போலவே இந்த சோஷல்-டெமாகிராட்டுகளும் மறுக்க முயல்கிறார்களே, அப்போதுதான் அவர்கள் தவறு செய்கின்றனர்.

ருஷ்யாவில் வசிக்கும் எல்லா மக்கள் இனங்களுக்கும் தேசிய இனங்களுக்கும், பெரிய - ருஷ்யர்களுக்கும் கூட, க்ராக்கோவ் நோக்குக்கு ஒத்த உறவுமுறைகளை ஏற்படுத்த முயல்வது போன்றதே இது. இது ''தவறான வழியில் போலிஷ் தேசியவாதிகளாக''—ருஷ்ய, சர்வதேச சோஷல்-டெமாகிராட்டுகளாக அல்ல—இருப்பதாகும்.

ஏனென்றால் சர்வதேச சோஷல்-டெமாகிரஸியானது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு ஆதரவாக நிற்கிறது. இதை நாம் அடுத்தபடி விவாதிப்போம்.

## 7. 1896ம் ஆண்டு லண்டன் சர்வதேசக் காங்கிரஸின் தீர்மானம்

*தீர்மானத்தின் வாசகம்:*

''எல்லாத் தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணயம் செய்து கொள்ளும் முழு உரிமையைத் (Selbstbestimmungsrecht) தான் ஆதரிப்பதாக இக்காங்கிரஸ் அறிவிக்கிறது; ராணுவ, தேசிய அல்லது இதர யதேச்சாதிகாரத்தின் பிடியில் இப்பொழுது நசுக்கப்படுகின்ற எல்லா நாடுகளின் தொழிலாளர்களுக்கும் இது தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. சர்வதேச முதலாளித்துவத்தை முறியடிப்பதற்காகவும், சர்வதேச சோஷல்-டெமாகிரஸியின் இலட்சியங்களை அடைவதற்காகவும் ஒன்றுசேர்ந்து போராடுவதற்காக, உலகமெங்கும் உள்ள வர்க்க உணர்வு கொண்ட ((Klassen bewusste-தங்களது வர்க்க நலன்களை அறிந்து கொண்டவர்கள்) தொழிலாளர்களின் அணியில் சேருமாறு இந்நாடுகள் அனைத்திலுமுள்ள தொழிலாளர்களையும் இக்காங்கிரஸ் அறைகூவி அழைக்கிறது.*

---

* லண்டன் காங்கிரஸின் அதிகாரபூர்வமான ஜெர்மன் மொழி அறிக்கையைப் பார்க்க: „Verhandlungen und Beschlüs-

நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருப்பது போல் நமது சந்தர்ப்பவாதிகளாகிய ஸெம்கோவ்ஸ்க்கிய், லீப்மன், யுர்க் கேவிச் ஆகியவர்களுக்கு இந்தத் தீர்மானம் இருப்பதே தெரியாது. ஆனால் ரோஸா லுக்ஸம்பர்குக்கு இது தெரியும்; அவர் இதன் முழு வாசகத்தையும் மேற்கோள் காட்டுகிறார். அதில் நமது செயல்திட்டத்தில் காணப்படும் ''சுயநிர்ணயம்'' என்ற அதே வார்த்தையும் காணப்படுகிறது.

தமது ''தனிவகைப்பட்ட'' சித்தாந்தத்தின் பாதையிலிருந்து இந்தத் தடையை ரோஸா லுக்ஸம்பர்க் எவ்வாறு விலக்குகிறார்?

ஓ, அது மிகவும் எளிது: ...தீர்மானத்தின் வலியுறுத்தல் எல்லாம் இரண்டாம் பகுதியில்தான் இருக்கிறது... அதன் பிரகடனத்தன்மையில்... ஏதோ தவறுதலாகத்தான் யாரும் அதை எடுத்துக் கூறமுடியும்!!

நமது ஆசிரியரின் ஏலாமையும் குழப்பமும் ஆச்சரியப்படத்தக்கன. செயல்திட்டத்தில் காணப்படும் முரண்பாடற்ற ஜனநாயக, சோஷலிஸ்ட் அம்சங்கள் வெறும் பறைசாற்றல் வார்த்தைகள் என்று கூறி, அவைகளைப் பற்றி ஒரு பொது விவாதம் நடைபெறுவதைக் கோழைத்தனமாகத் தவிர்ப்பவர்கள் வழக்கமாகச் சந்தர்ப்பவாதிகள் மட்டும்தான். ஸெம்கோவ்ஸ்க்கிய்கள், லீப்மன்கள், யுர்க்கேவிச்சுகள் ஆகியோரின் வருந்தத்தக்க கும்பலில் ரோஸா லுக்ஸம்பர்க் இந்தச் சமயத்தில் நிற்பதற்குக் காரணமில்லாமலில்லை. மேற்

---

se des internationalen sozialistischen Arbeiter-und Gewerkschafts-Kongresses zu London, vom 27. Juli bis 1. August 1896," Berlin 1896, S. 18 (''1896, ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 1 வரை லண்டனில் நடந்த சோஷலிஸத் தொழிலாளர் கட்சிகள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் சர்வதேசக் காங்கிரஸின் நிகழ்ச்சிப் பதிவேடுகளும் தீர்மானங்களும்'', பெர்லின், 1896, பக்கம் 18—பதிப்பாசிரியர்கள்). சர்வதேசக் காங்கிரஸ்களின் முடிவுகளடங்கிய ஒரு ருஷ்ய மொழித் துண்டுப்பிரசுரமும் வெளியிடப்பட்டுள்ளது. அதில் ''சுயநிர்ணயம்'' என்ற சொல் ''சுயநிர்வாகம்'' என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சொன்ன தீர்மானம் சரி என்று தாம் கருதுகிருரா அல்லது தவறு என்று கருதுகிருரா என்பதை வெளிப்படையாக அறிவிக்க ரோஸா லுக்ஸம்பர்க் துணியவில்லை. அவர் மழுப்புகிருர், ஒளிந்து தப்புகிருர். வாசகர்கள் கவனக்குறைவாகவோ, விஷயம் தெரியாதவர்களாகவோ இருப்பார்கள் என்றும், தீர்மானத்தின் இரண்டாவது பகுதியைப் படிக்கத் துவங்கும் பொழுது முதல் பகுதியை மறந்து விடுவார்கள் என்றும், லண்டன் காங்கிரசுக்கு முன்பு சோஷலிஸ்ட் பத்திரிகைகளில் நடைபெற்ற விவாதத்தைக் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள் என்றும் அவர் நினைத்துக் கொண்டிருக்கிருர் போலும்.

இத்தகையதொரு முக்கியமான, கோட்பாட்டுரீதியான பிரச்சினைபற்றிய இண்டர்நேஷனலின் தீர்மானத்தை விமர்சனக் கண்ணேட்டத்தில் ஒப்புக்குக்கூட ஆராயாமல் வர்க்க உணர்வு கொண்ட ருஷ்யத் தொழிலாளர்களின் கண்களுக்கு முன்னலேயே அதை மிதித்து நசுக்கி விட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்று ரோஸா லுக்ஸம்பர்க் நினைத்தால் அது பெருந்தவறு.

லண்டன் காங்கிரஸுக்கு முன்பு, ஜெர்மன் மார்க்ஸீயவாதிகளின் பத்திரிகையான "*Die Neue Zeit*" என்பதில் நடைபெற்ற விவாதத்தின் பொழுது ரோஸா லுக்ஸம்பர்கின் கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டன; இந்த நோக்குநிலை, இண்டர்நேஷனலில் எதார்த்தத்தில் தோற்கடிக்கப்பட்டது! விஷயத்தின் சாராம்சம் இங்கேதான் இருக்கிறது; இதைச் சிறப்பாக ருஷ்ய வாசகர் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

விவாதத்தில் போலந்தின் சுயேச்சை பற்றிப் பேச்சு எழுந்தது. மூன்றுவித நோக்குநிலைகள் முன்வைக்கப்பட்டன:

1) ''பிராசியின்'' நோக்குநிலை, அதன் சார்பில் ஹேக்கர் பேசினுர். போலந்துக்குச் சுதந்திரமளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இண்டர்நேஷனல் தன்னுடைய சொந்தச் செயல்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என அவர்கள் விரும்பினுர்கள். இத்தீர்மானம் நிறைவேறவில்லை. இந்த நோக்குநிலை இண்டர்நேஷனலில் தோற்கடிக்கப்பட்டது.

2) ரோஸா லுக்ஸம்பர்கின் நோக்குநிலை: போலிஷ்

சோஷலிஸ்டுகள் போலந்துக்குச் சுதந்திரம் வேண்டும் எனக் கோரக் கூடாது. இக்கருத்தானது தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையைப் பிரகடனப்படுத்துவதை முழுவதும் தடை செய்தது. அதுவும் அதேபோல இண்டர்நேஷனலில் தோற்கடிக்கப்பட்டது.

3) கா. காவுத்ஸ்கியால் அப்பொழுது விளக்கிக் கூறப் பட்ட நோக்குநிலை; இவர் ரோஸா லுக்ஸம்பர்கை எதிர்த்து, அவரது பொருள்முதல்வாதம் மிகவும் ''ஒருதலையானது'' என்று நிரூபித்தார். இச்சமயத்தில் போலந்தின் சுதந்திரப் பிரச்சினையை இண்டர்நேஷனல் தனது செயல்திட்டத்தில் ஒரு முக்கிய விஷயமாகச் சேர்ப்பதற்கு இயலாது, ஆயினும் அத்தகையதொரு கோரிக்கையை எழுப்புவதற்குப் போலிஷ் சோஷலிஸ்டுகளுக்கு முழு உரிமை உண்டு என்பது காவுத்ஸ்கியின் வாதம். தேசீயவாத நசுக்கல் இருக்கும் ஒரு நிலையில் தேசீய விடுதலைப் பணியைப் புறக்கணிப்பது சோஷலிஸ்டுகளின் நோக்குநிலையின்படி தவறானது என்பதில் சந்தேகமே இல்லை.

இந்த நோக்குநிலையிலுள்ள மிகவும் முக்கியமான அடிப் படையான கூற்றுகளை இண்டர்நேஷனலின் தீர்மானம் எடுத்துரைக்கிறது. ஒருபுறத்தில் எல்லாத் தேசீய இனங்களின் சுயநிர்ணயத்துக்கான பரிபூர்ண உரிமையையும் நேரடியாகவும் ஐயத்துக்கிடமின்றியும் முழுமையாக ஏற்றுக் கொள்வது; மறுபுறம் தொழிலாளர்கள் தங்களது வர்க்கப் போராட்டத்தில் சர்வதேச ரீதியில் ஐக்கியப்பட வேண்டும் என்று அதேபோல ஐயத்துக்கிடமின்றி, திட்டவட்டமாக வேண்டுகோள் விடுப்பது.

இத்தீர்மானம் முழுக்க முழுக்கச் சரியானது என்றும், இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கிழக்கு ஐரோப்பிய, ஆசிய நாடுகளுக்கு, தேசீயப் பிரச்சினையில் பாட்டாளி வர்க்கக் கொள்கைக்கு வேண்டிய சரியான வழிகாட்டியாக, ஒரே ஒரு வழிகாட்டியாக, இத்தீர்மானம்தான்—அதன் இரு பாகங்களையும் சேர்த்து ஒரு முழுமையாக ஏற்றுக்கொண்டால்—விளங்குகிறது என்றும் நாம் கருதுகிறோம்.

மேற்சொன்ன மூவகை நோக்குநிலைகளையும் இன்னும் சற்று விவரமாகப் பார்ப்போம்.

போலந்தின் சுதந்திரக் கோரிக்கையைச் செயல்பூர்வமாக ஆதரிப்பது மேற்கு ஐரோப்பிய ஜனநாயகம் முழுவதன் கடமையும், அதற்கு மேலாக சோஷல் - டெமாகிரஸியின் கட்டாயக் கடமையும் ஆகும் என்று கார்ல் மார்க்ஸும் பிரீட்ரிஹ் எங்கெல்ஸும் கருதினர்கள் என்பது நமக்குத் தெரியும். 1840ம் ஆண்டுகளிலும், 1860 ஆண்டுகளிலுமான காலகட்டங்களுக்கு—இவைகள் ஆஸ்திரியாவிலும் ஜெர்மனியிலும் பூர்ஷ்வாப் புரட்சிகளின் காலம்; ருஷ்யாவில் ''விவசாயிகள் சீர்திருத்தக்''[27] காலம்—இந்த நோக்குநிலை மிகவும் சரியானது; இது மட்டும்தான் முரண்பாடற்ற ஜனநாயகரீதியானது, பாட்டாளி வர்க்க ரீதியானது. ருஷ்யாவிலும் பெரும்பாலான ஸ்லாவ் நாடுகளிலும் பொதுமக்கள் எவ்வளவு காலம் உணர்ச்சியற்ற உறக்க நிலையில் ஆழ்ந்து கிடந்தார்களோ, எவ்வளவு காலம் அந்நாடுகளில் சுயேச்சையான, பொதுஜன, ஜனநாயக இயக்கங்கள் இருக்கவில்லையோ, போலந்தின் சிறு நிலப்பிரபுக்களின் விடுதலை இயக்கமானது—ருஷ்யாவின் ஜனநாயகத்தின் நோக்குநிலையிலிருந்து மட்டுமின்றி, ஸ்லாவ் ஜனநாயகத்தின் நோக்குநிலையிலிருந்து மட்டுமின்றி, அகில ஐரோப்பிய ஜனநாயகத்தின் நோக்கு நிலையிலிருந்தும்—ஒரு பிரம்மாண்டமான, பிரதான முக்கியத்துவத்தைப் பெற்றது.*

ஆனல் 1840லிருந்து 1870 வரை அல்லது பத்தொன்ப

---

* 1863ன் ஒரு போலிஷ் கலகக்காரச் சிறு நிலப்பிரபுக்களின் நிலைமையை அகில-ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதியான செர்னிஷேவ்ஸ்க்கியின் நிலைமையுடனும்— அவருக்கு (மார்க்ஸைப் போல) போலிஷ் இயக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்க முடிந்தது — வெகுகாலத்துக்குப் பிந்தி தோன்றிய உக்ரேனிய பிலிஸ்டைன் த்ராகமானவின் நிலைமையுடனும் ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் அக்கறைக்குரிய வரலாற்று ஆராய்ச்சியாக இருக்கும். தனது எருக்குழியுடன் இணைந்து அறியாமையிலும் உறக்கத்திலும் ஆழ்ந்து கிடந்த ஒரு குடியானவரின் கருத்துக்களைப் பிரதிபலித்த த்ராகமானவால் போலிஷ் நிலப்பிரபுகளின் போராட்டமானது அகில-ருஷ்ய ஜனநாயகத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. காரணம் போலிஷ் நிலப்பிரபுக்கள் மீது அவருக்கிருந்த

தாம் நூற்றுண்டின் மூன்ருவது கால்பகுதிக்குப் பொருந்திய மார்க்ஸின் நோக்குநிலே, இருபதாம் நூற்ருண்டு தொடங்கியபொழுது பொருந்தாததாகி விட்டது. பெரும்பாலான ஸ்லாவ் நாடுகளில், மிகமிகப் பின்தங்கிய ஸ்லாவ் நாடுகளில் ஒன்ருகிய ருஷ்யாவிலும்கூட, சுயேச்சையான ஜனநாயக இயக்கங்கள்—ஒரு சுயேச்சையான பாட்டாளி வர்க்க இயக்கமும்கூட—தோன்றிவிட்டன. சிறு நிலப்பிரபுக்களுடைய போலந்து மறைந்து, முதலாளித்துவப் போலந்துக்கு இடமளித்துவிட்டது. இந்தச் சூழ்நிலேயில் போலந்து தனது அலாதியான புரட்சிகர முக்கியத்துவத்தை வேறு வழியின்றி இழக்க வேண்டியதாயிற்று.

**வேறு ஒரு காலகட்டத்தில்** மார்க்ஸ் கொண்டிருந்த நோக்குநிலேயை எல்லாக் காலத்துக்கும் பொருந்துவது என ''நிலேநாட்டுவதற்கு'' போ. சோ. கட்சி (போலிஷ் சோஷலிஸ்ட் கட்சி, இன்றைய ''பிராசி'') 1896ல் முயன்றது. இது மார்க்ஸீயத்தின் **பொருளே விட்டுவிட்டு வரிவடிவத்தை** மட்டும் ஏற்றுக்கொள்வதாகும். எனவே போலிஷ் குட்டி பூர்ஷ்வாக்களின் தீவிர தேசீயவாதத்தைப் போலிஷ் சோஷல்-டெமாகிராட்டுகள் தாக்கி, போலிஷ் தொழிலாளர்களுக்குத் தேசீயப் பிரச்சினேயானது இரண்டாந்தர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினே தான் என்று சுட்டிக் காட்டியது சரியானதே; போலந்தில் முதன்முதலாக முழுக்க முழுக்கப் பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றை அவர்கள் நிறுவியதும், போலிஷ், ருஷ்யத் தொழிலாளர்கள் தங்களது வர்க்கப் போராட்டத்தில் மிகமிக நெருக்கமான ஒற்றுமையைக் கொண்டிருக்க வேண்டும் என்ற பெருமுக்கியத்துவம் வாய்ந்த கோட்பாட்டை அவர்கள் அறிவித்ததும் சரியானவையே.

ஆனுல் இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில், தேசீய இனங்களின் அரசியல் சுயநிர்ணயக் கோட்பாடு அல்லது

---

நியாயமான வெறுப்பு (ஒப்பிடுக: த்ராகமானவ், ''வரலாற்று பூர்வமான போலந்தும் பெரிய-ருஷ்ய ஜனநாயகமும்''.) தேசீய-மிதவாதியாக ஏற்கனவே மாறிவிட்ட திரு. பி. பொ. ஸ்துருவே அவர்கள் த்ராகமானவை மகிழ்ச்சிப் பெருக்குடன் முத்தமிட்டார். இதற்கு த்ராகமானவ் மிகமிகத் தகுதி வாய்ந்தவர் தான்.

பிரிந்து போகும் உரிமை கிழக்கு ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் தேவையில்லாதது என்று இண்டர்நேஷனல் கருதலாம் என்பது இதன் பொருளா? இப்படிப்பொருள் கொள்வது மடமையின் உச்ச நிலையாயிருக்கும்; துருக்கிய, ருஷ்ய, சீன அரசுகளின் பூர்ஷ்வா-ஜனநாயகச் சீரமைப்பு நிறைவெய்திவிட்டது என்று நாம் (கோட்பாட்டு ரீதியில்) ஒத்துக் கொண்டதற்குச் சமமாகும்; மேலும், யதேச்சாதிகாரத்தின்பால் சந்தர்ப்பவாதத்தைக் (நடைமுறையில்) கடைப்பிடிப்பதாக இது இருக்கும்.

அது கூடாது. கிழக்கு ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிகள் தொடங்கிவிட்ட இக் காலத்தில், தேசீய இயக்கங்கள் விழித்தெழுந்து தீவிரமடையும் இக்காலத்தில், சுயேச்சையான பாட்டாளி வர்க்கக் கட்சிகள் நிறுவப்படும் இக்காலத்தில், தேசீயக் கொள்கைப் போக்கு பற்றி இக்கட்சிகளின் பணி இரண்டுவகைப்பட்டதாக இருக்க வேண்டும்: எல்லாத் தேசீய இனங்களின் சுய நிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொள்வது — ஏனென்றால், பூர்ஷ்வா-ஜனநாயகச் சீரமைப்பு இன்னும் முற்றுப்பெறவில்லை; தொழிலாளி வர்க்க ஜனநாயகமானது முரண்பாடற்ற முறையில், தீவிரமாக, மனப்பூர்வமாக (மிதவாத, கோக்கோஷ்கின் முறையில் அல்ல) தேசீய இனங்களுக்கு சம உரிமைக்காகப் போராடுகிறது; மற்றும் ஒரு குறிப்பிட்ட அரசின் எல்லைக்குள் வாழும் எல்லாத் தேசீய இனங்களின் பாட்டாளி மக்களும் தங்களது வர்க்கப் போராட்டத்தில் நெருக்கமாக, பிரிக்க முடியாதபடி ஒன்றுபடுவது—அவ்வரசின் வரலாற்றில் எம்மாறுதல்கள் நிகழ்ந்தாலும், பூர்ஷ்வாக்களால் தனி அரசுகளின் எல்லைகள் எவ்வாறு மாற்றப்பட்டாலும் இந்த ஒற்றுமை நீடிப்பதாக இருக்கும்.

பாட்டாளி வர்க்கத்தின் இந்த இருவகைக் கடமையைத்தான் இண்டர்நேஷனலின் 1896ம் வருடத்திய தீர்மானம் வகுக்கிறது. 1913 கோடையில் நடந்த ருஷ்ய மார்க்ஸீயவாதிகள் மகாநாட்டில்[28] நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் கோட்பாட்டு அடிப்படையில் இதுதான். இத்தீர்மானத்தின் 4வது அம்சம் சுயநிர்ணய உரிமையை, பிரிந்து போகும் உரிமையை அங்கீகரிக்கிறது, இது தேசீயவாதத்துக்கு உயர்ந்த

பட்ச அளவு ''கொடுத்து விடுவதாகத்'' தோன்றுகிறது என்றும் (உண்மையில், எல்லாத் தேசீய இனங்களின் சுய நிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொள்வது உயர்ந்தபட்ச அளவு ஜனநாயகத்தையும் குறைந்தபட்ச அளவு தேசீயவாதத்தை யும் குறிக்கிறது); ஆனால் 5வது அம்சமானது, எல்லாத் தேசீய இனங்களின் பூர்ஷ்வாக்களுடைய தேசீயவாதக் கோஷங் களுக்கெதிராகத் தொழிலாளர்களை எச்சரிக்கிறது, சர்வதேச ரீதியில் ஐக்கியப்பட்ட பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களில் எல்லாத் தேசீய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களும் ஒருமையுடன் இணைந்திருக்க வேண்டும் என அது கோருகிறது என்றும் இவ்விரண்டு அம்சங்களுக்கிடையிலும் ஒரு ''முரண் பாட்டைக்'' காண்பதாகவும் சிலர் சொல்கிறார்கள். ஆனால் மிகவும் மந்த புத்திக்காரர்களுக்குத்தான் இது ஒரு ''முரண் பாடு''. அவர்களால் ஒன்றையும் புரிந்துகொள்ள முடியாது. உதாரணமாக, பிரிந்து செல்லவும், தனியரசு அமைத்துக் கொள்ளவும் நார்வேக்கு உள்ள சுதந்திரத்தை ஸ்வீடிஷ் தொழி லாளர்கள் ஆதரித்தபொழுது ஸ்வீடிஷ், நார்வேப் பாட் டாளி மக்களுக்கிடையிலான ஒற்றுமையும் வர்க்க ஒருமைப் பாடும் எவ்வாறு ஏன் லாபமடைந்தது என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

## 8. கற்பனைவாதி கார்ல் மார்க்ஸும், காரியவாதி ரோஸா லுக்ஸம்பர்கும்

போலந்துக்குச் சுதந்திரம் என்பது ''கற்பனைரீதியானது'' என்று அதை அலுப்புத்தட்டும் அளவுக்குத் திருப்பித் திருப்பிக் கூறி, ''அயர்லாந்துக்குச் சுதந்திரம் வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பக் கூடாதா?'' என்று கிண்ட லாகக் கேட்கிறார் ரோஸா லுக்ஸம்பர்க்.

அயர்லாந்தின் சுதந்திரம் பற்றிக் கார்ல் மார்க்ஸின் கருத்து என்ன என்பது ''காரியவாதி'' ரோஸா லுக்ஸம்பர் குக்குத் தெரியாது போலும். இதைப்பற்றிச் சற்று கவனிப் பது பயனுள்ளதாயிருக்கும். ஸ்தூலமானதொரு தேசீய சுதந்திரக் கோரிக்கை எவ்வாறு உண்மையிலே ஒரு மார்க்

ஸீயக் கோணத்திலிருந்து — சந்தர்ப்பவாதக் கோணத்திலிருந்தல்ல—பிரித்து ஆராயப்பட்டது என்பதைக் காண்பிப்பதற்காக இதைப் பற்றி சற்றுக் கவனிப்பது நல்லது.

தமக்கு அறிமுகமான சோஷலிஸ்டுகளின் அறிவுத்திட்பத்தையும் கொள்கையுறுதியையும் சோதித்துப் பார்ப்பதற்காக அவர்களைஅவரே கூறும் சொற்களால் ''நோட்டம் பார்ப்பது'' மார்க்ஸின் வழக்கம்.[29] லொப்பாத்தின் அறிமுகமான பிறகு, 1870 ஜூலை 5ந் தேதி மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அந்த இளம் ருஷ்ய சோஷலிஸ்டை மிகவும் புகழ்ந்து அபிப்பிராயம் கூறினார். ஆனால் அடுத்த படியாக அதே சமயத்தில் பின்வருவதையும் சேர்த்து எழுதினார்:

''... போலந்து விஷயம் அவருடைய பலவீனம். ஒரு ஆங்கிலேயர்—பழைய போக்கைச் சேர்ந்த ஆங்கிலேய சார்டிஸ்ட் ஒருவர் — அயர்லாந்தைப் பற்றிப் பேசுவதைப் போலவே அவர் போலந்தைப் பற்றிப் பேசுகிறார்.''

ஒடுக்கும் தேசீய இனத்தைச் சேர்ந்த ஒரு சோஷலிஸ்ட் ஒடுக்கப்படும் தேசீய இனத்தைப் பற்றி எத்தகைய கொள்கையை உடையவராயிருக்கிறார் என்பது பற்றி மார்க்ஸ் அவரைக் கேள்விகள் கேட்கிறார்; உடனேயே மேலோங்கி நின்று ஆளும் தேசீய இனங்களின் (ஆங்கிலேய, ருஷ்ய தேசீய இனங்களின்) சோஷலிஸ்டுகளின் ஒரு பொதுக் குறையைப் புலப்படுத்துகிறார்: நசுக்கப்படும் தேசீய இனங்கள் விஷயத்தில் தாம் ஆற்றவேண்டிய சோஷலிசக் கடமைகளை உணர்ந்து கொள்ள அவர்கள் தவறியது, ''ஆதிக்கம் வகிக்கும் தேசீய இனத்தின்'' பூர்ஷ்வாக்களிடமிருந்து அவர்களது தப்பெண்ணங்களைப் பெற்று அப்படியே எதிரொலிப்பது.

அயர்லாந்தைப் பற்றி மார்க்ஸ் திட்டவட்டமாக என்ன கூறினார் என்பதை நாம் கவனிப்பதற்கு முன், தேசீயப் பிரச்சினைபற்றி மார்க்ஸ், எங்கெல்ஸின் கொள்கை பொதுவாக முழுக்க முழுக்க விமர்சனக் கண்ணோட்டமானது என்பதையும், வரலாற்று பூர்வமாக வரையறை செய்யப்பட்ட அதன் முக்கியத்தை அவர்கள் ஒத்துக் கொண்டார்கள் என்பதையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டும். உதாரணமாக, தமது வரலாற்று ஆராய்ச்சியானது போலந்து பற்றி நம்பிக்கை

அளிக்காத முடிவுகளைத் தம்மை மேற்கொள்ளும்படி செய்கிறது என்றும், போலந்தின் முக்கியத்துவம் தாற்காலிக மானதுதான்—ருஷ்யாவில் விவசாயப் புரட்சிவரைதான்—என்றும் 1851, மே 23ந் தேதி எங்கெல்ஸ் மார்க்ஸுக்கு எழுதினார். வரலாற்றில் போலிஷ்காரர்கள் ஆற்றிய பங்கு ''துணிவுடன்கூடிய முட்டாள்தனம்''. ''ருஷ்யாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால்கூட, போலந்தானது வெற்றிகரமாக முற்போக்கைப் பிரதிபலித்தது அல்லது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எதையாவது ஒன்றைச் செய்தது என்பதை நிரூபிக்க ஒரு உதாரணத்தைக்கூட நம்மால் சுட்டிக்காட்ட முடியவில்லை''. ''சோம்பல்மிக்க சிறு நிலப்பிரபுக்களைக் கொண்ட போலந்தைக்'' காட்டிலும் ருஷ்யாவில் அதிக நாகரிகம், கல்வி, தொழில், பூர்ஷ்வாக்கள் ஆகியவை காணப் படுகின்றன.''செயின்ட் பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, ஒதேஸ்ஸாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் வார்ஸாவும் க்ராக்கோவும் எம்மாத்திரம்!'' போலிஷ் சிறு நிலப்பிரபுக் கலகங்களின் வெற்றியில் எங்கெல்ஸுக்கு நம்பிக்கை இருக்கவில்லை.

ஆனால், மேதாவிலாசத்தின் கூரிய நுண்நோக்கை வெளிப் படுத்தும் இக்கருத்துக்கள், பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ருஷ்யாவானது தூங்கிக் கொண்டும் போலந்து கொந்தளித்துக் கொண்டும் இருந்த சமயத்தில் போலிஷ் இயக்கத்தை மிகவும் ஆழ்ந்த, தீவிர பரிவுடன் அணுக எங்கெல்ஸையும் மார்க்ஸையும் எவ்விதத்திலும் தடை செய்யவில்லை.

1864ல் இண்டர்நேஷனலின் அறிக்கையை வரைந்து கொண்டிருந்தபொழுது மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் (1864 நவம்பர் 4ந் தேதியன்று) தாம் மாஜினியின் தேசீயவாதத்தை எதிர்த்துப் போராட வேண்டுமென்று கூறி, மேலும் எழுதியதாவது: ''அறிக்கையில் சர்வதேசீய அரசியல் பேசப்படுவதால் நான் நாடுகளைப் பற்றிப் பேசினேன், சிறு தேசீய இனங்களைப் பற்றியல்ல; ருஷ்யாவைத் தாக்கிப் பேசினேன், முக்கியத்துவம் குறைந்த அரசுகளை அல்ல''. ''தொழிலாளர் பிரச்சினையுடன்'' ஒப்பிட்டால் தேசீயப் பிரச்சினை இரண்டாவதுதான் என்பதுபற்றி மார்க்ஸுக்குச் சந்தேகமே இல்லை. ஆனால் தேசீய

இயக்கங்களை அவரது தத்துவம் ஒருபொழுதும் அலட்சியப் படுத்தியதில்லை.

பிறகு 1866 வந்தது. பாரிஸில் உள்ள ''புரூதோன் வாதிகளின் கும்பலைப்'' பற்றி மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதினார். அக்கும்பல் ''சிறு தேசீய இனங்கள் அபத்தமானவை என்று கூறுகிறது; பிஸ்மார்க்கையும் காரிபால்டியையும் தாக்குகிறது. ஷோவினிஸத்துக்கு எதிரான வாதப்போர் என்ற முறையில் அக்கும்பலின் செயல்கள் பயனுள்ளவை, புரிந்துகொள்ளக்கூடியவை. ஆனால் புரூதோனிடத்து நம்பிக் கையுள்ளவர்கள் என்ற முறையில் (இங்கு எனது மிக நல்ல நண்பர்களாகிய லபார்க், லொங்கே இருவரும்கூட அவர்களைச் சேர்ந்தவர்கள்தான்)—பிரான்சில் அப்பெரிய மனிதர்கள் வறுமையையும் அறியாமையையும். அகற்றும் வரை ஐரோப்பா முழுவதும் வெறுமனே குந்தி உட்கார்ந்து கொண்டிருக்க முடியும், உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று இவர்கள் கருதுகிறபொழுது — இவர்கள் விசித்திரமானவர்கள் தான்.''(1866 ஜூன் 7ந் தேதி கடிதம்.)

1866, ஜூன் 20ந் தேதி மார்க்ஸ் எழுதினார்: ''தற் பொழுது நடக்கும் போரைப் பற்றி நேற்று இண்டர்நேஷன லின் கவுன்சிலில் ஒரு விவாதம் நடந்தது... எதிர்பார்க்கப் பட்டதைப் போல, பொதுவாகச் 'சிறு தேசீய இனப் பிரச் சினை' பற்றியும், அது பற்றி நாம் என்ன போக்கை மேற் கொள்கிறோம் என்பது பற்றியுமான விவாதத்துடன் அது முடிவடைந்தது.... எல்லாச் சிறு தேசீய இனங்களும், தேசீய இனங்களும் கூட, 'வழக்கொழிந்த தப்பெண்ணங்களே' என்ற ஒரு கூற்றை 'இளம்பிரான்சு' என்ற இயக்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் (தொழிலாளர் அல்லாதவர்) கூறினார் கள். இது புரூதோன் வாதப்படி அமைக்கப்பட்ட ஸ்டிர்ன ரிஸம்.... ஒரு சமுதாயப் புரட்சிக்கு ஏற்றதாக பிரான்சு பழுத்துக்கனியும் வரை அகில உலகும் காத்துக்கொண்டிருக் கிறது.... சிறு தேசீய இனங்களை ஒழித்து விட்ட நமது நண்பர் லபார்கும் மற்றவர்களும், 'பிரெஞ்சில்'—அதாவது கூட்டத் தினரில் பத்தில் ஒன்பது பேருக்குப் புரியாத மொழியில்— பேசினார்கள் என்று நான் எனது பேச்சைத் தொடங்கியதும் ஆங்கிலேயர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். சிறு தேசீய

இனங்களை மறுப்பதன்மூலம் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் பிரெஞ்சு தேசிய இனத்திஞல் அவை விழுங்கி ஜீர்ணிக்கப்பட்டு விட்டதாகத் தம் வசமின்றியே அவர் அறிந்து கொண்டிருப்பதைப் போல் தோன்றுகிறது என்றும் நான் கூறினேன்''.

மார்க்ஸின் இந்த விமர்சனக் குறிப்புரைகளிலிருந்து தோன்றும் முடிவு தெளிவானது. தேசியப் பிரச்சினையை வெற்று வழிபாட்டுப் பொருள் ஆக்குவது தொழிலாளி வர்க்கத்திற்கு மிக மிக அரிதாகவே இயலும்; ஏனென்ருல், முதலாளித்துவத்தின் வளர்ச்சி எல்லாத் தேசிய இனங்களையும் ஒரு சுயேச்சையான வாழ்வை நடத்தும்படி கட்டாயமாகத் தட்டி எழுப்பி விடுவதில்லை. ஆனால் பொதுஜனத் தேசிய இயக்கங்கள் தொடங்கிய பிறகு அவைகளை ஒதுக்கித் தள்ளுவதும், அவைகளில் முற்போக்கானவைகளை ஆதரிக்க மறுப்பதும் தேசியவாதத் தப்பெண்ணங்களுக்கு உண்மையில் ஊக்கமளிப்பதாகும்; அதாவது ''தனது'' தேசிய இனம் தான் ''சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் தேசிய இனம்'' என்று (அல்லது தனது தேசிய இனத்துக்கு மட்டும் தான் அரசு ஒன்றை அமைத்துக்கொள்ளும் விசேஷ உரிமை உண்டு என்று) கொள்வதாகும்.*

அது இருக்கட்டும். நாம் அயர்லாந்துப் பிரச்சினைக்குத் திரும்புவோம்.

மார்க்ஸின் கடிதங்களிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க் கண்ட பகுதிகள் இப்பிரச்சினைபற்றி அவரது நிலைமையை மிகமிகத் தெளிவாகக் கூறுகின்றன:

''பெனியனீஸத்துக்கு[30] ஆதரவாக ஆங்கிலேயத் தொழிலாளர்களின் இந்த ஊர்வலத்தை நடத்த என்னுலான யாவற்றையும் நான் செய்தேன்.... இங்கிலாந்திலிருந்து

---

* 1867, ஜூன் 3ல் மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தையும் பார்க்க: ''...பாரிஸ்வாசிகள் ருஷ்யாவுக் கெதிராகப் போலந்துக்காதரவாகப் பேசியிருப்பதைப் பற்றி *The Times* பத்திரிகையில் வெளியாகியிருக்கும் பாரிஸ் கடிதங்களிலிருந்து மிக மகிழ்ச்சியுடன் நான் அறிந்து கொண்டேன்.... திரு. புரூதோனும் அவரது சிறிய வறட்டுக் கோட்பாட்டுக் கும்பலும் மட்டும் பிரெஞ்சு மக்களில்லை....''

அயர்லாந்து பிரிவது என்பது சாத்தியமேயில்லை என்று நான் முன்பு நினைத்துக் கொண்டிருந்தேன். அது பிரிவது தவிர்க்க முடியாதது என இப்பொழுது நினைக்கிறேன், ஆனால் ஒரு வேளை அப்பிரிவுக்குப் பிறகு ஒரு கூட்டாட்சி அமைந்தாலும் அமையலாம்''. இது 1867, நவம்பர் 2ந் தேதி மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதியது.

அதே ஆண்டு நவம்பர் 30ந் தேதிய தமது கடிதத்தில் அவர் மேலும் எழுதினர்: ''...ஆங்கிலேயத் தொழிலாளர் கட்கு நாம் என்ன அறிவுரை கூறுவது? என் கருத்துப்படி, அவர்கள் ஐக்கியத்தை *Repeal* (ரத்து செய்துவிட) வேண்டும் என்பதே'' [அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்குமிடையில், அதாவது அயர்லாந்து பிரிந்து போக வேண்டும் என்பதை], ''சுருக்கமாகச் சொல்லப்போனல் 1783ம் ஆண்டின் நிகழ்ச்சியை இன்றைய காலநிலைமைக்கு மிகவும் பொருந்திய ஜனநாயக ரீதியாக்கி, அவர்கள் தங்களது கொள்கை அறிக்கையில் ஒரு முக்கிய அம்சமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு ஆங்கிலேயக் கட்சியின் செயல்திட்டத்தில் அனுமதிக்கக் கூடியவாறு அமைந்த, ஐரிஷ் விடுதலையின் சட்டப்படியான, சாத்தியபூர்வமான வடிவம் இது ஒன்றுதான். இவ்விரண்டு நாடுகளுக்கிடையிலும் ஒரு வெறும் தனிப்பட்ட ஐக்கியம் நீடித்து நிற்க முடியுமா என்பதை அனுபவம்தான் பின்னர் காட்டவேண்டும்....

''...ஐரிஷ் மக்களுக்கு வேண்டியதாவது:

''1) சுயாட்சியும் இங்கிலாந்தின் பிடிப்பிலிருந்து விடுதலையும்;

''2) ஒரு விவசாயப் புரட்சி....''

ஐரிஷ் பிரச்சினைக்கு மார்க்ஸ் பெரு முக்கியத்துவம் அளித்து, இப்பொருள்பற்றி ஜெர்மன் தொழிலாளர்கள் சங்கத்தில் ஒன்றரை மணிநேர விரிவுரைகளை ஆற்றினர் (1867, டிசம்பர் 17ந் தேதிய கடிதம்).

1868, நவம்பர் 20ந் தேதியிட்ட ஒரு கடிதத்தில் ''ஐரிஷ் மக்கள்பால் ஆங்கிலேயத் தொழிலாளர்களிடையில் காணப்படும் வெறுப்பைப்'' பற்றி எங்கெல்ஸ் எழுதினர்; கிட்டத்தட்ட ஓராண்டுக்குப் பிறகு (1869, அக்டோபர் 24ல்) இதே பொருளைப்பற்றி மீண்டும் எழுதினர்:

''அயர்லாந்திலிருந்து ருஷ்யா வரை il n'y a qu'un pas (ஒரே ஒரு காலடிதான்).... ஒரு தேசீய இனத்தை அடிமைப் படுத்துவது இன்னொரு தேசீய இனத்துக்கு எவ்வளவு துர்ப் பாக்கியம் என்பதை ஐரிஷ் வரலாறு காட்டுகிறது. ஆங்கி லேயர்களிடத்தில் காணப்படும் அருவருக்கத்தக்க யாவற்றிற் கும் தோற்றுவாய் அயர்லாந்துதான். கிராம்வெலின் காலத் திய வரலாற்றை நான் இன்னும் நன்ருகக் கற்றுப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆயினும் இதுமட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது: அயர்லாந்தில் ராணுவ ஆட்சி யின் தேவையும், அங்கு ஒரு புதிய உயர்குடி ஏற்படுத்தப்பட் டதும் நிகழாமலிருந்திருப்பின் இங்கிலாந்தில்கூடச் சம்பவங் கள் வேறு திசையில் சென்றிருக்கும்.''

1869, ஆகஸ்டு 18ல் மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தையும் இங்கு சற்றுப் பார்ப்போம்:

''போஸ்நனிலுள்ள போலிஷ் தொழிலாளர்கள் தங்களது வேலைநிறுத்தத்தை, பெர்லினிலுள்ள தங்கள் சகதொழி லாளர்களுடைய உதவியுடன் ஒரு வெற்றிகரமான முடி வுக்குக் கொண்டு வந்துள்ளனர்.''திருவாளர் மூலதனத்துக்கு'' எதிரான இப்போராட்டமானது—வேலை நிறுத்தம் என்ற ஒரு ஆரம்ப வடிவத்திலும் கூட—தேசீயத் தப்பெண்ணங் களை ஒழித்துக் கட்டுவதற்கான முக்கியமான ஒரு உருப்படி யான வழியாகும்; பூர்ஷ்வாக் கனவான்களின் வாயிலிருந்து உதிரும் அமைதிப் பிரசங்கங்களையும்விட இது உருப்படி யானது.''

ஐரிஷ் பிரச்சினைபற்றி இண்டர்நேஷனலில் மார்க்ஸ் கடைப்பிடித்த கொள்கையைக் கீழ்வருவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:

ஐரிஷ் அரசியல் குற்றமன்னிப்பு அளிப்பது குறித்து பிரிட்டிஷ் மந்திரி சபையின் கொள்கைபற்றி இண்டர்நேஷன லின் கவுன்சிலில் தாம் ஒன்றேகால் மணிநேரம் பேசிய தாகவும், கீழ்வரும் தீர்மானத்தைப் பிரேரேபித்தாகவும் 1869, நவம்பர் 18ந் தேதி மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழு தினர்:

''சிறையிடப்பட்டுள்ள ஐரிஷ் தேசபக்தர்களை விடுதலை செய்ய வேண்டுமென்ற ஐரிஷ் மக்களின் கோரிக்கைகளுக்குத்

தான் அளித்த பதிலில் திரு. கிளாட்ஸ்டன் ஐரிஷ் சிறு தேசீய இனத்தை வேண்டுமென்றே அவமதிப்பு செய்கிருர் என்றும்;

''அவர் அரசியல் குற்றமன்னிப்பை கொடிய அரசாங்கத்தின் கொடுமைக்கு ஆளானவர்களேயும் அவர்கள் எந்த நாட்டு மக்களேச் சேர்ந்தவர்களோ அம்மக்களேயும் இழிவு செய்யும் நிபந்தனேகளுடன் இணைக்கிருர் என்றும்;

''அடிமைகளேப் பிடித்துவைத்துள்ள அமெரிக்கர்களது கலகத்தைத் தமது பொறுப்புள்ள பதவியையும் கருத்தில் கொண்டு பகிரங்கமாகவும் உற்சாகமாகவும் கைதட்டி ஆமோதித்துவிட்டு, எதிர்ப்பின்றிக் கீழ்படிந்து நடப்பதைப் பற்றி ஐரிஷ் மக்களுக்கு உபதேசிக்க அவர் இப்பொழுது கிளம்பிவிட்டார் என்றும்;

''எந்த 'ஆக்கிரமிப்புக் கொள்கைப்' போக்கைத் தீவிரமாகக் கண்டித்துத் திரு. கிளாட்ஸ்டன் டோரி எதிரிகளேப் பதவியிலிருந்து அகற்றிஞரோ அதே 'ஆக்கிரமிப்புக் கொள்கைப்' போக்கின் உண்மையான பிரதிபிம்பம்தான், ஐரிஷ் அரசியல் குற்றமன்னிப்புப் பிரச்சினே சம்பந்தமான அவரது நடவடிக்கைகள் முழுவதும் என்றும்;

''சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கவுன்சிலானது, குற்றமன்னிப்பு இயக்கத்தை ஐரிஷ் மக்கள் நடத்திச் செல்லும் உத்வேகமான, உறுதியான, உயர்ந்த மனப்பான்மையுடன் கூடிய முறையைப் பற்றித் தனது பாராட்டுதலேத் தெரிவிக்கிறது என்றும்;

''இந்தத் தீர்மானமானது சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் எல்லாத் தொழிலாளர் ஸ்தாபனங்களுக்கும் ஐரோப்பிய, அமெரிக்கக் கிளேகள் எல்லாவற்றுக்கும் அறிவிக்கப்பட வேண்டும்'' என்றும் தீர்மானிக்கப்படுகிறது.''

இண்டர்நேஷனலின் கவுன்சிலில் வாசிக்கப்போகும், ஐரிஷ் பிரச்சினே பற்றிய தமது கட்டுரை கீழ்வருமாறு இருக்கும் என்று 1869 டிசம்பர் 10ல் மார்க்ஸ் எழுதிஞர்:

''...'அயர்லாந்துக்கு நீதி காட்டுவது' பற்றிய 'சர்வதேச ரீதியிலான', 'மனிதாபிமான' வாய்சொற்களிலிருந்து முற்றிலும் வேருக—இவை எப்போதுமே இருப்பவைதான் என்பது இண்டர்நேஷனலின் கவுன்சிலுக்குத் தெரியும்

—ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கத்தின் நேரடியான, நிச்சயமான நலன்களுக்கேற்றது அயர்லாந்துடனுன தனது இன்றையத் தொடர்பை அது அறுத்துக் கொள்வதுதான். இது என்னுடைய சந்தேகமில்லாத முழு நம்பிக்கை. அதற்குக் காரணங்கள் உண்டு; ஆனுல் அவைகளில் சிலவற்றை நான் ஆங்கிலேயத் தொழிலாளர்களுக்குக்கூடச் சொல்ல முடியாது. ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் கைஓங்கி வந்தால் ஐரிஷ் ஆட்சியை ஒழித்துக் கட்டுவது சாத்தியம் என்று நீண்ட காலம் நான் நம்பிவந்தேன். இக்கருத்தை எப்பொழுதும் நான் 'நியூயார்க் டிரிபியூனில்' [இது ஒரு அமெரிக்கப் பத்திரிகை. மார்க்ஸ் இதில் நீண்ட காலம் எழுதிவந்தார்][31] வெளியிட்டு வந்தேன். உண்மை இதற்கு நேர் எதிரானது என்று ஆழ்ந்த ஆராய்ச்சி இப்பொழுது என்னைத் திடமாக நம்பச் செய்துவிட்டது. அயர்லாந்தை விட்டுத் தொலைக்கும் வரை ஆங்கிலேயத் தொழிலாளர் வர்க்கம் **எதையும்** சாதிக்க **முடியாது**.... இங்கிலாந்தில் ஆங்கிலேயப் பிற்போக்குவாதத்துக்கு மூலகாரணம் அயர்லாந்தை அடிமைப்படுத்தியதுதான்.'' (அழுத்தக்குறிகள் மார்க்ஸினுடையவை.)

ஐரிஷ் பிரச்சினைபற்றி மார்க்ஸின் கொள்கை இப்பொழுது நம் வாசகர்களுக்குத் தெளிவாக விளங்கும்.

''கற்பனைவாதி'' மார்க்ஸ் அயர்லாந்து பிரிந்துபோவதை—அரை நூற்றுண்டுக்குப் பிறகுகூட இன்னும் ஏற்படாததை—ஆதரிக்கும் அளவுக்குக்''காரியவாதமற்றவராக'' இருந்தார்.

மார்க்ஸின் கொள்கைக்குக் காரணம் என்ன? அது தவறுனது அல்லவா?

ஒடுக்கப்படும் தேசீய இனத்தின் தேசீய இயக்கத்திஞல் அல்ல, ஒடுக்கும் தேசீய இனத்தின் தொழிலாளி வர்க்க இயக்கத்திஞல்தான் அயர்லாந்து விடுதலையடையும் என்றும் மார்க்ஸ் முதலில் நினைத்தார். தேசீய இயக்கங்களைச் சார்பற்ற முழுமையாக மார்க்ஸ் கருதவில்லை; ஏனென்ருல் தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றிதான் எல்லாச் சிறு தேசீய இனங்களுக்கும் பூரண விடுதலையைத் தரும் என்பது அவருக்கு நன்கு தெரியும். ஒடுக்கப்படும் தேசீய இனங்களின் பூர்ஷ்வா விடுதலை இயக்கங்களுக்கும் ஒடுக்கும் தேசீய இனத்தின் பாட்

டாளி வர்க்க விடுதலை இயக்கத்துக்கும் இடையில் என்னென்ன விதமான உறவுகள் சாத்தியம் என்பதை முன்கூட்டியே மதிப்பிட முடியாது (இந்தப் பிரச்சினைதான் இன்று ருஷ்யாவில் தேசியப் பிரச்சினையைக் கடினமானதாக்குகிறது).

ஆனாலும், ஆங்கிலேயத் தொழிலாளர் வர்க்கமானது கணிசமான காலம் மிதவாதிகளுடைய செல்வாக்கின் கீழிருந்தது. மிதவாதிகளுக்கு வால் பிடித்து, மிதவாதத் தொழிலாளர் கொள்கையைக் கடைப்பிடித்ததன் மூலம் அது தலைமையற்று நின்றுவிட்டது. அயர்லாந்தின் பூர்ஷ்வா விடுதலை இயக்கமானது வலுப்பெற்று, புரட்சிகர வடிவங்களை எடுத்தது. மார்க்ஸ் தமது கருத்துகளை மறுபரிசீலனை செய்து, திருத்தினார். ''ஒரு தேசீய இனத்தை அடிமைப்படுத்துவது இன்னொரு தேசீய இனத்துக்கு எவ்வளவு துர்ப்பாக்கியம்''. அயர்லாந்து இங்கிலாந்தின் தளையிலிருந்து விடுபடும் வரை ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் சுதந்திரம் பெற்றிருக்க முடியாது. அயர்லாந்தை இங்கிலாந்து அடிமைப்படுத்தியதால் இங்கிலாந்தில் பிற்போக்கு வலுப்பெற்று, ஊட்டம் பெற்றுவிட்டது (பல தேசீய இனங்களை ருஷ்யா அடிமைப்படுத்தியதால் அங்கு எவ்வாறு பிற்போக்கு ஊட்டம் பெற்றிருக்கிறதோ, அதே போல்தான்!).

''ஐரிஷ் தேசீய இனத்துக்கு'', ''ஐரிஷ் மக்களுக்கு'' அனுதாபத்தைத் தெரிவிக்கும் ஒரு தீர்மானத்தை இண்டர்நேஷனலில் பிரேரணை செய்ததன்மூலம் (வர்க்கப் போராட்டத்தை மறந்துவிட்டதற்காக, புத்திசாலி ல. விளா. அவர்கள் பாவம் மார்க்ஸைக் கண்டித்திருப்பார்!), இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து பிரிவதை ''ஆனால் ஒரு வேளை அப்பிரிவுக்குப் பிறகு ஒரு கூட்டாட்சி அமைந்தாலும் அமையலாம்'' என்றாலும், மார்க்ஸ் ஆதரித்தார்.

மார்க்ஸின் முடிவுக்குச் சித்தாந்த ஆதாரங்கள் யாவை? நீண்ட காலத்துக்கு முன்பே இங்கிலாந்தில் பூர்ஷ்வாப் புரட்சி நிறைவு பெற்று விட்டது. ஆனால் அயர்லாந்தில் அது இன்னும் நிறைவு பெறவில்லை; இப்பொழுதுதான், அரை நூற்றாண்டுகாலம் கழிந்தபிறகு, ஆங்கிலேய மிதவாதிகளின் சீர்திருத்தங்கள் காரணமாக, அது நிறைவுபெற்று வருகிறது. மார்க்ஸ் முதலில் எதிர்பார்த்ததைப்போல் மிகத் துரித

மாக இங்கிலாந்தில் முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டு விட்டிருந்தால், அயர்லாந்தில் பூர்ஷ்வா-ஜனநாயக, பொதுவான தேசிய இயக்கம் ஒன்றுக்கு இடமே இருந்திருக்காது. ஆனுல் அது தோன்றிவிட்டதால் அதை ஆதரிக்குமாறும், அதற்கு ஒரு புரட்சிகர உந்தலைக் கொடுக்குமாறும், தங்களது சொந்த விடுதலையை உத்தேசித்து அதற்கு வெற்றி கிட்டுவதற்கு வழிசெய்யுமாறும் ஆங்கிலேயத் தொழிலாளர்களுக்கு மார்க்ஸ் அறிவுறுத்திஞர்.

1860க்களில் அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான பொருளாதார உறவுகள், இன்று ருஷ்யாவுக்கும் போலந்து, உக்ரேய்ஞ முதலியவற்றுக்கும் இடையிலான உறவுகளைக் காட்டிலும்கூட நெருக்கமானவையாக இருந்தன. அயர்லாந்து பிரிதலின் ''காரியவாதமற்ற தன்மையும்'' ''நடைமுறைச் சாத்தியமற்ற தன்மையும்'' (பூகோள நிலைமைகளாலும் இங்கிலாந்தின் மாபெரும் காலனி ஆதிக்கத்திஞலும் மட்டுமே அவ்வாருகலாம்) நன்கு தெளிவாக விளங்கின. கோட்பாட்டின் அடிப்படையில் கூட்டாட்சி அமைப்புமுறையை மார்க்ஸ் எதிர்த்தாலும்கூட, இந்த ஒரு விஷயத்தில்—இங்கிலாந்தின் தொழிலாளர் வர்க்கத்தால் ஆதரிக்கப்பட்டு அயர்லாந்து மக்களின் ஒரு வெகுஜன இயக்கத்திஞல் ஒரு புரட்சிகரமான முறையிஞல், சீர்திருத்தமுறையிஞல் அல்ல, அயர்லாந்து விடுதலையடையுமேயாஞல்—கூட்டாட்சியும் சாத்தியமாகலாம் என்று கூறிஞர்.* இந்த வரலாற்றுப்

---

*சோஷல்-டெமாகிரடிக் நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் தேசீய இனங்களின் ''சுயநிர்ணய'' உரிமை என்பதன் பொருள் கூட்டாட்சியோ அல்லது சுயநிர்வாகமோ அல்ல (அருவவாதப்படி இவை இரண்டுமே ''சுயநிர்ணயம்'' என்ற வகைக்குள்ளடங்கும் என்ருலும்) என்பதைப் புரிந்துகொள்வது கடினமில்லை. கூட்டாட்சி உரிமையில் அர்த்தமேயில்லை; ஏனென்ருல் கூட்டாட்சி இரு தரப்பு ஒப்பந்தத்தை உள்ளிட்டது. பொதுப்படையாகக் கூட்டாட்சியை ஆதரிப்பதை மார்க்ஸீயவாதிகள் தங்களது செயல்திட்டத்தில் சேர்த்துக்கொள்ள முடியாது என்பது சொல்லாமல் விளங்கும். சுயநிர்வாகத்தைப் பற்றிய விஷயத்தில் மார்க்ஸீயவாதிகள் சுயநிர்வாக ''உரிமையை'' ஆதரிக்கவில்லை; சுயநிர்வாகத்தைத் தான் ஆதரிக்கிருர்கள்; பல தேசீய மக்களைக் கொண்ட,

பிரச்சினையை இத்தகையதொரு முறையில் தீர்ப்பதுதான் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு மிகவும் ஏற்றதாகவும், துரிதமான சமூக முன்னேற்றத்துக்கு மிகவும் உகந்ததாகவும் இருந்திருக்கும் என்பதில் சந்தேகமே இருக்க முடியாது.

சம்பவங்கள் வேறு விதமாக நிகழ்ந்து விட்டன. ஐரிஷ் மக்கள் ஆங்கிலேயப் பாட்டாளி வர்க்கம் இருசாராருமே பலவீனர்களாக இருந்துவிட்டனர். இப்பொழுதுதான், இங்கிலீஷ் மிதவாதிகளுக்கும் ஐரிஷ் பூர்ஷ்வாக்களுக்குமிடையிலான நீசத்தனமான ஒப்பந்தங்கள் காரணமாக நிலச்சீர்திருத்தம் (நஷ்ட ஈட்டுடன் கூடியது), சுய ஆட்சி (இது இன்னும் அமுலாக்கப்படவில்லை) மூலமாக ஐரிஷ் பிரச்சினை தீர்க்கப்பட்டு வருகிறது (எவ்வளவு கடினத்துடன் என்பதற்கு அல்ஸ்டர் ஒரு எடுத்துக்காட்டு). சரி என்ன? இதினின்று மார்க்ஸும் எங்கெல்ஸும் ''கற்பனைவாதிகள்'' என்பதும், அவர்கள் ''நடைமுறைச் சாத்தியமற்ற'' தேசியக் கோரிக்கைகளை முன்வைத்தார்கள் என்பதும், ஐரிஷ் குட்டி பூர்ஷ்வா தேசியவாதிகளின் கருத்துக்களினால் அவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதும்(''பெனிய'' இயக்கம் குட்டி பூர்ஷ்வாத் தன்மையுடையதுதான் என்பதில் சந்தேகமில்லை) ஏற்படுகிறதா?

இல்லை, ஐரிஷ் பிரச்சினையிலும்கூட மார்க்ஸும் எங்கெல்ஸும் முரண்பாடற்ற ஒரு பாட்டாளி வர்க்கக் கொள்கைப் போக்கை கடைப்பிடித்தனர். அக்கொள்கைப் போக்கு ஜனநாயகம், சோஷலிஸம் என்கிற உணர்வைப் பொது மக்களுக்கு ஊட்டியது. அத்தகையதொரு கொள்கைதான் தேவையான சீர்திருத்தங்கள் அயர்லாந்திலும் இங்கிலாந்திலும் புகுத்தப்படுவதில் அரை நூற்றாண்டு காலத் தாமதத்தைத் தடுத்திருக்க முடியும்; பிற்போக்குவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக வேண்டி இச்சீர்திருத்தங்கள் மிதவாதி

---

பல்வேறு பூகோள, இன்னும் இதர நிலைமைகளைக் கொண்ட ஒரு ஜனநாயக அரசின் பொதுக் கோட்பாடு என்ற முறையில் சுயநிர்வாகத்தை ஆதரிக்கிறார்கள். எனவே, ''தேசிய இனங்கள் கூட்டாட்சி அமைத்துக்கொள்ளும் உரிமை'' என்பது எவ்வளவு அபத்தமானதோ அவ்வளவு அபத்தமானது''தேசிய இனங்களின் சுயநிர்வாக உரிமையை'' அங்கீகரிப்பதும்.

களால் உருக்குலைக்கப்படாமல் தடுத்திருக்க முடியும்.

தேசீய இயக்கங்கள் விஷயத்தில் ஒடுக்கும் தேசீய இனத்தின் பாட்டாளி வர்க்கம் பின்பற்ற வேண்டிய கொள்கைக்கு மார்க்ஸும் எங்கெல்ஸும் ஐரிஷ் பிரச்சினையில் கடைப்பிடித்த கொள்கை ஒரு சிறந்த உதாரணமாகும்; அவ்வுதாரணமானது தனது மாபெரும் செயல்முறை முக்கியத்துவத்தில் இம்மியும் இன்று இழந்து விடவில்லை. ஒரு தேசீய இனத்தைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள், பூர்ஷ்வாக்களின் வன்முறையினாலும் விசேஷ உரிமைகளினாலும் வகுக்கப்பட்ட அரசுகளின் எல்லைகளை மாற்றும் கருத்தானது "கற்பனை ரீதியானது" என்று எல்லா நாடுகளையும் நிறங்களையும் மொழிகளையும் சேர்ந்த பிலிஸ்டைன்களும் "அடிமைக்குரிய அவசரத்துடன்" விரைகிறார்களே, அதைப்பற்றி எச்சரிக்கையாக அது பணியாற்றுகிறது.

ஐரிஷ், ஆங்கிலேயப் பாட்டாளிகள் மார்க்ஸின் கொள்கையை ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருந்தால், அயர்லாந்து பிரிய வேண்டும் என்பதைத் தங்களது கோஷமாக ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால் அது படுமோசமான சந்தர்ப்பவாதமாக இருந்திருக்கும்; ஜனநாயகவாதிகள், சோஷலிஸ்டுகள் என்ற முறையிலான தங்களது கடமைகளைக் கைவிட்டதாக இருந்திருக்கும்; ஆங்கிலேயப் பிற்போக்குக்கும் ஆங்கிலேயப் பூர்ஷ்வாக்களுக்கும் விட்டுக்கொடுத்ததாக இருந்திருக்கும்.

## 9. 1903ம் ஆண்டுச் செயல்திட்டமும் அதன் கலைப்புவாதிகளும்

ருஷ்ய மார்க்ஸீயவாதிகளின்[32] செயல் திட்டத்தை ஏற்றுக்கொண்ட 1903ம் ஆண்டு காங்கிரசின் நிகழ்ச்சிப் பதிவேடு கிடைக்காத ஒரு பொருளாகிவிட்டது. எனவே, அதன் பல்வேறு அம்சங்களும் எந்த உள்நோக்கங்களுடன் இயற்றப்பட்டன என்பதைப் பற்றி இன்றையத் தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் சுறுசுறுப்பான ஊழியர்களில் மிகப் பெரும்பான்மையினருக்கு ஒன்றுமே தெரியாது (அது பற்றிய பிரசுரங்

களில் அரிதாகச் சிலவே சட்டபூர்வம் என்ற கருணைகடாட்சத்தைப் பெற்றிருப்பதனால் இச்சிரமம் மேலும் அதிகமாகிறது...). ஆகவே, எடுத்துக்கொண்ட இப்பிரச்சினைபற்றி 1903 காங்கிரசில் நடந்த விவாதத்தை நன்கு ஆராய்வது அவசியமாகிறது.

''தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமை'' பற்றி ருஷ்ய சோஷல்-டெமாகிராட்டுப் பிரசுரங்கள் எவ்வளவுதான் குறைவாக இருப்பினும், இந்த உரிமை பிரிந்துபோகும் உரிமை என்றுதான் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அப்பிரசுரங்கள் தெளிவாகக் காண்பிக்கின்றன—இதை நாம் முதலில் கூறிவிட வேண்டும். ஸெம்கோவ்ஸ்க்கிய்களும் லீப்மன்களும் யுர்க்கேவிச்சுகளும் இதைச் சந்தேகிக்கின்றனர்; 9வது பாரா ''தெளிவில்லாமல்'' இருக்கிறது என்று எல்லாம் கூறுகிறார்கள். அவ்வாறு கூறுவது அவர்களது அறியாமையினாலும் கவனக்குறைவினாலும்தான். 1902லேயே பிளெஹானவ்* செயல்திட்ட வாசகத்தில் ''சுயநிர்ணய உரிமையை'' ஆதரித்து ''ஸார்யாவில்'' எழுதினார்; இக்கோரிக்கையானது பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளுக்குக் கட்டாயமானதல்லவென்றாலும்''சோஷல்-டெமாகிராட்டுகளுக்குக் கட்டாயமானது'' என்றார் அவர். ''நமது சொந்த பெரிய-ருஷ்ய தேசீய இனத்தைச் சேர்ந்த நமது சகதேசத்தவர்களின் தேசீயத் தப்பெண்ணங்களை எங்கே புண்படுத்தி விடுவோமோ என்ற பயத்தினால் இவ்வுரிமையை நாம் மறந்து விட்டாலோ அல்லது தயங்கினாலோ, 'உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!' என்ற அறைகூவல்... நமது வாயிலிருந்து வரும் வெட்கக்கேடான பொய்யுரையாகப் போய்விடும்....''[33] என்று எழுதினார் அவர்.

---

* 1916ம் ஆண்டு, வி. இ. லெனின் இந்த இடத்திற்குப் பின்வரும் குறிப்பு எழுதியிருந்தார்: ''ஒரு விஷயத்தை மறந்து விடாதிருக்கும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம். அதாவது, 1903ம் ஆண்டில் பிளெஹானவ் சந்தர்ப்பவாதத்தின் பிரதான எதிரிகளில் ஒருவராக இருந்தார்; சந்தர்ப்பவாதத்தையும் பிறகு ஷோவினிஸத்தையும் நோக்கிய தமது அவப்புகழ் பெற்ற திருப்பத்திலிருந்து அப்போது அவர் வெகு தொலைவில் இருந்தார்.''

எடுத்துக்கொண்ட விஷயத்திற்குச் சாதகமான அடிப்படை வாதத்தைப் பற்றிய மிகவும் சரியான வர்ணனை இது தான்; இது மிகவும் சரியாக இருக்கிற காரணத்தினால் நமது செயல்திட்டத்தின் ''கொள்கைப் பிடிப்பற்ற'' விமர்சகர்கள் இந்த விஷயத்தின் அருகில் வருவதற்கே அஞ்சினார்கள், அஞ்சுகிறார்கள் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்த விஷயத்தை எக்காரணத்தை முன்னிட்டும் புறக்கணித்து விடுவது உண்மையில் பெரிய-ருஷ்ய தேசீயவாதத்துக்கு அளிக்கும் ''வெட்கப்பட வேண்டிய'' சலுகையாகும். எல்லாத் தேசீய இனங்களினதும் சுயநிர்ணய உரிமையைப் பற்றிய பிரச்சினையாக இருக்கும்பொழுது, ஏன் பெரிய-ருஷ்ய தேசீய வாதத்தைப்பற்றி மட்டும் குறிப்பிட வேண்டும்? ஏனென்றால் அது பெரிய - ருஷ்யர்கள் இடமிருந்து பிரிவதைக் குறிக்கிறது. பாட்டாளிகளின் ஐக்கியம் பற்றிய நலன்களும், அவர்களது வர்க்க ஒருமைப்பாட்டின் நலன்களும் தேசீய இனங்களின் பிரியும் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று கோருகின்றன—மேற்கூறிய வார்த்தைகளில் பிளெஹானவ் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு ஒப்புக்கொண்டது இதுதான். நமது சந்தர்ப்பவாதிகள் இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்திருப்பார்களேயானால் சுயநிர்ணயம் பற்றி இவ்வளவு மடத்தனமாகப் பேசியிருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

பிளெஹானவினால் எடுத்து மொழியப்பட்ட செயல்திட்ட மசோதாவை ஏற்றுக்கொண்ட 1903 காங்கிரசின் பிரதான வேலை செயல்திட்டக் கமிஷனால் செய்யப்பட்டது. துரதிருஷ்டவசமாக நடவடிக்கைகள் பற்றிய நிகழ்ச்சிப் பதிவேடு வைத்துக்கொள்ளப்படவில்லை. அது இருந்திருந்தால் இக்குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றியது மிகவும் சுவாரசியமாயிருந்திருக்கும்; ஏனென்றால் கமிஷனில்தான் போலிஷ் சோஷல்-டெமாகிராட்டுகளின் பிரதிநிதிகளான வார்ஷாவ்ஸ்க்கியும் ஹனேஸ்கியும் தங்களது கருத்தை ஆதரித்துப் பேசவும், ''சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதை'' ஆட்சேபித்து வாதாடவும் முயன்றார்கள். அவர்களது வாதங்களையும் (இவைகளை வார்ஷாவ்ஸ்க்கியின் உரையிலும்அவரும் ஹனேஸ்கியும் சேர்ந்து தந்த அறிக்கையிலும் காணலாம்; காங்கிர

சின் நிகழ்ச்சிப் பதிவேடு, பக்கம் 134-36, 388-90) ரோஸா லுக்ஸம்பர்க் தமது போலிஷ் கட்டுரையில் முன்வைத்துள்ள வாதங்களையும், இவைகளை நாம் ஏற்கெனவே ஆராய்ந்து விட்டோம், ஒப்பிட்டுப்பார்க்கும் எந்த வாசகரும் அவை முற்றிலும் ஒரே மாதிரியானவை என்பதைக் காண்பார்.

இரண்டாவது காங்கிரசின் செயல்திட்டக் கமிஷனில்—இக்காங்கிரசில்தான் மற்ற எவரைக் காட்டிலும் அதிகமாக பிளெஹானவ் போலிஷ் மார்க்ஸீயவாதிகளை எதிர்த்துப் பேசினர்—இவ்வாதங்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டன? அவ்வாதங்கள் சிறிதும் இரக்கமின்றி எள்ளி நகையாடப் பட்டன! ருஷ்ய மார்க்ஸீயவாதிகள் தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரிக்க வேண்டும் என்ற போலிஷ் மார்க்ஸீயவாதிகளின் வேண்டுகோள் அபத்தமானது என் பதைக் காங்கிரசின் முழுக்கூட்டத்தில் இந்த வாதங்களைப் போலிஷ் மார்க்ஸீயவாதிகள் மீண்டும் எடுத்துரைக்கத் துணியாததே அப்பட்டமாக, தெளிவாகப் புலப்படுத்திவிட்டது!! பெரிய-ருஷ்ய, யூத, ஜார்ஜிய, ஆர்மீனிய மார்க்ஸீயவாதிகளின் முதன்மையான சபையில் தங்களது வாதம் எடுபடாது என்பதை நன்கு புரிந்துகொண்டுதான் அவர்கள் காங்கிரசி னின்று போனார்கள்.

இந்த வரலாற்று முக்கியம் வாய்ந்த நிகழ்ச்சி தனது சொந்தச் செயல்திட்டத்தில் பெரும் அக்கறையுடைய ஒவ் வொருவருக்கும் அதிக முக்கியத்துவமுடையது என்பதைச் சொல்லத் தேவையில்லை. காங்கிரசின் செயல்திட்டக் கமிஷனில் போலிஷ் மார்க்ஸீயவாதிகளின் வாதங்கள் அறவே தோற்கடிக்கப்பட்டதும், காங்கிரசின் முழுக் கூட்டத்தில் தங்களது கருத்துக்களை ஆதரித்துப் பேசும் முயற்சியை அவர்கள் கைவிட்டு விட்டதும் மிகவும் குறிப்பிடத்தக்கவை. ரோஸா லுக்ஸம்பர்க் 1908ல் எழுதிய தமது கட்டுரையில் இதைப் பற்றித் 'தன் அடக்கத்துடன்' மௌனம் சாதிக்கிறார் என்பது ஆச்சரியமல்ல—அக்காங்கிரசைப்பற்றி நினைவு கூர்வதே அவருக்கு வருத்தமாயிருக்கிறது போலும்! செயல்திட்டத்தின் 9 வது பாராவைத் ''திருத்த'' வேண்டும் என்று எல்லாப் போலிஷ் மார்க்ஸீயவாதிகளதும் சார்பாக வார்ஷாவ்ஸ்கியும் ஹனேஸ்கியும் 1903ல் கொண்டுவந்த நகைப்பூட்டும்

வகையில் மடத்தனமான பிரேரணையைப் பற்றிக்கூட அவர் ஒன்றும் பேசவில்லை—இப்பிரேரணையை ரோஸா லுக்ஸம் பர்கும் சரி, மற்ற போலிஷ் சோஷல்-டெமாகிராட்டுகளும் சரி, மீண்டும் எடுத்து மொழிய இதுவரை துணிந்ததில்லை (இனியும் துணிய மாட்டார்கள்).

ரோஸா லுக்ஸம்பர்க் 1903ல் ஏற்பட்ட தமது தோல்வியை மறைத்து அந்நிகழ்ச்சிகளைப் பற்றி மௌனம் சாதித்தாலும் தங்களுடைய கட்சியின் வரலாற்றில் அக்கறையுள்ளவர்கள் அவைகளைப்பற்றி ஆராய்ந்து, அவைகளின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொள்வது தங்களது கடமை என்பதை உணர்வார்கள்.

1903 காங்கிரசை விட்டகன்றபொழுது ரோஸா லுக்ஸம்பர்கின் நண்பர்கள் கீழ்வரும் அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள்:

"...திட்டவாசகத்தின் 7 வது பாரா (இப்பொழுது 9 வது பாரா) கீழ்வருமாறு இருக்க வேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம்: 7 வது பாரா. இவ்வரசில் ஒன்றுகச் சேர்க்கப்பட்டுள்ள எல்லாத் தேசிய இனங்களினதும் கலாச்சார வளர்ச்சிக்கு முழுச் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்யும் நிறுவனங்கள்". (நிகழ்ச்சிப் பதிவேடு, பக்கம் 390.)

இவ்வாறு, தேசீயப் பிரச்சினைபற்றி மிகமிகத் தெளிவற்ற கருத்துக்களைப் போலிஷ் மார்க்ஸீயவாதிகள் அப்பொழுது முன்வைத்தார்கள்; உண்மையில் சுயநிர்ணயத்துக்குப் பதிலாகக் கெட்ட பெயரெடுத்த "கலாச்சாரத் தேசீயச் சுயநிர்வாகத்தையே" பிரேரேபித்தார்கள், ஆனல் வேருரு பெயரில்!

இது நம்பத் தகாததுபோல் இருக்கிறது; ஆனல் துரதிருஷ்டவசமாக இது உண்மை. காங்கிரசில் ஐந்து வாக்குகளைக் கொண்ட ஐந்து பூந்த்காரர்களும், ஆறு வாக்குகளைக் கொண்ட மூன்று காக்கஸஸ் பிரதேசத்தவர்களும்—கஸ்த்ரோவின் ஆலோசனை வாக்கை நாம் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை — இருந்தார்கள். ஆனல் ஒரு வாக்குக்கூட சுயநிர்ணயம் பற்றிய பாராவை நிராகரிப்பதற்கு ஆதரவாகக் கிடைக்கவில்லை. இந்தப் பாராவுடன் "கலாச்சாரத்-தேசீய சுயநிர்வாகத்தைச்" சேர்ப்பதை ஆதரித்து மூன்று வாக்கு

கள் கிடைத்தன (''தேசீய இனங்களின் கலாச்சார வளர்ச்சிக்கு முழுச் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்யும் நிறுவனங்களை நிறுவுதல்'' என்ற கோல்ட்பிளாட்டின் சூத்திரத்துக்கு ஆதரவாக); லீபெரின் சூத்திரத்துக்கு ஆதரவாக நான்கு வாக்குகள் கிடைத்தன (''தேசீய இனங்களுக்கு அவற்றின் கலாச்சார வளர்ச்சியில் சுதந்திரமளிக்கும் உரிமை'').

இப்பொழுது ஒரு ருஷ்ய மிதவாதக் கட்சி—கான்ஸ்டிட்யூஷனல்-டெமாகிரடிக் கட்சி—தோன்றிவிட்டபடியால் அதன் செயல்திட்டத்தில் தேசீய இனங்களின் அரசியல் சுயநிர்ணயத்துக்குப் பதிலாகக் ''கலாச்சாரச் சுயநிர்ணயம்'' வைக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். ஆகவே, ரோஸா லுக்ஸம்பர்கின் போலிஷ் நண்பர்கள் போ. சோ. கட்சியின் தேசீயவாதத்தை எதிர்த்துப் **''போராடினர்''**; மார்க்ஸீயச் செயல்திட்டத்துக்குப் பதிலாக ஒரு **மிதவாதச்** செயல்திட்டத்தை வைக்கும் அளவுக்கு வெற்றிகரமாகப் போராடினர்! அதே மூச்சில் நமது செயல்திட்டம் சந்தர்ப்பவாதமானது என்றும் குறைகூறினார்கள்; இக்குற்றச்சாட்டைக் கேட்டு இரண்டாவது காங்கிரசின் செயல்திட்டக் கமிஷன் வாய் விட்டுச் சிரித்தது என்பதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

இரண்டாவது காங்கிரசுக்கு வந்திருந்த பிரதிநிதிகளால்—அவர்களில் ஒருவர்கூட ''தேசீய இனங்களின் சுயநிர்ணயத்தை'' எதிர்க்கவில்லை என்பதை நாம் முன்பே பார்த்தோம்—''சுயநிர்ணயம்'' என்ற சொல்லுக்கு என்ன பொருள் கொள்ளப்பட்டது?

கீழ்வரும் நிகழ்ச்சிப் பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்ட இம்மூன்று பகுதி மேற்கோள்கள் இக்கேள்விக்குப் பதிலளிக்கின்றன:

'' 'சுயநிர்ணயம்' என்ற சொல்லுக்கு ஒரு விரிவான விளக்கத்தை நாம் கொடுக்கக் கூடாது என்பது **மார்த்தினவின்** அபிப்பிராயம்; ஒரு தேசீய இனம் ஒரு தனி அரசியல் சமுதாயமாகத் தன்னை அமைத்துக்கொள்ளும் உரிமைதான் அதன் பொருளேயொழிய, பிராந்தியச் சுயநிர்வாகம் அல்ல'' (பக்கம் 171). ரோஸா லுக்ஸம்பர்கின் நண்பர்களுடைய வாதங்கள் நிராகரிக்கப்பட்டுப் பரிகசிக்கப்பட்ட அதே செயல்

திட்டக் கமிஷனில் மார்த்தினவும் ஒரு உறுப்பினர். அவர் தமது கருத்துகளில் ஒரு பொருளாதாரவாதியாக[34] அப்பொழுது விளங்கி, ''இஸ்க்ராவைக்''[35] கடுமையாக எதிர்த்தவர். செயல்திட்டக் கமிஷனில் பெரும்பான்மையோரால் ஏற்க இயலாத ஒரு அபிப்பிராயத்தை அவர் வெளியிட்டிருந்தால் அது நிச்சயமாக நிராகரிக்கப்பட்டிருக்கும்.

கமிஷன் தனது வேலையை முடித்துவிட்ட பிறகு, செயல் திட்டத்தின் 8 வது (இப்பொழுது 9 வது) பாராவைக் காங்கிரஸ் விவாதித்தபொழுது முதலில் பேசியவர் பூந்த்காரர் கோல்ட்பிளாட்.

அவர் சொன்னார்:

'' 'சுயநிர்ணய உரிமைக்கு' ஆட்சேபம் ஒன்றும் எழுப்ப இயலாது. ஒரு தேசீய இனம் சுதந்திரத்துக்காகப் போராடும் பொழுது அதை எதிர்க்கக் கூடாது. பிளெஹானவ் சொல்வதைப்போல், ருஷ்யாவுடன் சட்டரீதியிலான மணம்செய்து கொள்ளப் போலந்து மறுத்தால் நாம் அதில் போய் குறுக்கிடக்கூடாது. இந்த எல்லைகட்குள் நான் இக்கருத்தை ஆமோதிக்கிறேன்'' (பக்கம் 175-76).

பிளெஹானவ் இப்பொருளைப்பற்றிக் காங்கிரசின் முழுக் கூட்டத்தில் பேசவேயில்லை. ஆனால் செயல்திட்டக் கமிஷனில் பிளெஹானவ் பேசியதைக் குறிப்பிடுகிறார் கோல்ட்பிளாட். ''சுயநிர்ணய உரிமை'' என்பது பிரிந்துபோகும் உரிமை என்று எளிய முறையில், அதே சமயம் விவரமான வகையில் பிளெஹானவ் கமிஷனில் விளக்கியிருந்தார். கோல்ட்பிளாட்டுக்குப் பிறகு பேசிய லீபெர் குறிப்பிட்டார்;

''எந்த ஒரு சிறு தேசீய இனமாவது ருஷ்யாவின் எல்லைக்குள் தான் வாழமுடியாது என்று கண்டுணர்ந்தால், அதன் பாதையில் நமது கட்சி தடையொன்றையும் எழுப்பாது என்பதில் சந்தேகமில்லை'' (பக்கம் 176).

இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டாவது காங்கிரசில் சுயநிர்ணயம் என்பதன் பொருள் பிரிந்துபோகும் உரிமை ''தான்'' என்று ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது என்பதை வாசகர்கள் காண்பார்கள். பூந்த்காரர்கள் கூட இவ்வுண்மையை அப்பொழுது புரிந்துகொண்டார்

கள்; ஆனால் தொடர்ந்து எதிர்ப்புரட்சி நடைபெறுகிற, பலவிதக் ''கொள்கைவிடல்'' நடைபெறுகிற இந்த மோசமான காலத்தில்தான், நமது செயல்திட்டம் ''தெளிவில்லாதது'' என்று அறிவிக்கும் பெயர்வழிகளை நாம் காண்கிறோம். அவர்களது அறியாமை அவர்களுக்கு இந்தத் துணிச்சலைக் கொடுக்கிறது. ஆனால்'' தாமும் சோஷல்-டெமாகிராட்டுகள்'' என்கிற வருந்தத்தக்க இவர்களைப் பற்றிக் கூறுமுன், செயல் திட்டத்தைக் குறித்து போலிஷ்காரர்களின் போக்கை நாம் முடித்துவிடுவோம்.

ஐக்கியம் தேவையானதும் அவசரக் கட்டாயமானதும் ஆகும் என்று முழங்கிக் கொண்டே அவர்கள் இரண்டாவது காங்கிரசுக்கு (1903) வந்தார்கள். ஆனால் செயல்திட்டக் கமிஷனில் ''தோல்வி'' யுற்றதும் காங்கிரசை விட்டு அவர்கள் வெளியேறி விட்டார்கள்; அவர்களது கடைசி வார்த்தை எழுத்துமூலமான ஒரு அறிக்கை. அது காங்கிரசின் நிகழ்ச்சிப் பதிவேட்டில் அச்சிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் கலாச்சார-தேசீய சுயநிர்வாகத்தைச் சுயநிர்ணயத்துக்குப் பதிலாக வைக்கும் மேற்கூறப்பட்ட பிரேரணை இருந்தது.

1906ல் போலிஷ் மார்க்ஸீயவாதிகள் கட்சியில் சேர்ந்தார்கள்; சேர்ந்த போதோ அல்லது பிறகோ (1907காங்கிரசிலும், 1907, 1908 மகாநாடுகளிலும், 1910 காங்கிரஸ் முழுக் கூட்டத்திலும் சரி) ருஷ்யச் செயல் திட்டத்தின் 9வது பாராவைத் திருத்த வேண்டுமென்ற பிரேரணையை ஒருமுறை கூட அவர்கள் முன்வைக்கவில்லை!!

இது உண்மையான விஷயம்.

அவர்கள் என்ன பேசினாலும், என்ன உறுதிகளைக் கூறினாலும் இவ்வுண்மை ஒரு விஷயத்தைத் திட்டவட்டமாக நிரூபிக்கிறது; இரண்டாவது காங்கிரசின் செயல்திட்டக் கமிஷன் விவாதத்தாலும், அக்காங்கிரசின் முடிவுகளாலும் இப்பிரச்சினையானது தீர்க்கப்பட்டு விட்டது என்று ரோஸா லுக்ஸம்பர்கின் நண்பர்கள் கருதினார்கள் என்பதையும், 1903ல் காங்கிரசை விட்டு வெளியேறிய பிறகு கட்சி வழியாகத் திட்டத்தின் 9வது பாராவைத் திருத்தும் பிரச்சினையை எழுப்ப ஒருபொழுதும் முயலாமல் 1906ல் கட்சியில்

சேர்ந்தது மூலம் தங்களது தவற்றை மறைமுகமாக ஒத்துக்கொண்டு, அதைத் திருத்திக் கொண்டார்கள் என் பதையும் அது திட்டவட்டமாக நிரூபிக்கிறது.

ரோஸா லுக்ஸம்பர்கின் கையொப்பமிடப் பெற்ற கட்டுரை 1908ல் வெளியாயிற்று—கட்சிப் பிரசாரகர்கள் செயல்திட்டத்தை விமர்சனம் செய்யும் உரிமையை மறுக்க யாருக்கும் தோன்றவில்லை — ஆனல் அக்கட்டுரை எழுதப் பட்ட பின்னர், 9 வது பாராவைத் திருத்தவேண்டுமென்ற பிரச்சினையைப் போலிஷ் மார்க்ஸீயவாதிகளின் அதிகார பூர்வமான ஸ்தாபனங்களில் ஒன்றுகூடக் கிளப்பியது கிடை யாது.

எனவே, ''போர்பா''[36] பத்திரிகையின் 2வது இதழில் (1914, மார்ச்) அதன் ஆசிரியர்களின் சார்பில் த்ரோத்ஸ்கிய் கீழ்வருமாறு எழுதியது ரோஸா லுக்ஸம்பர்கைப் போற்றும் சிலருக்கு இழைத்த தீங்காகும்:

''...'தேசிய சுயநிர்ணய உரிமையானது' அரசியல் உள்ளடக்கம் சிறிதுமில்லாதது என்றும், அதைச் செயல் திட்டத்திலிருந்து அகற்றிவிட வேண்டுமென்றும் போலிஷ் மார்க்ஸீயவாதிகள் கருதுகிருர்கள்'' (பக்கம் 25).

உதவிப்பணியாற்றும் த்ரோத்ஸ்கிய் விரோதியைவிட வும் ஆபத்தானவர்! பொதுவாகப் ''போலிஷ் மார்க்ஸீயவாதி கள்'' ரோஸா லுக்ஸம்பர்க் எழுதும் ஒவ்வொரு கட்டுரை யையும் ஆதரிப்பவர்கள் என்று வகைப்படுத்துவதற்குத் த்ரோத்ஸ்கிய் தரமுடிகின்ற நிரூபணம் ''தனிப்பட்ட பேச்சு வார்த்தைதான்'' (அதாவது, வெறும் வம்புப் பேச்சு தான் —இதைக் கொண்டுதானே த்ரோத்ஸ்கிய் எப்பொழுதும் உயிர்வாழ்கிருர்), வேறென்றுமில்லை. ''போலிஷ் மார்க்ஸீய வாதிகள்'' கௌரவமும் மனச்சான்றும் இல்லாதவர்கள் என்றும், தங்களது திடமான கருத்துக்களையும் தங்களது கட்சிச் செயல்திட்டத்தையும் கூட மதிக்கும் இயல்பற்ற வர்கள் என்றும் த்ரோத்ஸ்கிய் அவர்களைப்பற்றிக் குறிப்பிடு கிருர். த்ரோத்ஸ்கிய் எவ்வளவு உதவியாகப் பணிபுரிகின்ருர்!

1903ல் சுயநிர்ணய உரிமை விஷயத்தைப் பற்றி இரண் டாவது காங்கிரசிலிருந்து போலிஷ் மார்க்ஸீயவாதிகளின்

பிரதிநிதிகள் வெளியேறிய பொழுது, இவ்வுரிமையானது உள்ளடக்கப்பொருள் சிறிதுமில்லாதது என்றும், அதனுல் அதைச் செயல்திட்டத்திலிருந்து அகற்றிவிடலாம் என்றும் அவர்கள் கருதினுர்கள் அந்தச் சமயத்தில் த்ரோத்ஸ்கிய் சொல்லியிருக்கலாம்.

ஆனுல் அதற்குப் பிறகு இத்திட்டத்தையுடைய கட்சியில் போலிஷ் மார்க்ஸீயவாதிகள் சேர்ந்தனர். அதைத் திருத்துவதற்கு அவர்கள் ஒரு தீர்மானத்தைக்கூடக் கொண்டு வரவில்லை*.

தமது சஞ்சிகையின் வாசகர்களுக்கு இந்த உண்மைகளை ஏன் த்ரோத்ஸ்கிய் சொல்லவில்லை? ஏனென்றுல், கலைப்பு வாதத்தை எதிர்க்கும் போலிஷ்காரர்களுக்கும் ருஷ்யர்களுக்குமிடையில் வேற்றுமைகளை விதைத்து வளர்ப்பதன் வாயிலாக ஊகவாணிகம் செய்வதும், செயல்திட்டம் பற்றிய பிரச்சினை விஷயத்தில் ருஷ்யத் தொழிலாளிகளை ஏமாற்றுவதும் த்ரோத்ஸ்கியுக்கு லாபகரமானவை.

மார்க்ஸீயம் சம்பந்தமான எந்த முக்கியமான விஷயத்திலும் த்ரோத்ஸ்கிய் ஒரு திடமான கருத்தை இதுவரை ஒரு பொழுதுமே கொண்டிருந்ததில்லை. குறிப்பிட்ட கருத்து வேறுபாடுகள் இருக்குமிடத்தில் அவற்றின் விரிசல்களுக்கிடையில் நுழைந்துவிட வழியை எப்போதுமே கண்டுபிடிப்பார்; ஒரு சாரியைக் கைவிட்டு விட்டு இன்னொரு சாரிக்குத் தாவுவார். தற்பொழுது அவர் பூந்த்காரர்களுடனும் கலைப்பு

---

* 1913ல் நடந்த ருஷ்ய மார்க்ஸீயவாதிகளின் கோடை மகாநாட்டில் ஆலோசனை உரிமையுடன் மட்டுமே போலிஷ் மார்க்ஸீயவாதிகள் கலந்து கொண்டனர் என்றும், சுயநிர்ணய உரிமையின்மீது (பிரிந்துபோவது மீது) தமது பொதுவான எதிர்ப்பை அறிவித்துவிட்டு, அதுபற்றிய வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்றும் நாம் அறிகிறேம். அம்முறையில் நடந்துகொள்ளவும், இதுவரை செய்ததுபோல் பிரிவுக்கெதிராகப் போலந்தில் கிளர்ச்சி செய்யவும் அவர்களுக்கு முழு உரிமையும் நிச்சயம் உண்டு. ஆனுல் த்ரோத்ஸ்கிய் கூறியது இதுவல்ல; ஏனென்றுல் ''செயல்திட்டத்திலிருந்து'' 9 வது பாராவை ''நீக்கிவிட வேண்டும்'' என்று போலிஷ் மார்க்ஸீயவாதிகள் கோரவில்லை.

வாதிகளுடனும் இருக்கிறார். இந்தக் கனவான்களோ கட்சி விஷயத்தில் எவ்விதச் சடங்கையும் கடைப்பிடிப்பதில்லை.

பூந்த்காரர் லீப்மன் கூறுவதைக் கேளுங்கள்:

''ஒவ்வொரு சிறு தேசீய இனத்துக்கும் 'சுயநிர்ணய உரிமை' உண்டு என்பதை ருஷ்ய சோஷல்-டெமாகிராட்டுகள் தங்களது செயல்திட்டத்தில் பதினைந்து ஆண்டுகட்கு முன்பு சேர்த்துக் கொண்டார்கள். அப்பொழுது ஒவ்வொரு மனிதரும்(!!) தன்னைத்தானே கேட்டுக் கொண்டார்: இந்த நவநாகரிகமான (!!) வார்த்தையின் உண்மைப் பொருள் என்ன? பதில் ஒன்றையும் காணோம்(!!). மூடுபனியில் மறைந்து கிடந்த இந்த வார்த்தை இன்னும் அப்படியேதான் இருந்தது(!!). உண்மையில் அச்சமயத்தில் அம்மூடுபனியை விலக்குவது கடினம்தான். இவ்விஷயத்தைத் தெளிவாக்குவதற்கு இன்னும் நேரம் வரவில்லை என்று சொன்னார்கள்; எனவே இப்பொழுது அது மூடுபனிக்குள்ளேயே மறைந்திருக்கட்டும்(!!); அதில் என்ன உட்கருத்தை அமைப்பது என்பதை அனுபவம் காட்டும் என்றார்கள்.'' இவ்வாறு அக்கனவான் எழுதுகிறார்.

கட்சியின் செயல்திட்டத்தை இந்தக் ''கந்தலாண்டி''[37] கேலிசெய்யும் விதம் பிரமாதம், இல்லையா?

அவர் ஏன் அதைக் கேலி செய்கிறார்?

ஏனென்றால் அவர் சுத்த அறிவுசூனியம்; அவர் கற்றுக் கொண்டது ஒன்றுமில்லை; கட்சியின் வரலாற்றைப் பற்றிக் கூட அவர் ஒன்றும் படித்தது கிடையாது. கடைசியில் கலைப்பு வாதக் கூட்டத்தில் சேர்ந்துவிட்டார்; கட்சியைப் பற்றியும் அதன் கொள்கைகளைப் பற்றியும் அம்மணமாகத் திரிவதுதான் ''சரியானது'' என்று அக்கூட்டத்தில் கருதப் படுகிறது!

''ஊறுகாய்ப் பானையில் உமிழ்ந்ததாகப்'' பெருமையடித்துக் கொண்டான் பொம்யாலோவ்ஸ்க்கியின் மதப்பள்ளி மாணவன்.[38] பூந்த்காரர்களோ அவனையும் விஞ்சிவிட்டார்கள். அவர்கள் தங்களது சொந்தப் பானையிலேயே பகிரங்கமாக உமிழும்படி லீப்மனை அவிழ்த்துவிட்டு விட்டார்கள். சர்வதேசக் காங்கிரஸ் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி விட்டது என்பதைப் பற்றியோ, தங்களது கட்சியின் காங்கிரசில்கூட தங்களது ''பூந்தைச்'' சேர்ந்த இரு பிரதிநிதிகளால்

''சுயநிர்ணயத்தின்'' பொருளைப் புரிந்துகொள்ள முடிந்தது (அவர்கள் ''இஸ்க்ராவைக்'' ''கடுமையாகத்'' தாக்கும் உறுதியான விரோதிகளல்லவா!) என்பதைப் பற்றியோ, மேலும் அவர்கள் அதை ஒப்புக்கொண்டார்கள் என்பதைப் பற்றியோ திருவாளர்கள் லீப்மன்களுக்கு என்ன கவலை? ''கட்சிப் பிரசாரகர்கள்'' (நான் தமாஷ் செய்ய வில்லை!) கட்சியின் வரலாற்றையும் செயல்திட்டத்தையும் அம்மதப் பள்ளி மாணவனைப்போல் கருதி நடக்கிறார்கள் என்றால் கட்சியைக் கலைத்துவிடுவது இன்னும் எளிதாகி விடுமல்லவா?

இங்கே இரண்டாவது ''கந்தலாண்டி'' ஒருவர் இருக்கிறார்; அவர்தான் ''த்ஸ்வின்''[39] பத்திரிகையைச் சேர்ந்த திரு. யுர்க்கேவிச். இரண்டாவது காங்கிரசின் நிகழ்ச்சிப் பதிவேட்டை திரு. யுர்க்கேவிச் தன்முன் வைத்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். ஏனெனில் கோல்ட்பிளாட் பிளெஹானவை மேற்கோள் காட்டியதைத் தாமும் மேற்கோள் காட்டி சுயநிர்ணயம் என்பதன் ஒரே பொருள் பிரிந்து போகும் உரிமைதான் எனத் தமக்கும் தெரியும் என்று காண்பிக்கிறார். ஆயினும் அதே சமயத்தில், ருஷ்ய மார்க்ஸீயவாதிகள் ருஷ்ய ''அரசின் முழுமைப்பாட்டை'' ஆதரிக்கிறார்கள் என்ற அவதூற்றை உக்ரேனியக் குட்டி பூர்ஷ்வாக்களுக்கு மத்தியில் அவர் பரப்புவதை அது தடுக்கவில்லை (1913, இதழ்கள் 7-8, பக்கம் 83, முதலியன). பெரிய-ருஷ்ய ஜனநாயகவாதத்திலிருந்து உக்ரேனிய ஜனநாயகவாதத்தைத் தனிப்படுத்துவதற்கு இந்த அவதூற்றைக் காட்டிலும் ஒரு சிறந்த முறையை யுர்க்கேவிச்சுகள் கண்டுபிடித்திருக்க முடியாது. உக்ரேனியத் தொழிலாளர்கள் தனியாக ஒரு விசேஷ தேசீய ஸ்தாபனமாக அமைந்து செயல்பட வேண்டும் என்று கூறும் ''த்ஸ்வின்'' பிரசாரகர்களின் கொள்கை முழுவதையும் அனுசரித்தது தானே இந்தப் போக்கு!*

---

* ''காலீஷியாவில் உக்ரேனியத் தொழிலாளி வர்க்க இயக்க வளர்ச்சிபற்றிய சுருக்கவிவரம்'', கீயெவ், 1914 என்ற திரு. லெவீன்ஸ்கியின் நூலுக்கு (இது யுக்ரேனிய மொழியில் எழுதப்பட்டது) திரு. யுர்க்கேவிச் எழுதிய முகவுரையை விசேஷமாகப் பார்க்க.—(பதிப்பாசிரியர்கள்)

பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் பிளவை உண்டு பண்ண முயன்று கொண்டிருக்கும் தேசீயவாத பிலிஸ்டைன் களின் குழு ஒன்று—''த்ஸ்வின்'' செய்யும் வேலை புறநிலை ரீதியாகப் பார்த்தால் இதுதான்—தேசீயப் பிரச்சினை பற்றி இத்தகைய படுமோசமான குழப்பத்தைப் பரப்புவது பொருத்தமானதுதான். தங்களைக் ''கட்சிக்கு அருகாமையிலுள்ள ஆட்கள்'' என்று யாராவது அழைத்தால் யுர்க்கேவிச்சுகளுக்கும் லீப்மன்களுக்கும் ''பொல்லாத'' கோபம் வருகிறது; ஆனால் கட்சிச் செயல்திட்டத்தில் பிரிந்துபோகும் உரிமை பற்றிய பிரச்சினை எப்படித் தீரவேண்டுமென்று தாங்கள் விரும்புகிறார்கள் என்று கேட்டால் அவர்கள் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட பதில் வருவதில்லை.

ஆனால் மூன்றாவது, தலையாய ''கந்தலாண்டி'' இதோ இருக்கிறார்; அவர்தான் ஸெம்கோவ்ஸ்க்கிய். இவர் ஒரு கலைப்புவாதச் செய்தித்தாளில் பெரிய-ருஷ்ய வாசகர்களுக்கு எழுதும்பொழுது செயல்திட்டத்தின் 9வது பாராவைச் சாடுகிறார்; அதே சமயம் இந்தப் பாராவை நீக்கிவிடும் ''பிரேரணையைச் சில காரணங்களால் தன்னால் ஆமோதிக்க முடியவில்லை'' என்றும் அறிவிக்கிறார்!!

இதை நம்பமுடியவில்லை அல்லவா? ஆனால் இது உண்மை.

1912 ஆகஸ்டில் கலைப்புவாதிகளின் மகாநாடு தேசீயப் பிரச்சினையை அதிகாரபூர்வமாகக் கிளப்பியது. 9 வது பாராவைப்பற்றிப் பதினெட்டு மாதகாலம் ஒரே விதிவிலக்காக திரு. ஸெம்கோவ்ஸ்க்கியின் கட்டுரையைத் தவிர ஒரு கட்டுரைகூட வெளிவரவில்லை; இக்கட்டுரையில்தான் ஆசிரியர் கட்சிச் செயல்திட்டத்தைப் புறக்கணிக்கிறார்; அதே சமயத்தில் அதைத் திருத்தும் பிரேரணையைத் தன்னால் ''சில காரணங்களால் (இது என்ன, இரகசியம் என்ற ஒரு வியாதியா?) ஆமோதிக்க முடியவில்லை'' என்கிறார்!! உலகில் வேறு எங்கும் இதையொத்த சந்தர்ப்பவாதச் செயல்களையும், அதைவிட மோசமான கட்சியை நிராகரிப்பதையும், அதைக் கலைத்துவிட விரும்புவதையும் நாம் காண்பது கடினம் என்பது நிச்சயம்.

ஸெம்கோவ்ஸ்க்கியின் வாதங்கள் எப்படிப்பட்டவை என்பதைக் காட்ட ஒரு உதாரணமே போதும்.

அவர் எழுதியதாவது:

''போலந்தின் பாட்டாளி வர்க்கம் ருஷ்யப் பாட்டாளி வர்க்கமுழுவதுடனும் ஒரே அரசு என்ற கட்டமைப்புக்குள் வாழ்ந்து அதனுடன் சேர்ந்து ஒரு கூட்டுப் போராட்டத்தை நடத்த விரும்பி அதற்கு மாருகப் போலந்து சமுதாயத்தின் பிற்போக்கு வர்க்கங்கள் ருஷ்யாவிலிருந்து போலந்தைப் பிரிக்க விரும்பி, பொது வாக்கெடுப்பு மூலமாக அது தனியே பிரிந்து போவதற்கும் ஆதரவாகப் பெரும்பான்மை வாக்கு களைப் பெற்று விட்டால், நாம் என்ன செய்வது? ருஷ்ய சோஷல்-டெமாகிராட்டுகளாகிய நாம் நமது போலந்துத் தோழர்களுடன் ஒன்றுசேர்ந்து ஒரு மத்தியப் பாராளுமன்றத் தில் பிரிந்து போவதை எதிர்த்து ஓட்டுப் போடுவதா, அல்லது 'சுயநிர்ணய உரிமையை' மீருமல் இருக்கும் பொருட்டு பிரிந்து போவதற்கு ஆதரவாக ஓட்டளிப்பதா?'' (''நோவயா ரபோச்சாயா கஸேட்டா'', இதழ் 71.)[40]

விவாதிக்கப்படும் பிரச்சினையை திரு. செம்கோவ்ஸ்க்கிய் புரிந்து கொள்ளக்கூடவில்லை என்பது இதிலிருந்து தெளிவா கிறது! பிரிந்துபோகும் உரிமை என்று சொல்லும்பொழுது அப்பிரச்சினையானது பிரிந்துபோகும் பிரதேசத்தின் பாராளு மன்றத்திஞல் (சபை, பொதுவாக்கெடுப்பு முதலியவற் ருல்) தீர்க்கப்பட வேண்டும் என்பது முன்னதாக நடக்க வேண்டும்; மத்தியப் பாராளுமன்றத்திஞல் அல்ல. இது அவருக்குத் தோன்றவேயில்லை.

புரிஷ்கேவிச்சுகளும் கோக்கோஷ்கின்களும் இருவருமே பிரிந்துபோகும் கருத்தே குற்றத்தன்மை கொண்டது என்று கருதும்பொழுது ஜனநாயக முறையில் பெரும்பான்மை மக்கள் பிற்போக்கை ஆதரித்தால் ''நாம் என்ன செய்வது'' என்று குழந்தையைப் போல் விழிப்பது உண்மையான, உயி ருள்ள பிரச்சினையைத் திரையிட்டு மறைக்க உதவுகிறது. அகில ருஷ்யப் பாட்டாளிகள் இன்று புரிஷ்கேவிச்சுகளையும் கோக்கோஷ்கின்களையும்கூட எதிர்த்துப் போரிடவேண்டாம் போலும்! அவர்களை விட்டு விட்டு போலந்தின் பிற்போக்கு வர்க்கங்களை எதிர்த்துப் போராட வேண்டும் போலும்!

கலைப்புவாதிகளின் பத்திரிகையில் வெளியாகும் வெறும் குப்பை இதைப் போன்றதுதான். இப்பத்திரிகையின் சித் தாந்தத் தலைவர்களில் ஒருவர் திரு. லெ. மார்த்தவ்; 1903ல்

கட்சிச் செயல்திட்டத்தை வரைந்து, அதற்கு ஆதரவாகப் பேசினுரே அதே லெ. மார்த்தவ்தான், அதற்குப் பிறகும் பிரியும் உரிமையை ஆதரித்து எழுதிய அதே மனிதர்தான்.

புத்திசாலி இங்கே தேவையில்லை,
ரெஆதை அனுப்பினுல் போதும்,
நான் காத்திருந்து பார்க்கிறேன்.[41]

என்ற விதியின்படி லெ. மார்த்தவ் இப்பொழுது வாதம் செய்கிருர் போலும்.

அவர் ரெஆத்-ஸெம்கோவ்ஸ்கியை அனுப்பிவைத்து, ஒரு தினசரிப் பத்திரிகையில் நமது செயல்திட்டத்தைத் திரித்துக் கூறி முடிவில்லாமல் குழப்புகிருர்; அப்பத்திரிகையின் புதிய வாசகர்களுக்கோ இந்தச் செயல்திட்டத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது.

ஆம்! கலைப்புவாதம் வெகுதூரம் போய்விட்டது; கட்சி உணர்வு துளிகூட காணப்படாத மிகப்பல பிரபல மாஜி சோஷல்-டெமாகிராட்டுகளும்கூட இருக்கின்றுர்கள்.

லீப்மன்கள், யுர்க்கேவிச்சுகள், ஸெம்கோவ்ஸ்கிய்களின் பட்டியலில் ரோஸா லுக்ஸம்பர்கைச் சேர்க்க முடியாது என்பது உண்மைதான்; ஆயினும் அவரது தவறை இவ்வகை மனிதர்கள்தான் எடுத்துப் பயன்படுத்திக் கொள்கிருர்கள் என்ற உண்மை அவர் சந்தர்ப்பவாதத்தில் நழுவி விழுந்து விட்டார் என்பதை மிகவும் தெளிவாகக் காட்டுகிறது.

## 10. முடிவுரை

இப்பொழுது நாம் தொகுத்துக் கூறுவோம்.

பொதுவாக மார்க்ஸீயத் தத்துவத்தைப் பொறுத்த வரை சுயநிர்ணய உரிமை என்ற பிரச்சினையில் சிக்கல் ஒன்றுமில்லை. 1896ம் ஆண்டின் லண்டன் தீர்மானத்தையோ அல்லது சுயநிர்ணயம் என்பது பிரிந்துபோகும் உரிமையைத் தான் உள்ளடக்கப் பொருளாகக் கொண்டது என்பதையோ அல்லது எல்லாப் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிகளிலும் சுயேச்சையான தேசீய அரசுகள் அமைக்கப்படும் போக்குக்

காணப்படுகிறது என்பதையோ யாரும் தீவிரமாக மறுக்க முடியாது.

ருஷ்யாவில் ஒடுக்கப்படும் தேசீய இனத்துப் பாட்டாளிகளும் ஒடுக்கும் தேசீய இனத்துப் பாட்டாளி மக்களும் ஒன்று சேர்ந்து தோளோடு தோள் பொருந்த நின்று போராடுகிறுர்கள், போராட வேண்டும் என்பதனுல் ஓரளவுக்கு ஒரு சிக்கல் ஏற்படுகிறது. பாட்டாளிகளின் சோஷலிஸத்துக்கான வர்க்கப் போராட்டத்தின் ஒற்றுமையைப் பாதுகாத்தலும், எல்லா பூர்ஷ்வா, கறுப்பு நூற்றுவர் தேசீயவாதக் கருத்துக்களையும் எதிர்த்தலும் அவர்களது பணி. ஒடுக்கப்படும் தேசீய இனங்களைப் பொறுத்தவரை, பாட்டாளி வர்க்கம் ஒரு சுயேச்சையான கட்சி என்ற முறையில் தனி ஸ்தாபன ரீதியாக அமைந்திருப்பதனுல் தல தேசீயவாதத்தை எதிர்த்து மிகவும் கடுமையான போராட்டத்தைச் சில சமயங்களில் நடத்த வேண்டியிருக்கிறது; இதன் விளைவாக எதிர்கால லட்சியம் உருத்திரிந்து காணப்படுகிறது; ஒடுக்கும் தேசீய இனத்தின் தேசீயவாதம் கண்ணுக்குப் புலப்படாமல் போய் விடுகிறது.

ஆனுல் லட்சியம் இவ்வாறு உருத்திரிந்து காணப்படுவது நெடுநாளைக்கு நீடிக்க முடியாது. ''க்ராக்கோவ்'' கண்ணேட்டத்தில் அல்லாமல் அகில ருஷ்யக் கண்ணேட்டத்தில் நாம் அரசியல் விஷயங்களை வகுத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பல்வேறு தேசீய இனங்களையும் சேர்ந்த பாட்டாளிகள் ஒன்று சேர்ந்து நடத்திய போராட்டத்தின் அனுபவம் தெள்ளத் தெளிவாகக் காட்டியிருக்கிறது. ஆனுல் அகில ருஷ்ய அரசியலில் இன்று தலைமைப் பாத்திரம் வகிப்பவர்கள் புரிஷ்கேவிச்சுகளும் கோக்கோஷ்கின்களும்தாம்; அவர்களது கருத்துகள்தாம் தலையோங்கி நிற்கின்றன; ''தனிப் பிரிவுவாதம்'' பேசுவதற்காக, பிரிந்து போவதைப் பற்றி நினைப்பதற்காக ருஷ்யரல்லாதவர்கள் தொல்லைப்படுத்தப்பட வேண்டும் என்ற அவர்களது கருத்து தூமாவிலும், பள்ளிகளிலும், மதாகோயில்களிலும், படைவீடுகளிலும், நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான செய்தித்தாள்களிலும் பிரசாரம்செய்யவும் செயல்படுத்தவும் படுகிறது. இந்தப் பெரிய-ருஷ்யத் தேசீயவாத நஞ்சு அகில ருஷ்ய அரசியல் சூழ்நிலை

முழுவதையும் பாழ்படுத்துகிறது. இது ஒரு தேசீய இனத்தின் துர்ப்பாக்கியம்: மற்ற தேசீய இனங்களை அடிமைப்படுத்தியது மூலம் அது ருஷ்யா முழுவதிலும் பிற்போக்கைப் பலப்படுத்துகிறது. 1849, 1863ம் ஆண்டுகளின் நினைவுகள் நமது அரசியல் பாரம்பரியத்தின் உயிருள்ள அம்சங்களாக இன்னும் இருக்கின்றன. பெரும் சூறுவளிகள் வீசாமற்போனல்,இந்தப் பாரம்பரியம் வரப்போகிற பல்லாண்டுகளில் ஒவ்வொரு ஜனநாயக இயக்கத்தையும், குறிப்பாக சோஷல்-டெமாகிராட்டு இயக்கத்தையும் தடைப்படுத்தும்.

ஒடுக்கப்படும் தேசீய இனங்களைச் சேர்ந்த சில மார்க்ஸீயவாதிகளின் கண்ணேட்டம் இயற்கையானதாகச் சில சமயங்களில் தோன்றினாலும் (சிற்சில சமயங்களில் இவற்றின் பொதுமக்களது கண்களை அவர்களது ''சொந்த'' தேசீய விடுதலைபற்றிய கருத்து மறைத்துவிடுகிறது; இது அவர்களது ''துர்ப்பாக்கியம்'') யதார்த்தரீதியில் பார்த்தால், உண்மையில் ருஷ்யாவில் வர்க்கச் சக்திகளின் புறநிலை ஒப்புவலிமை காரணமாகச் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்க மறுப்பது படுமோசமான சந்தர்ப்பவாதத்துக்கு ஒப்பாகிவிடுகிறது; கோக்கோஷ்கின்களின் கருத்துகளினுல் பாட்டாளி வர்க்கம் பீடிக்கப்படுவதற்கு ஒப்பாகி விடுகிறது; இதில் சந்தேகமில்லை. இக்கருத்துகள் தமது சாராம்சத்தில் புரிஷ்கேவிச்சுகளின் கருத்துகளும் கொள்கையும் ஆகும்.

எனவே, ரோஸா லுக்ஸம்பர்கின் கண்ணேட்டத்தைப் போலிஷ், ''க்ராக்கோவ்'' குறுகிய மனப்பான்மை* என்ற

---

* தேசீய இனங்கள் பிரிந்துபோகும் உரிமையை அகில ருஷ்ய மார்க்ஸீயவாதிகள், முக்கியமாகப் பெரிய-ருஷ்யர்கள் ஒப்புக்கொண்டது ஒரு குறிப்பிட்ட ஒடுக்கப்படும் தேசீய இனத்தைச் சேர்ந்த மார்க்ஸீயவாதிகள் பிரிந்துபோவதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வதற்குத் தடையாக இருக்காது. இதைப் புரிந்து கொள்வது கடினமில்லை. விவாகரத்து உரிமையை ஏற்றுக்கொள்வது, ஒரு குறிப்பிட்ட சம்பவத்தில் விவாகரத்தை எதிர்ப்பதைத் தடைசெய்யாது. அதே போன்றதுதான் இதுவும். எனவே, ஸெம்கோவ்ஸ்கியாலும் த்ரோத்ஸ்கியாலும் ''தூண்டிவிடப்பட்டுக் கொண்டிருக்கும்'' இல்லாத ''முரண்பாட்டைக்'' கண்டு சிரிக்கும் போலிஷ் மார்க்ஸீயவாதிகளின் எண்ணிக்கை நிச்சயம் அதிகரிக்கும் என நாம் கருதுகிறேம்.

முறையில் நாம் முதலில் மன்னித்துவிட்டிருந்தாலும்கூட, இன்று—தேசியவாதம், அதிலும் அரசாங்கப் பெரிய-ருஷ்ய தேசியவாதம் எல்லாவிடங்களிலும் வலுப்பெற்றுவிட்டிருக்கையில், இந்தப் பெரிய-ருஷ்ய தேசியவாதத்தினால் கொள்கைப் போக்கு உருப்பெற்று இயங்குகின்ற போது—அதை மன்னிக்க முடியாது. நடைமுறையில் எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த சந்தர்ப்பவாதிகளால்—''சூறுவளிகள்'', ''பாய்ச்சல்கள்'' என்ற கருத்துக்களை உச்சரிக்கவும் கூசுகிற, பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி முடிந்துவிட்டது என்று நம்புகிற, கோக்கோஷ்கின்களின் மிதவாதத்தைப் பின்பற்றுகிற சந்தர்ப்பவாதிகளால்—இது பிடித்துக் கொள்ளப்படுகின்றது.

இதர தேசியவாதத்தைப் போலவே பெரிய-ருஷ்யத் தேசியவாதமும் பல்வேறு கட்டங்களைக் கடக்கிறது; இது பூர்ஷ்வா நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எந்த வர்க்கங்கள் பிரதானமானவையாக உள்ளன என்பதைப் பொறுத்தது. 1905 வரை தேசியப் பிற்போக்குவாதிகளைப் பற்றி மட்டுமே நமக்குத் தெரிந்திருந்தது. புரட்சிக்குப் பிறகு தேசிய மிதவாதிகள் நம் நாட்டில் தோன்றினார்கள்.

நமது நாட்டில் அக்டோபர்காரர்களாலும் காடெட்டுகளாலும் (கோக்கோஷ்கின்), அதாவது இன்றைய பூர்ஷ்வாக்கள் எல்லோராலும் மேற்கொள்ளப்படும் நிலைமை இதுதான்.

பெரிய-ருஷ்யத் தேசிய-ஜனநாயகவாதிகள் பிறகு தவிர்க்க முடியாதபடி தோன்றுவார்கள். ''மக்கள் சோஷலிஸ்ட்''[42] கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான திரு. பெஷெகோனவ், குடியானவர்களின் தேசியவாதத் தப்பெண்ணங்களைப் பொறுத்த விஷயத்தில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கூறியபொழுது இதே கருத்தைத்தான் வெளியிட்டார் (''ரூஸ்கோயே பகாத்ஸ்த்வோவின்''[43] 1906 ஆகஸ்டு இதழ்). குடியானவர்களை நாம் ''வெகு உயர்வாக மதிக்கிறோம்'' என்று போல்ஷெவிக்குகளாகிய நம்மைப்பற்றிப் பலர் பழித்தாலும் குடியானவனின் அறிவையும் அவனது தப்பெண்ணங்களையும், ஜனநாயகம் வேண்டுமென்று புரிஷ்கேவிச்சை எதிர்த்து அவன் செய்யும் முயற்சிகளையும், மதகுரு

வுடனும் நிலப்பிரபுவுடனும் சமரசம் செய்துகொள்ள அவனது விருப்பத்தையும் நாம் தெளிவாக வேறுபடுத்திக் கவனித்துக்கொண்டுதான் வருகிறோம், அப்படியேதான் எப்பொழுதும் செய்வோம்.

பாட்டாளி வர்க்க ஜனநாயகமானது பெரிய-ருஷ்ய விவசாயிகளின் தேசீயவாதத்தை இப்பொழுதும் ஒருவேளை இன்னும் நீண்ட காலத்துக்கும் கணக்கில் கொள்ளவேண்டும் (அதற்குச் சலுகைகள் காட்டும் நோக்கத்துடன் அல்ல, அதை எதிர்த்துப் போராடுவதற்காக).* 1905க்குப் பிறகு ஒடுக்கப்படும் தேசீய இனங்களுக்கு மத்தியில் தேசீயவாத உணர்வு பெரும் அளவில் வளர்ச்சியுற்றிருக்கிறது (உதாரணமாக, முதல் தூமாவில் ''சுயநிர்வாக - கூட்டாட்சிவாதிகளின்'' குழு, உக்ரேனிய இயக்கத்தின் வளர்ச்சி, முஸ்லீம்

---

* உதாரணமாக, போலிஷ் தேசீயவாதத்தில் ஏற்படும் மாறுதல்களைத் தொடர்ந்து கவனிப்பது சுவாரசியமாயிருக்கும். அது சிறு நிலப்பிரபுத்துவத் தேசீயவாதமாயிருந்து பூர்ஷ்வாத் தேசீயவாதமாகவும், பிறகு குடியானவத் தேசீயவாதமாகவும் உருமாறிய முறையைக் கவனிப்பது சுவாரசியமாயிருக்கும். ஒரு ஜெர்மானிய கோக்கோஷ்கினின் கருத்தை ஏற்றுக்கொண்ட லுத்விக் பெர்ன்ஹார்ட் தாம் எழுதிய *Das polnische Gemeinwesen im preussischen Staat* (''பிரஷ்ய அரசில் போலிஷ் சமுதாயம்''; ருஷ்ய மொழி பெயர்ப்பும் உள்ளது) என்ற நூலில் ஒரு மாதிரிப்படிவமான தோற்றத்தை வருணிக்கிறார்: ஜெர்மனியில் போலிஷ்காரர்கள் அமைத்துள்ள ஒருவகைக் ''குடியானவக் குடியரசு'' தான் அது; சிறு தேசீய இனத்துக்கான, மதத்துக்கான, ''போலிஷ்'' பிரதேசத்துக்கான தங்களது போராட்டத்தில் போலிஷ் விவசாயிகளின் பல்வேறு கூட்டுறவுச்சங்கங்களும் இதர சங்கங்களும் நெருங்கி அமைத்த ஒரு கூட்டணி உருவங் கொண்டது. ஜெர்மானிய ஒடுக்கல் போலிஷ்காரர்களை ஒன்றுதிரட்டி ஒதுக்கிவைத்தது. முதலில் சிறு நிலப்பிரபுத்துவத் தேசீயவாதத்தையும், பிறகு பூர்ஷ்வாத் தேசீயவாதத்தையும், இறுதியாகக் குடியானவ மக்களின் தேசீயவாதத்தையும் அது எழுப்பியது (பள்ளிகளில் போலிஷ் மொழியை உபயோகிப்பதை எதிர்த்து 1873ல் ஜெர்மானியர்கள் போராட்டம் ஆரம்பித்ததிலிருந்து இது குறிப்பாகத் தொடங்கியது). போலந்து விஷயத்தில் மட்டுமின்றி ருஷ்யாவிலும் இதே போக்கில் சம்பவங்கள் போய்க் கொண்டிருக்கின்றன.

இயக்கத்தின் வளர்ச்சி முதலியவற்றை நாம் நினைவுபடுத்திக் கொள்வோம்); இதன் விளைவாக, பட்டணங்களிலும் கிராமங்களிலும் பெரிய-ருஷ்யக் குட்டி பூர்ஷ்வாக்களுக்கு மத்தியில் தேசீயவாதம் இன்னும் அதிகமாக வளருவது நிச்சயம். ருஷ்யாவில் எவ்வளவுக்கெவ்வளவு மெதுவாக ஜனநாயகம் வளருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகப் பல்வேறு தேசீய இனப் பூர்ஷ்வாக்களுக்கிடையில் தேசீய ஒடுக்கல் முறையும் தேசீயச் சச்சரவுகளும் விடாப்பிடியாகவும் மிருகத்தனமாகவும் கடுமையாகவும் இருக்கும். அதே சமயத்தில், ருஷ்ய புரிஷ்கேவிச்சுகளின் விசேஷ பிற்போக்குத் தன்மையானது சில சமயங்களில் அண்டை அரசுகளில் இன்னும் அதிகச் சுதந்திரமாக இருக்கின்ற பல்வேறு ஒடுக்கப்படும் தேசீய இனங்களுக்கு மத்தியில் ''தனிப்பிரிவுவாதப்'' போக்குகளைத் தோற்றுவிக்கும் (தோன்றியிருப்பின் அவைகளைப் பலப்படுத்தும்).

இந்த நிலைமையில் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைஇருவகைப்பட்டது, அல்லது இரட்டையானது: எல்லா வகையான தேசீயவாதத்தையும், எல்லாவற்றுக்கும் மேலாகப் பெரிய-ருஷ்யத் தேசீயவாதத்தை எதிர்த்துப் போராடுதல்; பொதுவாக எல்லாத் தேசீய இனங்களின் சம உரிமைகளையும் ஏற்றுக்கொள்வது மட்டுமின்றி, அரசு அமைப்பதற்கான சம உரிமைகளை, அதாவது தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையை, பிரிந்துபோகும் உரிமையை ஏற்றுக்கொள்ளுதல். அதே சமயத்தில், எல்லாத் தேசீய இனங்களின் எல்லா விதமர்ன தேசீயவாதத்தையும் எதிர்த்து வெற்றிகரமாகப் போராட வேண்டி, பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஐக்கியத்தை, பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களின் ஐக்கியத்தைப் பேணிக்காப்பதும் அவர்களது கடமை; பூர்ஷ்வாக்களின் தேசீயத் தனித்துவ முயற்சிகளுக்கெல்லாம் எதிராக இந்த ஸ்தாபனங்களை நன்கு நெருக்கம் அமைந்த ஒரு சர்வ தேசப் பொது நிறுவனமாக இணைப்பது அவர்களது கடமை.

எல்லாத் தேசீய இனங்களுக்கும் சம உரிமைகள்; தேசீய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை; எல்லாத் தேசீய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கிடையில் ஒற்றுமை— இதுதான் மார்க்ஸீயமும், அகில உலகின் அனுபவமும்,

ருஷ்ய அனுபவமும் தொழிலாளர்கட்குப் போதிக்கும் தேசீயச் செயல்திட்டம்.

---

இக்கட்டுரையானது அச்சேறிக் கொண்டிருந்த சமயத்தில் ''நாஷா ரபோச்சாயா கஸேட்டாவின்'' 3 வது இதழ் கிடைத்தது. அதில் எல்லாத் தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக் கொள்வதுபற்றி திரு. வி. கொஸோவ்ஸ்க்கிய் கீழ்வருமாறு எழுதுகிருர்:

*''கட்சியின் முதல் காங்கிரசின் (1898) தீர்மானத்திலிருந்து அது இயந்திர ரீதியாக எடுத்தாளப்பட்டது. முதல் காங்கிரசும் சர்வதேச சோஷலிஸ்ட் காங்கிரஸ்களின் முடிவுகளிலிருந்து அதைக் கடன் வாங்கியிருந்தது. சோஷலிஸ்ட் இண்டர்நேஷனலினுல் அதற்குக் கொடுக்கப்பட்ட அர்த்தமே 1903 காங்கிரஸில் தரப்பட்டது என்பது விவாதத்திலிருந்து தெளிவாகிறது. அதாவது அரசியல் சுயநிர்ணயம், அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்குத் தேசீய இனங்களின் சுயநிர்ணயம்—இதுதான் அந்தப் பொருள். இவ்வாருக, ஒரு பிரதேச ரீதியாகப் பிரியும் உரிமையை உள்ளடக்கிய தேசீயச் சுயநிர்ணயம் என்ற சூத்திரமானது, இருக்கின்ற அரசைவிட்டு, பிரிந்து செல்ல முடியாத, அல்லது விரும்பாத சிறு தேசீய இனங்கள் விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட அரசு அமைப்புக்கு உள்ளே தேசீய உறவுகள் எவ்வாறு முறைப்படுத்தப்படும் என்ற கேள்வியை எவ்விதத்திலும் பாதிக்காது''.*

திரு. வி. கொஸோவ்ஸ்க்கிய் 1903ம் ஆண்டின் இரண்டாவது காங்கிரசின் நிகழ்ச்சிப் பதிவேட்டைப் பார்த்திருக்கிருர் என்பதும், சுயநிர்ணயம் என்ற சொல்லின் உண்மையான (ஒரே) பொருளை மிக நன்ருகப் புரிந்து கொண்டிருக்கிருர் என்பதும் இதிலிருந்து நன்கு புலனுகிறது. நமது செயல் திட்டத்தை எள்ளி நகையாடி, அது தெளிவில்லாதது என்று அறிவிப்பதற்குத் திரு. லீப்மனே பூந்த் செய்தித்தாளான ''ஸைட்டின்''[44] ஆசிரியர்கள் அனுமதித்தார்கள் அல்லவா, அதனுடன் இதையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!! இந்த பூந்த்காரர்களின் ''கட்சி'' ஒழுக்கங்கள் விநோதமானவை... சுயநிர்ணயக் கோட்பாட்டைக் காங்கிரஸ் இயந்திரரீதியாக எடுத்துக்கொண்டது என்று ஏன் கொஸோவ்ஸ்க்கிய் கூறினுர்

என்பது ''கடவுளுக்கு மட்டும்தான் தெரியும்''. சிலர் ''ஆட்சேபம்'' தெரிவிக்க விரும்புகிறார்கள்; ஆனால் எவ்வாறு, ஏன், என்ன காரணத்துக்காக என்பது அவர்களுக்கே தெரியாது.

*1914, பிப்ரவரி-மே மாதங்களில்*
*எழுதப்பட்டது*

*1914, ஏப்ரல்-ஜூன் மாதங்களில்,*
*''ப்ரோஸ்வெஷ்சேனியே'', இதழ்கள் 4,5,6ல்*
*வெளியிடப்பட்டது*

*கையொப்பம்:வி. இல்யீன்*

*வி. இ. லெனின், நூல்திரட்டு,*
*5ம் பதிப்பு, தொகுதி 25,*
*பக்கங்கள் 255-320*

## குறிப்புகள்

[1] ''ப்ரோஸ்வெஷ்சேனியே'' (அறிவொளி) — ஒரு சட்ட பூர்வமான போல்ஷெவிக் சித்தாந்த மாதப் பத்திரிகை; டிசம்பர் 1911 முதல் ஜூன் 1914 வரை செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் வெளிவந்தது.

மாஸ்கோவில் வெளியான ''மீஸில்'' என்னும் போல் ஷெவிக் பத்திரிகையை ஜார் அரசாங்கம் நிறுத்தி விடவே, அதன் இடத்தில் வி. இ. லெனினது முன்முயற்சியால் இந்தப் பத்திரிகை தொடங்கப்பட்டது. லெனின் பாரிஸி லிருந்தும் பின்பு க்ராக்கவிலும் பொரோனினிலும் இருந் தும் ''ப்ரோஸ்வெஷ்சேனியே'' பத்திரிகையை வழிகாட்டி நடத்தினார், கட்டுரைகளைச் செப்பம் செய்தார், ஆசிரியக் குழுவினருடன் முறையான கடிதப்போக்குவரத்து வைத் துக்கொண்டிருந்தார். இப்பத்திரிகையில் லெனினுடைய பின்வரும் நூல்கள் வெளியாயின: ''மார்க்ஸீயத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறு களும்'', ''தேசீயப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்பு கள்'', ''தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமை'' முதலி யவை.

முதல் உலகப் போருக்குச் சிறிது முன்பு ''ப்ரோஸ்வேஷ் சேனியே'' பத்திரிகை அரசாங்கத்தின் உத்தரவின் படி மூடப்பட்டது. 1917 இலையுதிர்காலத்தில் அது மீண்டும் வெளிவரத் தொடங்கியது. ஆனால் ஒரே ஒரு இதழ்தான் வெளியாயிற்று. பக்கம் 7

[2] கலைப்புவாதிகள்—ருஷ்யாவில் 1905-07 புரட்சி தோற்ற பிறகு, ரு. சோ. டெ. தொ. கட்சியின் சந்தர்ப்பவாதப் பகுதியினரான மென்ஷெவிக்குகளிடையே பரவிய போக் கின் பிரதிநிதிகள்.

சட்டத்துக்குப் புறம்பான புரட்சிகரத் தொழிலாளர் கட்சியைக் கலைத்துவிட வேண்டுமென்று கலைப்புவாதிகள் கோரினர். ஜாரிஸத்துக்கெதிரான தங்களது புரட்சிகரப் போராட்டத்தை நிறுத்திவிடும்படி அவர்கள் தொழி லாளர்களைக் கேட்டுக் கொண்டனர். தொழிலாளி வர்க்கத்

தின் போராட்டக் கட்சிக்கு பதிலாக ஜாரிஸ அரசாங்கத்தினுல் அனுமதிக்கப்படும் சட்டபூர்வமான நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடும் சந்தர்ப்பவாத ஸ்தாபனம் ஒன்று நிறுவத் திட்டமிட்டார்கள். இக்கலைப்புவாதிகள் புரட்சியின் துரோகிகள் என்று லெனினும் போல்ஷெவிக்குகளும் விடாமல் அம்பலப்படுத்திஞர்கள். தொழிலாளர் மக்களிடம் கலைப்புவாதிகட்கு வெற்றிகிட்டவில்லை. ஜனவரி 1912ல் பிராகில் நடத்தப்பட்ட ரு. சோ. டெ. தொ. கட்சியின் மகாநாட்டில் கலைப்புவாதிகள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். பக்கம் 7

[3] ''பூந்த்''—(லித்துவேனியா, போலந்து, ருஷ்யா ஆகிய விடங்களில் ''அகில யூதத் தொழிலாளர் லீக்'')—1897ல் நிறுவப்பட்டது. ருஷ்யாவின் மேற்குப் பிராந்தியங்களில் வாழும் யூதக் கைத்தொழிலாளர்களின் அரைப்பாட்டாளிகளைப் பிரதானமாகக் கொண்டதொரு சங்கம் இது. ருஷ்யாவின் தொழிலாளர் இயக்கத்தில் தேசீயவாதத்தையும் பிரிவுவாதத்தையும் கொண்டுவந்தது ''பூந்த்''. 1917, அக்டோபரில் சோஷலிஸப் புரட்சி வெற்றி அடைந்த பின்னர் ''பூந்த்'' தலைவர்கள் பூர்ஷ்வா நிலப்பிரபுத்துவப் புரட்சி எதிர்ப்புக் குழுவுடன் சேர்ந்து சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராடிஞர்கள். மார்ச் 1921ல் ''பூந்த்'' தாஞகவே கலைந்துவிட்டது. பக்கம் 7

[4] 1903ம் ஆண்டின் ருஷ்யச் செயல்திட்டம் —1903ல் ருஷ்ய சோஷல்-டெமாகிரடிக் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட செயல்திட்டம்.

1896ம் ஆண்டில் நடந்த லண்டன் சர்வதேசக் காங்கிரஸ் — இரண்டாவது இன்டர்நேஷனலின் நான்காவது காங்கிரஸ். தேசீய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய இந்தக் காங்கிரஸின் தீர்மானங்கள் கீழே 64-71 பக்கங்களில் மேற்கோள் காட்டப்படுகின்றன. பக்கம் 8

[5] Die Neue Zeit(புதிய காலம்)—1883முதல்1923வரை ஸ்டுட்கார்ட்டில் வெளியான ஜெர்மன் சோஷல்-டெமாகிரட்டுச் சித்தாந்தச் சஞ்சிகை. 1917, அக்டோபர்வரை காவுத்ஸ்கியும், பின்னர் குனேவும் இதன் ஆசிரியர்களாக இருந்தனர். கார்ல் மார்க்ஸ், பிரீட்ரிஹ் எங்கெல்ஸ் இருவரதும் பல படைப்புக்கள் இதில் முதல்முதலில் வெளியாயின. அதன் ஆசிரியர்களுக்கு எங்கெல்ஸ் அடிக்கடி ஆலோசனைகள் கூறி, மார்க்ஸீயத்திலிருந்து அவர்கள் வழுவிய பொழுது கடுமையாகக் கண்டித்தார்.

1890-1900ன் இறுதிப்பகுதியில், எங்கெல்ஸின் மறைவுக்குப் பிறகு, திரிபுவாதக் கட்டுரைகளை இப்பத்திரிகை முறையாக வெளியிடத் தொடங்கியது. முதலாவது உலகப் போரின் (1914-18) பொழுது இப்பத்திரிகை ஒரு மத்திய நிலைப் போக்கை மேற்கொண்டு, சோஷல்-ஷோவினிஸ்டுகளை ஆதரித்தது. பக்கம் 10

6 ''நஷாச்ஞயா மீஸில்'' (விஞ்ஞானச் சிந்தனை)—மென்ஷெவிக் போக்குள்ள பத்திரிகை; 1908ம் ஆண்டு ரீகா நகரில் வெளியிடப்பட்டது. பக்கம் 10

7 ''கலாச்சார-தேசீயச் சுயநிர்வாகம்'' — தேசீயப் பிரச்சினையில் சந்தர்ப்பவாதச் செயல்திட்டம். சென்ற நூற்றாண்டின் 90க்களில் ஆஸ்திரிய சோஷல்-டெமாகிராட்டுக்களான ஓ. பௌவர், கா. ரென்னர் இருவராலும் முன்வைக்கப்பட்டது. தனிப்பிரிவது வரை சுயநிர்ணய உரிமை தேசீய இனங்களுக்கு உண்டு என்பதை இந்தச் செயல்திட்டம் நிராகரித்தது. இதன் சாராம்சம் வருமாறு: ஒரு நாட்டில் உள்ள ஒரே தேசீய இனத்தைச் சேர்ந்தவர்கள், நாட்டின் எந்தப் பகுதியில் அவர்கள் வாழ்ந்தாலும் சரியே, சுயநிர்வாக உரிமை கொண்ட தேசீய யூனியனாக அமைவார்கள். பள்ளிக்கூட விவகாரத்தையும் (வெவ்வேறு தேசீய இனத்தினரின் குழந்தைகளுக்குத் தனித் தனிப் பள்ளிகள்) பிற கல்வி, கலாச்சாரத் துறைகளையும் அரசு அதன் நிர்வாகத்தில் முழுமையாக ஒப்படைக்கும். இந்தச் செயல்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தால், ஒவ்வொரு தேசீய இனக் குழுவுக்கு உள்ளும் மதகுருமார், பிற்போக்குத் தேசீயக் கொள்கைவாதம், இவற்றின் செல்வாக்கு வலுப்பட அது வகை செய்திருக்கும்; தேசீய இன அடையாளப்படி தொழிலாளிகளின் பிரிவுபாட்டைத் தீவிரப்படுத்தி, தொழிலாளி வர்க்கத்தின் ஒழுங்கமைப்பைக் கடினம் ஆக்கியிருக்கும். ருஷ்யாவில் கலைப்புவாதிகளும் பூந்த்காரர்களும் ஜார்ஜிய மென்ஷெவிக்குகளுமே கலாச்சார-தேசீயச் சுயநிர்வாகம் என்ற கோஷத்தை ஆதரித்தனர். கலாச்சார- தேசீயச் சுயநிர்வாகம் என்னும் கோஷத்தை லெனின் பல கட்டுரைகளில் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்கினார். ''உள்ளும் புறமும் பூர்ஷ்வாத்தன்மை கொண்ட, உள்ளும் புறமும் பொய்யான'' கருத்தே அதன் அடிப்படையாக விளங்குகிறது என்றும் ''தனிப்பட்ட அரசாங்க நிறுவனத்தின் வாயிலாக எல்லா தேசீய இனங்களையும் வலுவாகவும் நிலையாகவும் ஒன்றிலிருந்து ஒன்று வேறு பிரித்துவிடுவதே அந்தக் கருத்து'' என்றும் லெனின் சுட்டிக்காட்டினார். பக்கம் 11

8 "Przegląd Socjaldemokratyczny" (''சோஷல்-டெமாகிரடிக் ரெவியூ'')—போலிஷ் சோஷல்-டெமாகிராட்டுகளால் ரோஸா லுக்ஸம்பர்கின் நெருங்கிய ஒத்துழைப்புடன் கிராக்கோவில் 1902 முதல் 1904 வரையும், 1908 முதல் 1910 வரையும் பதிப்பிக்கப்பட்ட ஒரு பத்திரிகை.
பக்கம் 12

9 பார்க்க: கார்ல் மார்க்ஸ் ''மூலதனம்'', தொகுதி 1(கார்ல் மார்க்ஸ், பிரீட்ரிஹ் எங்கெல்ஸ் நூல்திரட்டு, இரண்டாம் பதிப்பு, தொகுதி 23, பக்கம் 774). பக்கம் 13

10 ''ரூஸ்காயா மீஸில்'' (ருஷ்யச் சிந்தனை) —1880 முதல் 1918 வரை மாஸ்கோவில் வெளியான ஒரு இலக்கிய-அரசியல் மாதப் பத்திரிகை. 1905க்கு முன்பு மிதவாத-நரோதிஸப் போக்கு கொண்டிருந்தது. 1905புரட்சிக்குப் பிறகு இது காடெட் கட்சியின் வலதுசாரிப் பிரிவின் பத்திரிகையாயிற்று. ஸ்துரூவே இதன் ஆசிரியராக இருந்தார். தேசீயவாதத்தையும் பாதிரிகள் தலைமையையும் இது பிரசாரம் செய்தது. நிலப்பிரபுக்களின் சொத்துரிமையை ஆதரித்தது.
பக்கம் 23

11 புரூன் காங்கிரஸ் — 1899ம் ஆண்டு செப்டெம்பர் 24 முதல் 29 வரை ஆஸ்திரியாவின் புரூன் நகரில் நடைபெற்ற ஆஸ்திரிய சோஷல்-டெமாக்ரடிக் கட்சிக் காங்கிரஸ் இவ்வாறு குறிக்கப்படுகிறது. காங்கிரஸின் நிகழ்ச்சி நிரலில் மையப் பிரச்சினையாக விளங்கியது தேசீய இனங்கள் பற்றிய பிரச்சினை. வெவ்வேறு நோக்கு நிலைகளை வெளியிட்ட இரண்டு தீர்மானங்கள் காங்கிரஸில் பிரேரிக்கப்பட்டன: 1) கட்சியின் மத்தியக் கமிட்டியின் தீர்மானம் மொத்தத்தில் தேசீய இனங்களின் பிரதேசச் சுயநிர்வாகத்தை ஆதரித்தது; 2) தெற்கு ஸ்லாவிய சோஷல்-டெமாக்ரடிக் கட்சிக் கமிட்டியின் தீர்மானம் பிரதேச வரம்பு கடந்த கலாச்சார-தேசீய சுயநிர்வாகத்தை ஆதரித்தது.
கலாச்சார-தேசீய சுயநிர்வாகச் செயல்திட்டத்தைக் காங்கிரஸ் ஒருமனதாக நிராகரித்துவிட்டது. ஆஸ்திரிய அரசின் எல்லைகளுக்குள் தேசீய நிர்வாகத்தை அங்கீகரிக்கும் சமரசத் தீர்மானத்தை அது ஏற்றுகொண்டது.
பக்கம் 28

12 கறுப்பு நூற்றுவர்—கறுப்பு நூற்றுவர்கள் என்பவர்கள் முடியாட்சியை ஆதரிக்கும் கும்பல்கள்; புரட்சி இயக்கத்துக்கு எதிராகப் போராடுவதற்காக ஜாரிஸப் போலீஸினால்

இவைகள் அமைக்கப்பட்டன. இவர்கள் புரட்சிக்காரர்களைக் கொன்றனர், முற்போக்கு அறிவாளிகளைத் தாக்கினர், யூதக் கொலைகாரக் கலகங்களை நடத்தினர்.
பக்கம் 35

13 **ஐக்கியப் பிரபுக்களின் கவுன்சில்** — நிலச்சுவான்தார்களின் புரட்சி எதிர்ப்புச் சங்கம்; மே 1906ல் நிறுவப்பட்டது. ஐக்கியப் பிரபுக்களின் கவுன்சில் ஜார் அரசாங்கத்தின் கொள்கைமீது பெருத்த செல்வாக்கு செலுத்தியது.
பக்கம் 39

14 **ஜூன் மூன்றும் நாள்**—ஜூன் 3 (16), 1907ல் அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்ட பிற்போக்கான திடீர் மாற்றம்; இதன்மூலம் இரண்டாவது தூமாவை அரசாங்கம் கலைத்து, தூமாவுக்கான தேர்தல் சட்டத்தைத் திருத்தியது. அப்புதிய தேர்தல் சட்டத்தின்படி நிலச்சுவான்தார்கள், வியாபாரிகளும் தொழிலதிபர்களுமான பூர்ஷ்வாக்கள் ஆகியோரின் பிரதிநிதித்துவம் பெரிதும் அதிகரித்தது; ஏற்கெனவே சிறியதாயிருந்த விவசாயிகள், தொழிலாளிகளின் பிரதிநிதித்துவம் மேலும் குறைக்கப்பட்டது. ருஷ்யாவின் ஆசியப் பகுதி மக்களில் பெரும் பகுதியினரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது; போலந்து, காக்கஸஸ் பிரதிநிதிகளின் எண்ணிக்கை பாதியாக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாவது தூமா நவம்பர் 1907ல் முதல் தடவை கூடியது; அதில் கறுப்பு நூற்றுவர்களும் காடெட்டுகளும் நிறைந்திருந்தனர்.

ஜூன் மூன்றும் நாள் திடீர் மாற்றமானது ஸ்தொலீப்பின் பிற்போக்குக் காலம் என்றும், ''ஜூன் மூன்றும் நாள் ஆட்சி'' என்றும் அழைக்கப்படும் காலகட்டத்தைத் தொடங்கியது.
பக்கம் 40

15 **அக்டோபர்காரர்கள்** — ''அக்டோபர் 17ம் நாள் ஐக்கியம்'' என்ற கட்சியின் உறுப்பினர்கள். 1905, அக்டோபர் 17ந் தேதி ஜார் மன்னரின் அறிக்கை வெளியான பிறகு அது ருஷ்யாவில் உருவாகியது. புரட்சியால் அரண்டு போன ஜார் மன்னர் ''குடிமைச் சுதந்திரங்களும்'' அரசியல் அமைப்புச் சட்டமும் வழங்குவதாக இதில் மக்களுக்கு வாக்களித்தார். பெரிய தொழில் பூர்ஷ்வாக்கள், முதலாளித்துவ முறையில் தங்களது பண்ணைகளை நடத்திய பெரும் நிலச்சுவான்தார்கள் ஆகியோர் அடங்கியதொரு புரட்சி எதிர்ப்புக் கட்சி இது. அக்டோபர்காரர்களின் தலைவர்கள் பெருந் தொழிலதிபர் அ. குச்கோவும், மாபெரும் பண்ணைக்காரரான மி. ரொத்ஸ்யான்கோவும்.

அக்டோபர்காரர்கள் ஜாரிஸ அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிவிவகாரக் கொள்கைகளை நிபந்தனையின்றி ஆதரித்தனர்.

பக்கம் 40

16 முற்போக்குக்காரர்கள் —ருஷ்ய மிதவாத - முடியரசுவாத பூர்ஷ்வாக்களின் அரசியல் குழு. அரசாங்க தூமாவுக்கான தேர்தல்களிலும் அரசாங்க தூமாவிலும் இந்தக் குழு ''கட்சிச்சார்பு இன்மை'' என்ற கொடியின் கீழ் பல்வேறு பூர்ஷ்வா-நிலச்சொந்தக்காரர்கள் கட்சிகளையும் குழுக்களையும் சேர்ந்த பகுதியினரை ஒன்றிணைக்க முயன்றது.

1912 நவம்பரில் முற்போக்குக்காரர்கள் சுதந்திரமான அரசியல் கட்சியாக அமைந்தார்கள். தங்கள் கட்சி உறுப்பினர்களின்படியும் கொள்கைவாதப்படியும் முற்போக்குக் காரர்கள் ''அக்டோபர்காரர்களும் காடெட்டுக்களும் சேர்ந்த கலவை'' என்று வி. இ. லெனின் சுட்டிக் காட்டினார். மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு முற்போக்குக்காரர்களின் கட்சி சோவியத் ஆட்சியை எதிர்த்துத் தீவிரப் போராட்டம் நடத்தியது.

பக்கம் 40

காடெட்டுகள் — கான்ஸ்டிட்யூஷனல்-டெமாகிரடிக் கட்சியின் உறுப்பினர்கள்; அக்டோபர் 1905ல் நிறுவப்பட்ட அது ருஷ்ய மிதவாத-முடியாட்சிவாத பூர்ஷ்வாக்களின் பிரதான கட்சியாக இருந்தது.உழைக்கும் மக்களை ஏமாற்றுவதற்காக ''மக்கள் சுதந்திரக் கட்சி'' என்று தங்களுக்குப் பகட்டுப் பெயரிட்டுக் கொண்ட அவர்கள் உண்மையில் சட்டரீதியான முடியாட்சியைக் கோருவதற்கு மேல் செல்லவில்லை. முதல் உலகப் போர் நிகழ்ந்த ஆண்டுகளில் ஜார் அரசாங்கத்தின் கட்டாய நாடுபிடிப்பு கொண்ட வெளிநாட்டுக் கொள்கையைக் காடெட்டுகள் தீவிரமாக ஆதரித்தார்கள். 1917ம் ஆண்டு பிப்ரவரியில் நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக் காலத்தில் அவர்கள் முடியரசைக் காக்க முயற்சி செய்தார்கள். பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தில் தலைமை நிலை வகித்துகொண்டு மக்கள் விரோத புரட்சி எதிர்ப்புக் கொள்கையை நடத்தினர். அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு காடெட்டுகள் சோவியத் ஆட்சியின் சமரசப்பட முடியாத பகைவர்களாகச் செயல் புரிந்தார்கள். எல்லா ஆயுதந்தாங்கிய புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் தலையீட்டாளர்களின் படையெடுப்புக்களிலும் அவர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

பக்கம் 40

17 ''பிராவ்தா'' (உண்மை)—செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் பதிப்பிக்கப்பட்ட போல்ஷெவிக் கட்சியின் சட்டபூர்வ மான தினசரி செய்தித்தாள். 1912ல், ஏப்ரல் 22 (மே 5) லிருந்து வெளிவந்தது.

லெனின் ''பிராவ்தாவைச்'' சித்தாந்த ரீதியில் வழி காட்டி நடத்தினார்; நாள்தோறும் அதற்கு எழுதினார்; அதன் ஆசிரியர் குழுவுக்கு உத்தரவுகளை அனுப்பினார். செய்தித்தாள் போர் ஊக்கமும் புரட்சி உணர்வும் கொண்டு இயங்கும்படி செய்ய லெனின் பாடுபட்டார். கோட்பாடு ரீதியான பிரச்சினைகளில் போதிய தெளிவு அற்ற கட்டுரை களை வெளியிட்டதற்காக ஆசிரியக் குழுவை விமர்சித்தார்.

போலீஸ் சதா ''பிராவ்தாவைத்'' தொந்தரவு செய் தது. முதல் இதழ் வெளியான இரண்டு ஆண்டுகளுக்குச் சற்று அதிகமான காலத்தில் ''பிராவ்தாவை'' ஜாரிஸ அரசாங்கம் எட்டு முறை மூடியது; ஆனால் அது ''ரபோச் சாயா பிராவ்தா'' (தொழிலாளர் பிராவ்தா), ''புரோலித் தார்ஸ்கயா பிராவ்தா'' (பாட்டாளி பிராவ்தா), ''பூத் பிராவ்தி'' (உண்மையின் வழி) முதலிய வேறு பெயர் களில் மீண்டும் மீண்டும் வெளிவந்தது: 1914 ஜூலை 8 (21)ல், இப்பத்திரிகை மூடப்பட்டது.

பிப்ரவரி பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு தான் அது மீண்டும் வெளிவந்தது. 1917, மார்ச் 5 (18) லிருந்து ரு. சோ. டெ. தொ. கட்சியின் மத்தியக் கமிட்டி, பீட்டர்ஸ்பர்க் கமிட்டி ஆகியவற்றின் அதிகாரபூர்வ மான மத்தியப் பத்திரிகையாக''பிராவ்தா''வெளிவந்தது. ஏப்ரல் 5 (18)ல் தான் வெளிநாட்டிலிருந்து திரும்பிய போது லெனின் ''பிராவ்தாவின்'' ஆசிரியர் குழுவில் சேர்ந்து, தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1917 ஜூலை-அக்டோபரில் ''பிராவ்தா'' எதிர்ப்புரட்சி, பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தினால் தொல்லைக்குள் ளாக்கப்பட்டது; எனவே அது பெயரை அடிக்கடி மாற்றி, ''லிஸ்தோக் 'பிராவ்தி' '' (பிராவ்தா செய்தித்தாள்), ''புரோலித்தாரிய்'' (பாட்டாளி), ''ரபோச்சிய்'' (தொழி லாளர்), ''ரபோச்சிய் பூத்'' (தொழிலாளர் வழி) என்ற பெயர்களில் வெளிவந்தது. மாபெரும் அக்டோபர் சோஷ லிஸப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு 1917, அக்டோபர் 27 (நவம்பர் 9) லிருந்து கட்சியின் மத்தியப் பத்திரிகை ''பிராவ்தா'' என்ற தனது பழைய பெயரிலேயே வெளி வருகிறது. பக்கம் 40

18 ''ரேச்'' (பேச்சு)—காடெட் கட்சியின் மத்தியப் பத்திரி கை, 1906 பிப்ரவரி 23 (மார்ச் 8) முதல் செயின்ட்

பீட்டர்ஸ்பர்க்கில் நாள்தோறும் வெளிவந்தது. 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8)ல் பெட்ரோகிராட் சோவியத்தின் புரட்சிகர-ராணுவக் கமிட்டியால் மூடப்பட்டது; வேறு பெயர்களில் 1918, ஆகஸ்ட் வரை அது வெளியிடப்பட்டது. பக்கம் 40

19 இங்கே குறிக்கப்படுவது, 1913 ஜூன் 19 முதல் 22வரை (ஜூலை 2 முதல் 5 வரை) ல்வோவ் நகரில் நடைபெற்ற இரண்டாவது அகில உக்ரேனிய மாணவர் காங்கிரஸ். மாபெரும் உக்ரேனிய எழுத்தாளரும் விஞ்ஞானியும், சமூகத் தலைவரும் புரட்சிகர ஜனநாயகவாதியும் ஆன இவான் பிரான்கோவின் பிறந்த நாள் விழா அன்று இந்தக் காங்கிரஸ் கூடியது. ருஷ்யாவின் உக்ரேனிய மாணவர் பிரதிநிதிகளும் காங்கிரஸ் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். ''உக்ரேனிய இளைஞரும் தேசீய இனங்களின் தற்போதைய நிலைமையும்'' என்னும் பொருள் பற்றி உக்ரேனிய சோஷல்-டெமாகிராட் தன்த்ஸோவ் காங்கிரஸில் உரையாற்றினார். ''சுதந்திர'' உக்ரேய்னு என்ற கோஷத்தை அவர் ஆதரித்தார். பக்கம் 41

20 ''ஷ்லியாஹி'' (பாதைகள்)—உக்ரேனிய மாணவர் ஐக்கியத்தின் பத்திரிகை, தேசீயவாதப் போக்குடையது. ஏப்ரல் 1913 முதல் மார்ச் 1914 வரை ல்வோவில் வெளியாயிற்று. பக்கம் 41

21 ''நோவொயே வ்ரேம்யா'' (புதிய காலம்)—1868 முதல் அக்டோபர் 1917 வரை செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வெளியான தினசரிச் செய்தித்தாள். வெவ்வேறு பதிப்பாளர்களுக்குச் சொந்தமாகிருந்தது, தன் அரசியல் போக்கை அடிக்கடி மாற்றிக்கொண்டது. மட்டான மிதவாதப் பத்திரிகையாகத் தொடங்கியது; ஆனல் 1876க்குப் பிறகு பிற்போக்குவாத நிலப்பிரபுக்கள், அதிகாரவர்க்கத்தினர் ஆகியோரின் பத்திரிகையாக மாறிவிட்டது. 1905லிருந்து கறுப்பு நூற்றுவர்களின் பத்திரிகை. 1917, பிப்ரவரியில் நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு இந்தப் பத்திரிகை பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தின் புரட்சி எதிர்ப்புக் கொள்கையை ஆதரித்தது, போல்ஷெவிக்குகளை வெறியுடன் தாக்கியது. பெத்ரோகிராத் சோவியத்தின் இராணுவ-புரட்சிக் கமிட்டியால் 1917, அக்டோபர் 26 (நவம்பர் 8)ந் தேதி மூடப்பட்டது. பக்கம் 45

22 ''ஸேம்ஷ்சினு'' (நில விவகாரங்கள்) கறுப்பு நூற்றுவர் தினசரித்தாள்; அரசாங்க தூமாவின் தீவிர வலது சாரிப்

பிரதிநிதிகளின் பத்திரிகை; ஜூன் 1909 முதல் பிப்ரவரி 1917 வரை செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வெளிவந்தது. பக்கம் 45

23 ''பிடி அவர்களை! விட்டுவிடாதே அவர்களை''—போலீ ஸின் யதேச்சாதிகாரத்தைக் காட்டும் வார்த்தைகள்; கிளேப் உஸ்பேன்ஸ்கியின் ''காவல்நிலை'' என்ற கதை யிலிருந்து எடுத்தாளப்படுகிறது. பக்கம் 45

24 ''கியெவ்ஸ்க்காயா மீஸில்'' (கியெவ் சிந்தனை) — ஒரு பூர்ஷ்வா-டெமாகிரடிக் தினப் பத்திரிகை; 1906லிருந்து 1918 வரை கியெவில் வெளியிடப்பட்டது. பக்கம் 47

25 அ. ஸெ. க்ரிபயேதவின் இன்பியல் நாடகமான ''அறி வால் விளைந்த அல்லல்'' என்பதிலிருந்து எடுக்கப்பட்ட சொற்கள். பக்கம் 52

26 ''நப்ஷூத்'' "Naprzód" (முன்னேக்கி) — காலீஷியாவிலும் ஸிலேஷியாவிலும் போலிஷ் சோஷல்-டெமாகிரடிக் கட்சியின் மத்தியப் பத்திரிகை; க்ராக்கோவில் 1892ல் பதிப்பிக்கப்பட்டது. குட்டிபூர்ஷ்வா தேசீயவாதக் கொள் கைவாதத்தை வெளியிட்டது இந்தப் பத்திரிகை. ''நப் ஷூத்'' மிக மோசமான, மார்க்ஸீயத் தன்மை அறவே இல்லாத பத்திரிகை என்று லெனின் கூறினர்.
பக்கம் 55

27 1861ம் ஆண்டு ருஷ்யாவில் பண்ணையடிமை முறை ரத்து செய்யப்பட்டது இங்கே குறிக்கப்படுகிறது. பக்கம் 68

28 க்ராக்கோவுக்கு அருகில் பொரோனினில் 1913ஆண்டு செப்டம்பர் 23 முதல் அக்டோபர் 1 வரை(அக்டோபர் 6-14) நடைபெற்ற, கட்சி ஊழியர்களுடன் ரு. சோ. டெ. தொ. கட்சி மத்தியக் கமிட்டியின் ஆலோசனைக் கூட்டத்தை லெனின் இங்கு குறிப்பிடுகிறார்; இரகசியம் காரண மாக அது ''ஆகஸ்டு'' (''கோடை'') ஆலோசனைக்கூட்டம் என்றழைக்கப்பட்டது. பக்கம் 70

29 வி. லீப்க்னெஹ்ட் எழுதிய மார்க்ஸைப் பற்றிய நினைவுக் குறிப்புகளை இங்கு லெனின் குறிப்பிடுகிறார். பக்கம் 72

30 பெனியனீஸம்— (பெனி என்ற சொல்லிலிருந்து). பெனி —அயர்லாந்தின் புரட்சி இரகசியமான ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள். அயர்லாந்தின்மீது ஆங்கில ஆதிக்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் 1867ல் இந்த ஸ்தாபனம் கிளர்ச்சியைத் தூண்டி நடத்தியது. பக்கம் 75

31 "நியூயார்க் டிரிபியூன்" ("The New York Daily Tribune") 1841 முதல் 1924 வரை வெளிவந்த அமெரிக்கச் செய்தித் தாள். 1850க்களின் நடு வரை இது அமெரிக்க "விக்கு"களின் இடதுசாரிக்குரிய பத்திரிகையாக இருந்தது. 1851 ஆகஸ்டு முதல் 1862 மார்ச் வரை கார்ல் மார்க்ஸ் இந்தச் செய்தித்தாளில் உடனுழைத்தார். கார்ல் மார்க்ஸின் வேண்டுகோளுக்கு இணங்க பிரீட்ரிஹ் எங்கெல்ஸ் இந்தச் செய்தித்தாளுக்காக நிறையக் கட்டுரைகள் எழுதினர்.
பக்கம் 79

32 1903ல் நடந்த ருஷ்ய சோஷல்-டெமாகிரடிக் தொழிலாளர் கட்சியின் 2வது காங்கிரஸில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிச் செயல்திட்டம் இங்கே குறிக்கப்படுகிறது.
பக்கம் 83

33 "ருஷ்ய சோஷல்-டெமாகிரடிக் கட்சியின் செயல்திட்ட வாசகம்" என்ற பிளெஹானவின் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது; அக்கட்டுரை 1902ல் "ஸர்யா" இதழ் 4ல் அச்சிடப்பட்டது.

"ஸர்யா" (உதயம்)—ஒரு மார்க்ஸீய விஞ்ஞான, அரசியல் பத்திரிகை; "இஸ்க்ரா" ஆசிரியர் குழுவினுல் 1901, 1902ல் ஷ்டூட்கார்ட்டில் சட்டபூர்வமாக வெளியிடப்பட்டது. மூன்று வெளியீடுகளில் மொத்தம் நான்கு இதழ்கள் வெளிவந்தன.

"ஸர்யா" சர்வதேச, ருஷ்யத் திரிபுவாதத்தைத் தாக்கி விமர்சித்தது, மார்க்ஸீயத்தின் சித்தாந்த அடிப்படைகளை ஆதரித்துக் காத்தது.
பக்கம் 84

34 பொருளாதாரவாதம் — பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றுண்டின் துவக்கத்திலும் ருஷ்ய சோஷல் - டெமாகிரஸியில் காணப்பட்ட ஒரு சந்தர்ப்பவாதப் போக்கு; ஜாரிஸத்துக்கு எதிராக அரசியல் போராட்டத்தை முதன்மையாக மிதவாத பூர்ஷ்வாக்களே நடத்த வேண்டும் என்றும், தொழிலாளர்களோ, வேலை நிலைமைகளில் மேம்பாடு, சம்பள உயர்வு முதலியவற்றுக்காகப் பொருளாதாரப் போராட்டம் நடத்துவதுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் "பொருளாதாரவாதிகள்" கருதினர்கள். தொழிலாளர் இயக்கத்தில் கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும் புரட்சிகரச் சித்தாந்தத்தின் முக்கியத்துவத்தையும் "பொருளாதாரவாதிகள்" மறுத்தார்கள். தொழிலாளர் இயக்கம் ஒழுங்கமைப்பற்ற இயற்கை வழியில் மட்டுமே வளர்ச்சி அடைய வேண்டும் என்று

அவர்கள் வலிந்துரைத்தார்கள். ''என்ன செய்வது?'' என்னும் தமது நூலில் வி. இ. லெனின் ''பொருளாதார வாதத்தை'' மிகக் கடுமையாக விமர்சித்தார்.
பக்கம் 89

35 ''இஸ்க்ரா'' (தீப்பொறி)—சட்டவிரோதமான முதல் அகில ருஷ்ய மார்க்ஸீயச் செய்தித்தாள். 1900ல் லெனினால் நிறுவப்பட்டது. ருஷ்யாவின் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர மார்க்ஸீயக் கட்சியை நிறுவுவதில் நிர்ணயகரமான பங்கு ஆற்றியது.

லெனினுடைய முன்முயற்சியினாலும் அவரது நேரடிப் பணிமூலமும் ''இஸ்க்ராவின்'' ஆசிரியர் குழுவானது கட்சிக்காக ஒரு செயல்திட்ட மசோதாவை வரைந்து (''இஸ்க்ரா'' 21ம் இதழில் வெளியிடப்பட்டது), ரு. சோ. டெ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்கு (1903) ஏற்பாடு செய்தது.

காங்கிரஸ் கூடுவதற்குள் ருஷ்யாவின் பெரும்பாலான ஸ்தல சோஷல்-டெமாகிரடிக் ஸ்தாபனங்கள் ''இஸ்க்ராவுடன்'' சேர்ந்து கொண்டன, அதன் செயல்தந்திரம், செயல்திட்டம், ஸ்தாபன அமைப்புத்திட்டம் ஆகியவற்றை அங்கீகரித்து, அதைத் தங்கள் தலைமை உறுப்பாக ஏற்றுக்கொண்டன.

கட்சிக்கான போராட்டத்தில் ''இஸ்க்ரா'' ஆற்றிய சிறந்த பணியைக் குறிப்பிட்டு ரு. சோ. டெ. தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் ஒரு தனித் தீர்மானத்தை நிறைவேற்றியது. அதுதான் ரு. சோ. டெ. தொ. கட்சியின் மத்தியப் பத்திரிகை என்று அக்காங்கிரஸ் அறிவித்தது.

இரண்டாவது காங்கிரஸுக்குப் பிறகு, மென்ஷெவிக்குகள் பிளெஹானவின் உதவியுடன் ''இஸ்க்ராவைப்'' பிடித்துக்கொண்டனர்.
பக்கம் 89

36 ''போர்பா'' (போராட்டம்) — பிப்ரவரி-ஜூலை 1914ல் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வெளியான த்ரோத்ஸ்கியின் பத்திரிகை. ''எக்கோஷ்டியையும் சேராதவர்'' என்ற முகமூடியை அணிந்துகொண்டு த்ரோத்ஸ்கிய் இப்பத்திரிகையில் லெனினுக்கு எதிராகவும் போல்ஷெவிக் கட்சிக்கு எதிராகவும் தொடர்ச்சியாக எழுதினர். பக்கம் 91

37 ருஷ்ய நையாண்டி எழுத்தாளரான நி. ஸால்த்திக்கோவ்--ஷெத்ரீனின் ''அயல்நாட்டில்'' என்ற கட்டுரைகளிலிருந்து இச்சொற்கள் எடுக்கப்பட்டன. பக்கம் 93

38 **புர்ஸாக்குகள்**—மத உயர்கல்வி நிலையங்களின் மாணவர்கள். இவர்கள் மாணவர் விடுதிகளில் (புர்ஸாக்களில்) வசித்தார்கள். கடுமையான சட்டதிட்டங்களும், அடி உதைத் தண்டனைகளும் முரட்டுத்தனமான பழக்கங்களும் நிலவிய இவ்விடுதிகளின் வாழ்க்கை முறை ருஷ்ய எழுத்தாளர் நி. கெ. பொம்யாலோவ்ஸ்க்கியால் ''புர்ஸா பற்றிய கட்டுரைகளில்'' விவரிக்கப்பட்டிருக்கிறது. பக்கம் 93

39 **''த்ஸ்வின்''** (மணி)—ஒரு சட்டபூர்வமான, தேசீயவாத மாதப் பத்திரிகை; மென்ஷெவிஸப் போக்குடையது. இது உக்ரேனிய மொழியில் கீயெவ் நகரில் ஜனவரி 1913 முதல் 1914ன் நடுப்பகுதிவரை வெளியிடப்பட்டது.
பக்கம் 94

40 **''நோவயா ரபோச்சாயா கஸேட்டா''** (புதிய தொழிலாளர் செய்தித்தாள்)—ஆகஸ்ட் 1913 லிருந்து மென்ஷெவிக்-கலைப்புவாதிகளால் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் பதிப்பிக்கப்பட்ட சட்டபூர்வமான தினசரி செய்தித்தாள். அதற்கு பதிலாக 1914 ஜனவரி 30 (பிப்ரவரி 12) முதல் ''ஸேவெர்னுயா ரபோச்சாயா கஸேட்டா'' (வடக்குத் தொழிலாளர் செய்தித்தாள்) என்பதும் அப்புறம் ''நாஷா ரபோச்சாயா கஸேட்டா'' (நம் தொழிலாளர் செய்தித்தாள்) என்பதும் வெளிவந்தன. ''புதிய கலைப்புவாதிகளின் கஸேட்டா'' என்று லெனின் இதை அடிக்கடி குறிப்பிடுவார். பக்கம் 96

41 இச்சொற்கள் செவஸ்தோபோல் சிப்பாய்களின் பாடலிலிருந்து எடுக்கப்பட்டவை. கிரீமியாப் போரின் பொழுது ஆகஸ்ட் 4, 1855ல் சொர்னுயா நதிக்கரையில் ருஷ்யத் துருப்புக்கள் நடத்திய வெற்றியற்ற ஒரு போர் நடவடிக்கையைப் பற்றியது அப்பாடல்; இந்த நடவடிக்கையில் ஜெனரல் ரெஆத் இரண்டு டிவிஷன்களைத் தலைமை வகித்து நடத்தினர். பாடலின் ஆசிரியர் லெவ் தல்ஸ்த்தோய்.
பக்கம் 97

42 **உழைப்பாளி மக்கள் சோஷலிஸ்ட் கட்சி** சோஷலிஸ்ட் புரட்சிவாதிகள் கட்சியின் வலதுசாரியிலிருந்து 1906ம் ஆண்டில் தனியாகப் பிரிந்தது. அதன் உறுப்பினர்கள் காடெட்டுகளுடன் கூட்டு இணைவதை ஆதரித்தார்கள். லெனின் இவர்களை ''சோஷல்-காடெட்டுகள்'' என்றும் ''பிலிஸ்டைன் சந்தர்ப்பவாதிகள்'' என்றும் காடெட்டுகளுக்கும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளுக்கும் இடையே ஊசலாடும் ''சோஷலிஸ்ட்-புரட்சிவாதி மென்ஷெவிக்குகள்'' என்றும்

அழைத்தார். இந்தக் கட்சி ''காடெட்டுகளிலிருந்து மிகச் சிறிதே வேருனது, ஏனெனில் தனது செயல்திட்டத்திலிருந்து குடியரசையும் எல்லா நிலமும் பற்றிய கோரிக்கையையும் இது நீக்கிவிடுகிறது'' என வலியுறுத்திஞர் லெனின். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு மக்கள் சோஷலிஸ்டுகள் புரட்சி எதிர்ப்புச் சதிகளிலும் சோவியத் ஆட்சிக்கு எதிரான ஆயுதக் கலகங்களிலும் பங்கு கொண்டார்கள். பக்கம் 100

43 ''ரூஸ்கோயே பகாத்ஸ்த்வோ'' (ருஷ்யச் செல்வம்)— 1876 முதல் 1918 வரை செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் வெளியிடப்பட்ட ஒரு மாத இதழ். 1890 முதல் அது மிதவாத நரோத்னிக்குகளின் பத்திரிகையாயிருந்தது. 1906 லிருந்து அது அரைக் காடெட்டுத் தன்மை கொண்ட மக்கள் சோஷலிஸ்ட் கட்சியின் பத்திரிகையாயிற்று. பக்கம் 100

44 ''ஸைட்'' (காலம்)—''பூந்தின்'' வெளியீடான வாரப் பத்திரிகை; 20 டிசம்பர் 1912 (2 ஜனவரி 1913) முதல் 5 (18) மே 1914 வரை யூத மொழியில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் பதிப்பிக்கப்பட்டது. பக்கம் 103

# பெயர்க் குறிப்பு அகராதி

Madras

எங்கெல்ஸ் பிரீட்ரிஹ் (Engels) *(1820-1895) பக்கங்கள் 19, 68,72,73,76,77,82*

கஸ்த்ரோவ் (ஜொர்தானியா, நொய் நிக்கொலாயெவிச் (Kostrov) *(1870-1953)— சோஷல்-டெமாகிராட்டு. காக்கேஷிய மென்ஷெவிக்குகளின் தலைவர்களில் ஒருவர். 1918 முதல் 1921 வரை ஜார்ஜியாவின் புரட்சி எதிர்ப்பு மென்ஷெவிக் அரசாங்கத்தின் தலைவராய் இருந்தார். 1921க்குப் பிறகு நாடு கடந்து வசிக்கலானார். பக்கம் 87*

காரிபால்டி ஜுஸெப்பே (Garibaldi) *(1807-1882)—இத்தாலியின் தேசீய வீரர். இத்தாலியப் புரட்சிகர ஜனநாயகத்தின் பெருந் தலைவர்களில் ஒருவர், பிரபல தளகர்த்தர். 1848-1867ஆண்டுகளில், நாட்டை அடிமைப்படுத்தியிருந்த வெளிநாட்டாருக்கும், நிலப்பிரபுத்துவ - எதேச்சாதிகார அமைப்புக்கும், மதகுருமாரின் பிற்போக்குக்கும் எதிராக, இத்தாலியின் ஐக்கியத்தின் பொருட்டு இத்தாலிய மக்கள் நடத்திய போராட்டத்துக்குத் தலைமை தாங்கினார். பக்கம் 74*

காவுத்ஸ்கி கார்ல் (Kautsky) *(1854-1938)—ஜெர்மன் சோஷல்-டெமாகிரஸி, இரண்டாவது இன்டர்நேஷனல் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். தொடக்கத்தில் மார்க்ஸீயவாதி, பின்னர் மார்க்ஸீயத்திலிருந்து கட்சி மாறியவர். சந்தர்ப்பவாதத்தின் மிக அபாயகரமான, மிகத்தீயவகைகளில் ஒன்றான நடுநிலைப் போக்கின் (சர்வதேசீயவாதச் சொற்றொடர்களால் மூடி மறைக்கப்பட்ட சோஷல்-ஷோவினிஸத்தின்) கொள்கைவாதி.*"Die Neue Zeit" *(புதிய காலம்) என்னும் ஜெர்மன் சோஷல்-டெமாகிராட்டுச் சித்தாந்தச் சஞ்சிகையின் பதிப்பாசிரியர். பக்கங்கள் 11, 12,13,15,34,38,67*

கிளாட்ஸ்டன் வில்லியம் எவார்ட் (Gladstone) *(1809-1898)— பிரிட்டிஷ் அரசியல்வாதி, ராஜதந்திரி, மிதவாதக் கட்சித் தலைவர். பல அமைச்சரவைகளில் மந்திரி பதவி வகித்தார்.*

1868-1874, 1880-1885, 1886, 1892-1894ஆண்டுகளில் முதல் அமைச்சர். குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களேயும் தொழிலாளி வர்க்கத்தின் உச்ச மட்டத்தினரையும் மித வாதிகளின் தரப்பில் கவர்ந்து இழுக்கும் பொருட்டுச் சமுதாய மேடைப் பேச்சுத் திறனேயும் அரைகுறைச் சீர்திருத்தங்களேயும் (1884ம் ஆண்டின் தேர்தல் சீர்திருத்தம் முதலியவற்றையும்) சாதனங்களாகப் பயன்படுத்தியவர். நாடு பிடிக்கும் காலனியாதிக்கக் கொள்கையைக் கடைப் பிடித்தார். பக்கம் 78

கொஸோவ்ஸ்க்கிய் வ. (Kosovsky) (லெவின்ஸோன் மி. யா.) (1870-1941)— ''பூந்த்'' ஸ்தாபனத்தின் தலைவர்களில் ஒருவர். ரு. சோ. டெ. தொ. கட்சியின் 2 வது காங்கிரஸில் (1903) ''பூந்தின்'' வெளிநாட்டுக் கமிட்டிப் பிரதிநிதி. இஸ்க்ராவாதிகளுக்கு விரோதி. காங்கிரஸிற்குப் பிறகு மென்ஷெவிக். பக்கம் 103

கோக்கோஷ்கின் பியோதர் பியோதரவிச் (Kokoshkin) (1871-1918)—பூர்ஷ்வா அரசியல் தலைவர், கட்டுரையாளர். காடெட்டுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர், அதன் மத்தியக் கமிட்டி உறுப்பினர். 1907ம் ஆண்டு முதல், ''ரூஸ்கியே வேதமொஸ்தி'' (ருஷ்யச் செய்திகள்), ''பிராவோ'' (உரிமை), ''ரூஸ்காயா மீஸில்'' (ருஷ்யச் சிந்தனை) முதலிய மிதவாத வெளியீடுகளில் தீவிரமாகப் பங்காற்றியவர். 1917 பிப்ரவரியில் நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப் பின்னர் தாற்காலிக அரசாங்கத்தில் மந்திரி ஆனுர். பக்கங்கள் 47, 48, 49, 52, 61-62, 96, 98, 100, 101

கோல்ட்பிளாட் (Goldblatt) (மேதெம் விளாதீமிர் டாவீடவிச்) (1879-1923)—''பூந்த்'' ஸ்தாபனத் தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு போலந்தில் ''பூந்த்'' ஸ்தாபனங்களின் தலைவர் ஆனுர். 1921ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் குடியேறினுர். பக்கங்கள் 88, 89, 94

கோல்யுபாக்கின் அலெக்ஸாந்தர் மிஹாய்லவிச் (Kolyubakin) (1868-1915)—ருஷ்ய பூர்ஷ்வா மிதவாதி, காடெட்டு. பக்கம் 47

செர்னிஷேவ்ஸ்க்கிய் நிக்கொலாய் கவ்ரீலவிச் (Chernyshewsky) (1828-1889) —ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, கற்பனுவாத சோஷலிஸ்ட், நூலறிஞர், எழுத்தாளர், இலக்கிய விமர்சகர். ருஷ்ய சோஷல்-டெமாகிரஸியின் பிரபல முன்னேடிகளில் ஒருவர். ருஷ்யாவில் 1860க்களில் நடந்த புரட்சிகர ஜனநாயக இயக்கத்தின் கொள்கைவாதியாக

வும் பெருந்தலைவராகவும் திகழ்ந்தார் செர்னிஷேவ்ஸ்க்கிய். பக்கம் 68

**ஷெத்ரீன் (ஸால்த்திக்கோவ் ஷெத்ரீன், மிகாயீல் யெவ்கிராபோவிச்)** *(1828-1889)*—ருஷ்ய நையாண்டி எழுத்தாளர், புரட்சிகர ஜனநாயகவாதி. பக்கம் 47

**ஸவேன்கோ அனத்தோலிய் இவானவிச்** (Savenko) *(பிறப்பு 1874)* —பூர்ஷ்வா தேசீயவாதி, கட்டுரையாளர், பெரு நிலப்பிரபு. ''நோவொயே வ்ரேம்யா'' (புதிய காலம்) ''கீயெவ்லியானின்'' (கீயெவ் நகரவாசி) என்ற கறுப்பு நூற்றுவர் செய்தித்தாள்களில் பணியாற்றினார். பக்கம் 50

**ஸெம்கோவ்ஸ்க்கிய்** (Semkovsky) **(ஸெம்யோன் யூலியெவிச் புரோன்ஷ்டைன்)** *(பிறப்பு 1882)*—ருஷ்ய சோஷல்-டெமாகிராட், மென்ஷெவிக். அனேக மென்ஷெவிக் செய்தித்தாள்களுக்கு விஷயதானம் செய்தார். தேசீயப் பிரச்சினையிலும் பிற பிரச்சினைகளிலும் ஸெம்கோவ்ஸ்க்கிய் மேற்கொண்ட நிலையை வி. இ. லெனின் தமது பல கட்டுரைகள், நூல்களில் கடுமையாகத் தாக்கி விமர்சித்தார். 1920ல் ஸெம்கோவ்ஸ்க்கிய் மென்ஷெவிக்குகளுடன் தொடர்பைத் துணித்துக்கொண்டார். பக்கம் 7,8,16,33,43,44,65,84, 95,96,97,99

**ஸ்டிர்னர் மாக்ஸ்** (Stirner) **(காஸ்பார் ஷ்மிட்)** *(1806-1856)* —ஜெர்மன் தத்துவவாதி. பூர்ஷ்வாத் தனித்துவவாதம், அராஜகவாதம் ஆகியவற்றின் சித்தாந்தகர்த்தர்களில் ஒருவர். பக்கம் 74

**ஸ்துரூவே, பியோத்தர் பெர்ன்ஹார்டவிச்** (Struve) *(1870-1944)* —ருஷ்ய பூர்ஷ்வாப் பொருளாதார அறிஞர், கட்டுரையாளர். 1890க்களில் ''சட்டபூர்வ மார்க்ஸீயத்தின்'' பிரபல பிரதிநிதி. பின்னர் காடெட்டுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். பக்கம் 69

**ஹனேஸ்க்கி யாக்கவ் ஸ்தானிஸ்லாவவிச்** (Hanecki) *(1879-1937)*—போலிஷ், ருஷ்யப் புரட்சி இயக்கத்தின் பிரபல தலைவர். 1896முதல் சோஷல்-டெமாகிரடிக் கட்சியின் உறுப்பினர். போலிஷ், லித்துவேனிய ராஜ்யத்தில் சோஷல்-டெமாகிரடிக் கட்சியின் அனேகக் காங்கிரஸ்களில் பங்குகொண்டவர். ரு. சோ. டெ. தொ. கட்சியின் 2வது, 4வது, 5வது காங்கிரஸ்களிலும் கலந்துகொண்டார். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு பொறுப்புவாய்ந்த வேலை பார்த்தார். பக்கங்கள் 85-86

ஹன்கேவிச் நிக்கொலாய் (Hankiewicz) *(பிறப்பு 1869)*—*உக்ரேனிய (காலீஷிய) சோஷல்-டெமாகிரடிக் தொழிலாளர் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர், அதன் தலைவர், தேசீயவாதி. உக்ரேனியா பூர்ஷ்வா போலந்துடன் இணைக்கப்படுவதை ஆதரித்துப் பிரசாரம் செய்தார். பக்கம் 28*

ஹெக்கர் எமீல் (Haecker) *(1875-1934)* — *போலிஷ் சோஷலிஸ்ட் கட்சியின் வலதுசாரி உறுப்பினர். 1894முதல் அனேகமாக நாற்பது ஆண்டுக்காலம் க்ராக்கோவ் சோஷலிஸ்ட் செய்தித்தாள்* Naprzod *(''முன்னேக்கி'') என்பதன் ஆசிரியராக இருந்தார். 1906-1919 ஆண்டுகளில் போலிஷ் சோஷல்-டெமாகிரடிக் கட்சித் தலைமைக் குழுவின் உறுப்பினராக இருந்தார். இரண்டாவது இன்டர்நேஷனலின் பல காங்கிரஸ்களில் கலந்துகொண்டார். பக்கம் 66*

தன்த்ஸோவ் த்மித்ரோ (Dontsov)—*குட்டி பூர்ஷ்வா உக்ரேனிய சோஷல்-டெமாகிரடிக் தொழிலாளர் கட்சி உறுப்பினர். முதல் உலக யுத்தத்தின் போது (1914-1918) ''உக்ரேனிய விடுதலைச் சங்கம்'' என்னும் தேசீயவாத ஸ்தாபனத்தை உருவாக்கியவர்களில் ஒருவர். ஆஸ்திரிய முடியரசின் உதவியுடன் ''சுதந்திர'' உக்ரேய்னு என்னும் கோஷத்தைச் செயலாக்க முயன்றது இந்த ஸ்தாபனம். பக்கம் 41,42*

த்ராகமானவ் மிகயீல் பெத்ரோவிச் (Dragomanov) *(1841-1895)*—*உக்ரேனிய வரலாற்று அறிஞர், மானித வகையியல் அறிஞர், கட்டுரையாளர். பூர்ஷ்வா மிதவாதப் பிரதிநிதிகளில் ஒருவர். உக்ரேனியாவில் நடந்த தேசீய விடுதலை இயக்கத்தின் மிதவாதச் சாரியின் பெரும் தலைவர்களில் ஒருவர். கலாச்சார - தேசீயச் சுயநிர்வாகத்தை ஆதரித்தார். பக்கம் 68,69*

த்ருபெத்ஸ்கோய் யெவ்கேனிய் நிக்கொலாயெவிச் (Trubetskoi) *(1863-1920)*—*சிற்றரசர், ருஷ்ய பூர்ஷ்வா மிதவாதத்தின் கொள்கைவாதிகளில் ஒருவர். கருத்துமுதல்வாதத் தத்துவவாதி. 1906க்கு முன் காடெட்டாக இருந்தார். 1906ல் ''அமைதி நிறைந்த புத்தமைப்பு'' என்னும் சட்ட பூர்வ முடியரசுவாதக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர் ஆனார். 1905-1907ல் நடந்த முதல் ருஷ்யப் புரட்சியை ஒடுக்குவதில் த்ருபெத்ஸ்கோய் ஜாராட்சி அதிகாரிகளுக்கு உதவினார். முதல் உலக யுத்தக் காலத்தில் (1914-1918) ருஷ்ய ஏகாதிபத்தியத்தின் கொள்கைவாதிகளில் ஒருவர். பக்கம் 23*

த்ரோத்ஸ்கிய் (புரோன்ஷ்டைன்) லேவ் டாவீடவிச் (Trotsky)

*(1879-1940)*—லெனினீயத்தின் மிகக் கொடும் பகைவர். பிற்போக்கு ஆண்டுகளிலும் *(1907-1910)* புதிய புரட்சி எழுச்சிக் காலத்திலும் ''குழுப் பிரிவுகளுக்குப் புறம்பா யிருத்தல்'' என்ற முகத்திரை மறைவில் கலைப்புவாதி களின் போக்கையே எதார்த்தத்தில் கடைப்பிடித்தார். 1912ம் ஆண்டில் கட்சிவிரோத ஆகஸ்ட் கும்பலை அமைத் தார். முதல் உலக யுத்தக் காலத்தில் *(1914-1918)* நடு நிலைப் போக்கைக் கடைப்பிடித்தார், போர், சமாதானம், புரட்சி ஆகிய பிரச்சினைகளில் வி. இ. லெனினை எதிர்த்துப் போராடினார். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்கு முந்திய தறுவாயில் போல்ஷெவிக் கட்சியில் சேர்ந்து குழுப்பிரிவு கள் ஏற்படுத்தும் செயலைத் தீவிரமாக நடத்தினார். த்ரோத்ஸ்கிய்வாதம் கட்சியில் குட்டிபூர்ஷ்வாப் பிறழ்வு என்பதைக் கம்யூனிஸ்ட் கட்சி அம்பலப்படுத்திக் கொள்கை வாத வகையிலும் ஸ்தாபன ரீதியாகவும் அதை முறி யடித்தது. 1927ம் ஆண்டு த்ரோத்ஸ்கிய் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். 1929ம் ஆண்டு சோவியத் விரோத நடவடிக்கைகள் காரணமாக சோவியத் யூனியனிலிருந்து வெளியேற்றப்பட்டார். 1932ம் ஆண்டு அவரது சோவியத் குடிமை ரத்து செய்யப்பட்டது. பக்கங்கள் 91-92,99

**நெக்ராஸவ், நிக்கொலாய் விஸ்ஸரியோனவிச்** (Nekrasov) *(பிறப்பு1879)*—மூன்றாவது, நான்காவது அரசாங்க தூமாக் களின் உறுப்பினர், இடதுசாரிக் காடெட். 1917 பிப்ரவரி யில் நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப் பின்னர் தாற்காலிக அரசாங்கத்தில் மந்திரி ஆனார். பக்கம் 47

**பிஸ்மார்க் ஓட்டோ** (Bismark) *(1815-1898)* — சிற்றரசர், முடியரசுவாதி, பிரஷ்ய ராஜதந்திரி. 1871-1890ல் ஜெர் மன் சாம்ராஜ்யத்தின் முதல் அமைச்சர். பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மனியை வன்முறையில் ஒன்றிணைத்தார். சோஷலிஸ்டுகளுக்கு எதிரான பிரத்தியேகச் சட்டத்தை *(1878-1890)* இயற்றியவர். பக்கங்கள் 74

**பிளெஹானவ், கியோர்கிய் வலென்தீனவிச்** (Plekhanov) *(1856-1918)* — ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளர் இயக் கத்தின் சிறந்த தலைவர். ருஷ்யாவில் மார்க்ஸீயத்தின் முதல் பிரசாரகர். ரு. சோ. டெ. தொ. கட்சியின் 2வது காங்கிரஸுக்குப் *(1903)* பிறகு பிளெஹானவ் சந்தர்ப்ப வாதிகளுடன் சமரசம் செய்துகொள்ளும் போக்கைக் கடைப்பிடித்தார். அப்புறம் மென்ஷெவிக்குகளுடன் சேர்ந்து கொண்டார். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்கு எதிராக

இருந்தார். எனினும் சோவியத் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் பங்கு கொள்ளவில்லை. பக்கங்கள் 44, 84,85,89,94

**புரிஷ்கேவிச் விளாதிமிர் மித்ரபானவிச்** (Purishkevich) *(1870-1920)*—பெரு நிலப்பிரபு, முடியரசுவாதி, பிற்போக்காளர். புரட்சி இயக்கத்துக்கு எதிராக ஏவப்பட்ட கறுப்பு நூற்றுவர் கழகங்கள் அமைக்கப்படுவதை 1905 முதல் 1907 வரை அவர் முன்னின்று நடத்தினர். சோவியத் ருஷ்யாவில் அன்னிய இராணுவத் தலையீட்டின்போது உள்நாட்டுப் புரட்சி எதிர்ப்பைத் தீவிரமாக ஒழுங்கமைத்தவர்களில் ஒருவர். பக்கங்கள் 46,53,96,98,99,102

**புரூதோன் பியேர் ஜோஸேப்** (Proudhon) *(1809-1865)*—பிரெஞ்சுக் கட்டுரையாளர், பொருளாதார அறிஞர், சமூக இயலார், குட்டி பூர்ஷ்வாக் கொள்கைவாதி. அராஜகவாதத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். சிறு தனியுடைமையை நிலையாக வைத்திருக்கப் புரூதோன் ஆழ்ந்த விருப்பம் கொண்டிருந்தார். பெருத்த முதலாளித்துவ உடைமையைக் குட்டி பூர்ஷ்வா நோக்கு நிலையிலிருந்து அவர் தாக்கி விமர்சித்தார். வர்க்க முரண்பாடுகளின் தலையூற்று அரசே எனப் புரூதோன் கருதினர். அமைதியான வழியில் ''அரசை ஒழித்து அகற்றுவது'' என்ற கற்பனுவாதத் திட்டத்தை அவர் முன்வைத்தார். அரசியல் போராட்டத்தின்பால் எதிர்மறைப் போக்கைக் கடைப்பிடிக்குமாறு பிரசாரம் செய்தார்.

தேசீய இனங்கள் பற்றிய பிரச்சினையிலும் புரூதோனும் அவரைப் பின்பற்றியவர்களும் ஆழ்ந்த தவறான போக்கை மேற்கொண்டார்கள். ''சிறு தேசீய இனம்'', ''தேசீய இனம்'' என்பவை ''வழக்கொழிந்த தப்பெண்ணங்கள்'' என்று புரூதோனீயவாதிகள் கூறினார்கள். ஒடுக்கப்பட்ட மக்களின் தேசீய விடுதலை இயக்கங்களை இக்காரணத்தால் அவர்கள் எதிர்த்தார்கள்.

''தத்துவத்தின் வறுமை'' என்ற நூலிலும் வேறு பல நூல்களிலும் கார்ல் மார்க்ஸ் புரூதோனீயச் சித்தாந்தத்தையும் அரசியல் நோக்குக்களையும் கடுமையாகத் தாக்கி விமர்சித்தார், அவற்றின் விஞ்ஞானக்கேடான, பிற்போக்குத் தன்மையை எடுத்துக் காட்டினர். பக்கங்கள் 74,75

**பெஷெஹோனவ் அலெக்ஸேய் வஸீலியெவிச்** (Peshekhonov) *(1867-1933)*—ருஷ்யாவின் பூர்ஷ்வாச் சமூகத் தலைவர், கட்டுரையாளர். 1906முதல் ''மக்கள் சோஷலிஸ்டுகள்''

என்ற குட்டி பூர்ஷ்வாக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1917ல் தாற்காலிக அரசாங்கத்தில் உணவு அமைச்சராக இருந்தார். 1922க்குப் பிறகு நாடு கடந்து வசிக்கலானார். பக்கம் 100

பெர்ன்ஹார்ட் லுத்விக் (Bernhard) *(1875-1935)* —ஜெர்மன் பொருளாதார அறிஞர், கட்டுரையாளர். பெர்லின், கீல் முதலிய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர். போலிஷ்-பிரஷ்ய அரசியல் பற்றிய பிரச்சினைகளைச் சிறிது காலம் ஆராய்ந்தார். போலந்துவாசிகளை ஜெர்மானியர்கள் ஆக்குவதற்கு ஆதரவாளராக இருந்தார். பக்கம் 101

பொம்யாலோவ்ஸ்க்கிய் நிக்கொலாய் கெராஸிமவிச் (Pomyalovsky) *(1835-1863)*—ருஷ்ய எழுத்தாளர், டெமாகிராட். எதேச்சாதிகார-அதிகாரவர்க்க ருஷ்யாவின் வழக்கபழக்கங்களையும் வன்முறைகளையும் தான்தோன்றித்தனத்தையும் தமது நூல்களில் தாக்கினார். பக்கம் 93

பௌவர் ஓட்டோ (Bauer) *(1882-1938)*—ஆஸ்திரிய சோஷல்-டெமாகிரஸி, இரண்டாவது இன்டர்நேஷனல் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். ''ஆஸ்த்ரோமார்க்ஸீயம்'' எனப்பட்டதன் கொள்கைவாதி. இது சீர்திருத்தவாதத்தின் ஒரு வகையே ஆகும். ''கலாச்சார-தேசீயச் சுயநிர்வாகம்'' என்னும் பூர்ஷ்வா தேசீயவாதச் சித்தாந்தத்தை உருவாக்கியவர்களில் பௌவர் ஒருவர். இந்தச் சித்தாந்தத்தின் சந்தர்ப்பவாதக் கருத்தை வி. இ. லெனின் பல முறை அம்பலப்படுத்தினார். பக்கங்கள் 10,11,12

மாஜினி ஜுஸெப்பே (Mazzini) *(1805-1872)*—பிரபல இத்தாலியப் புரட்சிக்காரர், பூர்ஷ்வா டெமாகிராட். இத்தாலிய தேசீய விடுதலை இயக்கத்தின் தலைவர்கள், கொள்கைவாதிகளில் ஒருவராக இருந்தார். பக்கம் 73

மாஸேப்பா இவான் ஸ்தெப்பானவிச் (Mazepa) *(1644-1709)* —உக்ரேனியப் படைத் தலைவர். ருஷ்யாவிலிருந்து உக்ரேய்னைவைத் தனிப்பிரித்துவிடுவது பற்றிப் போலந்து அரசனுடனும் பின்னர் ஸ்வீடன் அரசனுடனும் துரோகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். ருஷ்யாமீது ஸ்வீடன்காரர்களின் படையெடுப்பின்போது (1708) அவர்கள் தரப்புக்கு மாறிவிட்டார். போல்த்தாவா என்னும் இடத்தின் அருகே 1709ல் ஸ்வீடிஷ் படைகள் முறியடிக்கப்பட்டபின் மாஸேப்பா 12வது கார்ல் அரசருடன் துருக்கிக்குத் தப்பியோடினார். அங்கே விரைவிலேயே இறந்துபோனார். பக்கம் 49

மார்க்ஸ் கார்ல் (Marx) *(1818-1883)* — பக்கங்கள் 18,19, 68,69,71,72—73,74,75,76,77,79,80,81

**மார்த்தவ் லேவ்** (Martov) **(ஸெதெர்பௌம் யூலிய் ஓஸிப்பவிச்)** *(1873-1923)* — *மென்ஷெவிஸத்தின் தலைவர்களில் ஒருவர். ரு. சோ. டெ. தொ. கட்சியின் 2வது காங்கிரஸில் (1903) சந்தர்ப்பவாதச் சிறுபான்மையினருக்குத் தலைமை தாங்கினார். அது முதல் மென்ஷெவிஸத்தின் மிகப் பிரபலக் கொள்கைவாதியாக விளங்கினார். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியின் பகைவர் ஆனார். 1920ல் வெளிநாடுகளில் குடியேறினார். பக்கங்கள் 96,97*

**மார்த்தினவ் (அலெக்ஸாந்தர் ஸமோய்லவிச் பீக்கெர்)** (Martynov) *(1865-1935) ''பொருளாதாரவாதிகளின்'' ஒரு தலைவர். பிரபல மென்ஷெவிக். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு மென்ஷெவிக்குகளை விட்டுவிட்டு 1923ல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். பக்கம் 88,89*

**மொகில்யான்ஸ்கிய் ம. ம.** (Mogilyansky) *(1873-1942)— வழக்குரைஞர், கட்டுரையாளர். 1906 முதல் காடெட் கட்சியில் சேர்ந்தார். அதன் மைய வெளியீடான ''ரேச்'' (''பேச்சு'') என்ற செய்தித்தாளில் உடனுழைத்தார். உக்ரேனியப் பிரச்சினை பற்றி அதில் எழுதினார். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பின் காடெட் கட்சியிலிருந்து விலகிவிட்டார். பக்கங்கள் 40,41,42*

**யுர்க்கேவிச் லேவ்** (Yurkevich) *(1885-1918) —உக்ரேனிய பூர்ஷ்வா தேசீயவாதி, சந்தர்ப்பவாதி. 1913-1914 ஆண்டுகளில் மென்ஷெவிக் போக்குள்ள ''த்ஸ்வின்'' (''மணி'') என்ற தேசீயவாதச் சஞ்சிகையில் தீவிரமாக ஒத்துழைத்தார். யூர்க்கேவிச் தேசீயவாத பிலிஸ்டைன் என்றும் ''மிகவும் கீழ்த்தரமான, முட்டாள்தனமான, பிற்போக்கான தேசீயவாதத்தின்'' பிரதிநிதி என்றும் லெனின் அவரைக் கடுமையாகத் தாக்கி விமரிசித்தார். பக்கங்கள் 7,8,16, 43,53,65,84,94,97*

**ரேகெர், ததேவுஷ்** (Reger) *(1872-1938)—காலீஷிய, ஸைலேஷியப் போலிஷ் சோஷல்-டெமாகிரடிக் கட்சி உறுப்பினர். பத்திரிகை எழுத்தாளர். 1911 முதல் 1917 வரை ஆஸ்திரியப் பாராளுமன்ற உறுப்பினர். பக்கம் 28*

**ல. விளா. (ல. விளாதிமிரவ்)** (Vladimirov) **(ஷேய்ன்பீன்க்கெல் மிரோன் கான்ஸ்தாந்தினவிச்)** *(1879-1925)—இவர் ருஷ்ய சோஷல்-டெமாகிராட், போல்ஷெவிக். 1903க்குப் பிறகு ரு. சோ. டெ. தொ. கட்சியின் உறுப்பினர். 1911ல் போல்ஷெவிக்குகளிடமிருந்து விலகிவிட்டார். பிற்*

பாடு பிளெகானவ் ஆதரவாளர்களின் பாரிஸ் குழுவைச் சேர்ந்தார். இந்தக் குழு ''ஸா பார்த்தியு'' (''கட்சியின் பொருட்டு'') என்ற செய்தித்தாளை வெளியிட்டது. 1917 பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப்பின் ருஷ்யா திரும்பினார். போல்ஷெவிக் கட்சியின் 6 வது காங்கிரஸில் கட்சியில் அனுமதிக்கப்பட்டார். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு பல பொறுப்புள்ள பதவிகள் வகித்தார். பக்கங்கள் 35,80

**லஸ்ஸால் பெர்டினண்ட்** (Lassalle) *(1825 - 1864)*—ஜெர்மன் குட்டி பூர்ஷ்வா சோஷலிஸ்ட். அகில ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தை நிறுவியவர்களில் ஒருவர் (1863). இந்தச் சங்கம் நிறுவப்பட்டது தொழிலாளர் இயக்கத்துக்குச் சாதகமான முக்கியத்துவம் கொண்டிருந்தது. ஆனால் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லஸ்ஸால் அதைச் சந்தர்ப்பவாதப் பாதையில் இட்டுச் சென்றார். லஸ்ஸாலின் சித்தாந்த, அரசியல் கண்ணோட்டங்களை மார்க்ஸும் எங்கெல்ஸும் கடுமையாக விமர்சித்தனர். பக்கம் 19

**லபார்க் போல்** (Lafargue) *(1842-1911)*— பிரெஞ்சு, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபல தலைவர். திறமைசான்ற கட்டுரையாளர். பிரான்ஸில் விஞ்ஞானக் கம்யூனிஸத்தை முதன்முதல் பின்பற்றியவர்களில் ஒருவர். கார்ல் மார்க்ஸ், பிரீட்ரிஹ் எங்கெல்ஸ் இருவரதும் நெருங்கிய நண்பர், போராட்டத் துணைவர். இரண்டாவது இன்டர்நேஷனலில் சந்தர்ப்பவாதத்தை லபார்க் தீவிரமாக எதிர்த்துப் போராடினார். அரசியல் பொருளாதாரம், தத்துவம், வரலாறு, மொழி இயல் ஆகிய துறைகளில் மார்க்ஸீயக் கருத்துக்களை லபார்க் தமது பெருந்தொகையான கட்டுரைகளில் பரப்பியும் ஆதரித்தும் வந்தார். சீர்திருத்தவாதத்தையும் திரிபுவாதத்தையும் எதிர்த்துப் போராடினார். ஆயினும் லபார்கின் கட்டுரைகள் தவறான சித்தாந்த வரையறுப்புக்களிலிருந்து விடுபட்டவை அல்ல. விவசாயிகளையும் தேசிய இனங்களையும் பற்றிய பிரச்சினைகளிலும் சோஷலிஸப் புரட்சியின் கடமைகள் பற்றிய பிரச்சினையிலும் இத்தகைய தவறுகள் அவருடைய கட்டுரைகளில் காணப்படுகின்றன. பக்கம் 74

**லீபெர் (கோல்ட்மான்) மிஹயீல் இஸாக்கவிச்** (Lieber [Goldman]) *(1880 - 1937)*—''பூந்த்'' ஸ்தாபனத்தின் தலைவர்களில் ஒருவர். ரு. சோ. டெ. தொ. கட்சியின் 2வது காங்கிரஸில் (1903) ''பூந்த்'' பிரதிநிதிக் குழுவுக்குத் தலைமை தாங்கினார். இஸ்க்ராவாதிகளுக்கு எதிரான கடைக்கோடி

நிலையை மேற்கொண்டார், காங்கிரஸுக்குப் பிறகு—மென்ஷெவிக். பக்கங்கள் 88,89

லீப்மன் (Liebman) என்பது ஹேர்ஷ் பெய்ஸாஹ் (பிறப்பு 1882) என்பவரின் புனைபெயர். பிரபல பூந்த்க்காரர். 1911ல் ''பூந்த்'' ஸ்தாபனத்தின் மத்தியக் கமிட்டி உறுப்பினர், கலைப்புவாதிகளுடன் சேர்ந்து கொண்டார். முதல் உலக யுத்த ஆண்டுகளில் (1914-1918) ஜாரிஸத்தின் நாடு பிடிக்கும் கொள்கையை ஆதரித்தார். பக்கங்கள் 7, 8,16,43,44,53,65,94,95,97,103

லுக்ஸம்பர்க் ரோஸா (Zuxemburg) (1871-1919) —ஜெர்மன், போலிஷ், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபல தலைவி. இரண்டாவது இன்டர்நேஷனலின் இடதுசாரித் தலைவர்களில் ஒருவர். ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர். லெனின் ரோஸா லுக்ஸம்பர்கை வெகுவாக மதித்தார் எனினும் அவரது தவறுகளைப் பல முறை கண்டித்து விமர்சித்து, அவர் சரியான நிலையை மேற்கொள்ள அதன்மூலம் உதவினார். பக்கங்கள் 7,8,10, 11,13,14, 17,18, 20,21, 23, 25, 26,28,32,33,34,37,38, 42,48, 50,55, 56,59, 60,62,65,66,71,86,87,88,89,90, 91,99

லொப்பாத்தின் ஹெர்மன் அலெக்ஸாந்திரவிச் (Lopatin) (1845-1918)—பிரசித்திபெற்ற ருஷ்யப் புரட்சிக்காரர், நரோத்னிக். 1870க்களில் வெளிநாட்டில் வசித்தார். அப்போது மார்க்ஸ், எங்கெல்ஸ், இருவருடனும் நட்பு உறவு கொண்டிருந்தார். முதல் இன்டர்நேஷனலின் பொதுக் கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நி. பி. டேனியல்ஸன் என்பவருடன் சேர்ந்து மார்க்ஸின் ''மூலதனம்'' என்னும் நூலின் முதல் பாகத்தை ருஷ்ய மொழியில் பெயர்த்தார். புரட்சி நடவடிக்கைகளுக்காகப் பல முறை கைது செய்யப்பட்டார். 1905க்குப் பிறகு புரட்சி நடவடிக்கைகளிலிருந்து விலகிவிட்டார். பக்கம் 72

லோங்கே ஷார்ல் (Longuet) (1839-1903) — பிரெஞ்சுத் தொழிலாளர் இயக்கத் தலைவர், புரூதோன்வாதி. 1866-1867லும் 1871-1872லும் முதல் இன்டர்நேஷனலின் பொதுக் கவுன்சில் உறுப்பினராகவும் 1871ல் பாரிஸ் கம்யூன் உறுப்பினராகவும் இருந்தார். பாரிஸ் கம்யூனின் தோல்விக்குப் பிறகு இங்கிலாந்தில் குடியேறி 1880 வரை வசித்தார். அப்புறம் பிரான்ஸ் திரும்பி, பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியில் சந்தர்ப்பவாதப் போக்கான பாஸிபிலிஸ்டுகள் (சாத்தியவாதிகள்) குழுவுடன் சேர்ந்து கொண்டார். பக்கம் 74

**வார்ஸ்க்கி அடோல்ப்** (வார்ஷாவ்ஸ்க்கி அ. ஸ.) (Vorsky [Warszawski]) *(1868-1937)* — போலிஷ் புரட்சி இயக்கத்தின் பிரபல தலைவர். போலந்து ராஜ்யத்தின் சோஷல்-டெமாகிரடிக் கட்சியையும் பின்னால் போலந்து ராஜ்யம், லித்துவேனியா ஆகியவற்றின் சோஷல்-டெமாகிரடிக் கட்சியையும் நிறுவுவதில் ஊக்கத்துடன் உழைத்தார். போலிஷ் கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர், அதன் மத்தியக் கமிட்டி உறுப்பினர். பக்கங்கள் 85, 86

[library stamp]

## வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து, "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

- 5 MAR 1965
MADRAS

CCM

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

*41. பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.*

ஷோ-ரூம்

*136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.*

கிளைகள்

*80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.*
*87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.*
*சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008*
*செர்ரி ரோடு, சேலம்—636001.*

விற்பனை நிலையங்கள்

*3-22-75-D மதுரை சாலை,*
*திருநெல்வேலி ஜங்ஷன்.*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.*

**В. И. Ленин**

**О ПРАВЕ НАЦИЙ НА САМООПРЕДЕЛЕНИЕ**

*на тамильском языке*

**Lenin V. I.**

**THE RIGHT OF NATIONS TO SELF-DETERMINATION**

*in Tamil*